Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 20 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

அற்புதன் அச்சகம்

அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811

373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு – 05 திருவள்ளுவர் ஆண்டு 2046 மாசி 27 புதன்கிழமை (11.03.2015) பக்கங்கள் 20 ஓசை – 162

## மத்தியவங்கி ஆளுநர் பதவி விலகவேண்டும்

### வலுவடைகிறது கோரிக்கை

பத்திரங்கள் கொடுக்கல் வாங்கல் நடவடிக்கையில் நம்பிக்கை அற்ற தன்மை ஏற்பட்டுள்ளதால் மத்திய வங்கி ஆளுநர் அர்ஜுன மகேந்திரன் பதவி விலக வேண்டும் என மக்கள் விடுதலை முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துநெத்தி தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மத்திய வங்கி ஒப்பந்தப் பத்திர மோசடி தொடர்பில் தற்போது ஊடகங்களில செய்தி வெளியாகியுள்ளமை சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. சில செய்திகள் திரிபுபடுத்தப்பட்டுள்ளன. இப்பிரச்சினை பொது மக்களுக்கு விளங்கிக் கொள்ள முடியாத தன்மையில் உள்ளது.

மத்திய வங்கி கோரியிருந்த 1000 மில்லியன் கடன் ஒப்பந்தப் பத்திரம் மத்திய வங்கி ஆளுநர் அர்ஜுன மகேந்திரனின் மருமகனுக்குச் சொந்தமான நிறுவனத்திற்குச் சென்றது எப்படி? 1000 மில்லியன் 10,000 மில்லியனாக அதிகரித்தது

(19) ஆம் பக்கம் பார்க்க

## சிறுவன் மரணம் யமனானது மாத்திரை

(யாழ்ப்பாணம்)

காய்ச்சல் மாத்திரை தொண்டையில் சிக்கியதில் 3 வயது பாலகன் ஒருவன் நேற்று முன்தினம் மாலை பரிதாபகரமாக உயிரிழந்துள்ளான்.

அச்சுவேலி மேற்கு தோப்பைச் சேர்ந்த கிருபாகன் அருண் (வயது-3) என்ற பாலகனே இவ்வாறு பரிதாபகரமாக மூச்சுத்திணறி உயிரிழந்துள்ளான்.

கடும் காய்ச்சலினால் பீடிக் கப்பட்ட இச்சிறுவனுக்கு மாத்திரையை குடிக்க கொடுத்த போது வழமைபோல் சிறுவனும் நோயின் இயலாமையுடன் மாத்திரையை முழுமையாக குடித்த போது அது தொண்டையில் சிக்கி மூச்சுத்திணறல் ஏற்பட்டுள்ளதாக மரணவிசாரணையின் போது உறவினர்களால் தெரிவிக்கப்பட்டது.

உடனடியாக அச்சுவேலி வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட போதிலும் சிறுவன உயிரிழந்துள்ளான்.

மரண விசாரணைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டுவரப்பட்ட சடலம் பிரேத பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. இச்சம்பவம் தொடர்பில் அச்சுவேலிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (இ)

# ஐ.நா.வுடன் இணங்கிப்போக அரசு விருப்பம்

(லண்டன்)

ஐக்கியநாடுகள் சபையுடன் நல்லெண்ணத்தை வளர்க்கவும் அதனுடன் இணங்கிப்போகவும் மிகுந்த ஒத்துழைப்புடன் செயற்படவும் நாம் விரும்புகின்றோம் இதன்மூலம் எமது நாட்டின் கீர்த்தியை மேலெளச் செய்ய முடியும் என்று நம்புவதுடன் மாறிவரும் உலக ஓட்டத்துக்கு ஈடுகொடுக்கக்கூடியவகையில் எம்மை தயார்ப்படுத்திக் கொள்ளவும் நாங்கள் முனைந்து வருகிறோம் என்றும் ஜனாதிபதி மைத்திரிபாலசிறிசேன தெரிவித்தார்.

தற்போதைய இலங்கை அரசாங்கத்தின் வெளிநாட்டுக் கொள்கை, அனைத்து நாடுகளினதும் உதவிகளைப் பெற்றுக கொள்ளும் வகையிலானதாகும் என்றும் இலங்கை அதன் அபிவிருத்திச் செயற்பாடுகளில் எல்லா நாடுகளினதும் ஒத்துழைப்பை எதிர்பார்க்கிறது என்றும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையுடன் நல்லெண்ணத்தை மேம்படுத்தும் செயன்முறையில் அரசாங்கம் ஈடுபட்டுவருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

நேற்று பிரித்தானியாவின் பாதுகாப்புத் தலைமையகத்தில் ஐக்கிய இராச்சியத்தின் பாதுகாப்பு இராஜாங்க செயலாளர்

(19) ஆம் பக்கம் பார்க்க



## படை வீரர் சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

பலாலி இராணுவ முகாமில் கடமையாற்றிய இராணுவ வீரர் ஒருவர் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சேதுவ ரன்ன பகுதியைச் சேர்ந்த பி.வி.பி அஜித்குமார (வயது -26) என்ற இராணுவ சிப்பாயே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நேற்று செவ்வாய்க்கிழமை

(19) ஆம் பக்கம் பார்க்க

## துப்பாக்கிச் சூட்டில் குடும்பஸ்தர் பலி

மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட திகிலிவெட்டைக் கிராமத்தில் நேற்று இரவு 6.30 மணியளவில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் குடும்பஸ்தர் ஒருவர் பலியாகியுள்ளதாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

திகிலிவெட்டைக் கிராமத்தைச் சேர்ந்த சிவலிங்கம் சுந்த

(19) ஆம் பக்கம் பார்க்க

## ஜெயக்குமாரி விடுதலை

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ், சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்டு தொடர்ந்து சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்களில் 8 பேர், நேற்று நிபந்தனையுடன் கூடிய, பிணையில் செல்ல கொழும்பு மஜிஸ்ரேட் நீதிமன்றம் அனுமதித்திருக்கின்றது என்று இந்த வழக்கு தொடர்பில் நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்த சட்டத்தரணிகளில் ஒருவராகிய மங்களேஸ்வரி சங்கர் தெரிவித்தார்.

இவர்களில் ஜெயக்குமாரி பாலேந்திரன் உட்பட 6 பெண்கள் அடங்குவர். இந்தப் பெண்களில் ஒரு பெண் தனது ஒன்றரை வயதுடைய குழந்தையுடன் சிறையில்

(19) ஆம் பக்கம் பார்க்க

விசேட செய்தி

## யாழ்.சிறையில் மர்ம மரணம்

(யாழ்ப்பாணம்)

விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த சந்தேக நபர் ஒருவர் நேற்று அதிகாலை உயிரிழந்துள்ளார்.

பாரதிபுரம் கிளிநொச்சியைச் சேர்ந்த தேவதாஸ் குணசீலன் (வயது-46) என்ற 5 பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த வியாழனன்று கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த இந்த குடும்பஸ்தர் நீண்டகால மதுப்பாவனையால் ஈரல் பாதிக்கப்பட்ட நிலையில் காணப்பட்டதாகவும் அவரின் குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர்.

நோயினால் பாதிக்கப்பட்ட நிலையில் பிரஸ்தாப சந்தேக நபர் வைத்தியசாலையில் நேற்று இரவு அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதுதொடர்பாக யாழ். பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (இ)

## தப்பியோடும் நோயாளிகள்

(யாழ்ப்பாணம்)

சிகிச்சைக்காக அனுமதிக்கப்படுவோரில் நாளொன்றுக்கு பத்து, பதினைந்து பேர்வரையில் நிர்வாகத்துக்கு தெரிவியாமலேயே வைத்தியசாலையில் இருந்து ஓடிவிடுவதாக யாழ். போதனாவைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் டாக்டர் ஸ்ரீ பவானந்தராஜா

(19) ஆம் பக்கம் பார்க்க



பிரித்தானியப் பிரதமர் கமருனுடன் கை குலுக்கும் மைத்திரி

## மாணவர்களின் ஏக்கம் புரிந்துகொள்ளாதது ஏன்?

### சந்திரகுமார் எம்.பி.கேள்வி

கிராமப்புற பாடசாலைகளில் ஆசிரியர்களின் வருகையை எதிர்பார்த்து ஏங்கித்தவிக்கும் மாணவர்களின் அவலங்களுக்கு இதுவரை தீர்வுகாணப்படவில்லை. கல்விக்காக ஏங்கிக்கொண்டிருக்கும் மாணவர்களின் உள்ளக் குமுறல்களை இதுவரை துறை சார்ந்தவர்கள் புரிந்துகொள்ளவில்லை என நாடாளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதித் தலைவருமான மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார் நேற்று ஆழியவளையில் ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினர்களின் பன்முகப்படுத்தப்பட்ட நிதி மூலம் கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களை பயனாளிகளுக்கு வழங்கி உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார் அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

(19) ஆம் பக்கம் பார்க்க

# விளையாட்டாக நஞ்சருந்திய மாணவன் பரிதாப மரணம்

விளையாட்டாக நஞ்சு அருந்திய மாணவன் ஒருவன் சிகிச்சை பலனின்றி பரிதாபகரமாக உயிரிழந்துள்ளான்.

அரியாலை மலர்மகள் வீதியைச் சேர்ந்த இராமேஸ்வரன் குலதீபன் (வயது-17) என்ற கல்வி பொதுதராதர சாதார ணதர பரீட்சை எழுதிய மாணவனே இவ்வாறு பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

கடந்த 24 ஆம் திகதியன்று வீட்டில் இருந்த களைகிருமி நாசினியை சிறிதளவு அருந்தியுள்ளதாகவும் அது விளையாட்டாக மேற்கொண்டிருக்கலாம் எனவும் விசாரணையின் போது உறவினர்கள் தெரிவித்திருந்தனர்.

யாழ்.போதனா வைத்திய சாலையில் அவரச சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்துள்ளான்.

இச்சம்பவம் தொடர்பில் யாழ்.பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டதுடன் மரண விசாரணையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. (இ)

# கல்வி புகட்டும் ஆசிரியர்களை போராடத் தூண்டாதீர்கள்

## இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் மாகாணசபையிடம் கோரிக்கை

(கொழும்பு)

ஆசிரியர்களைப் போராடத் தூண்டாதீர்கள் என இலங்கைத் தமிழர் ஆசிரியர சங்கம் உடனடியாக தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக சங்கம் அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, தமிழர் ஆசிரியர் சங்கம் வடமாகாண கல்வி அமைச்சுக்கு

முறையான ஆசிரிய இடமாற்றத்திற்கு உட்பட்டு குறித்த வலயக் கல்விப் பணிப்பாளர்களின் விடுவிப்புடன் இடமாற்றத்திற்குத் தகுதிபெறும் ஆசிரியர்களுக்கு இடமாற்றம் வழங்குங்கள்.

அதனை விடுத்து ஆசிரியர்களை, குறிப்பாக பெண் ஆசிரியர்களை துன்பப்படுத்தி இரவு வேளைவரை காத்திருக்க வைத்து போராடத் தூண்டாதீர்கள்.

இடமாற்றம் என்பது போராடிப்பெறுவதல்ல. ஸ்தாபன விதிக்கோவையின் பிரகாரம் குறித்த காலங்களுக்குள் அவர்களின் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு இடமாற்றம் வழங்கப்படவேண்டும்.

முறையான திட்டமில்லாமல் மாகாணக் கல்விப் பணிப்பாளர் நடந்து கொள்வதனை நாம் பல முறை சுட்டிக்காட்டியுள்ளோம்.

சேவைக்காலங்களை நிறைவு செய்த ஆசிரியர்களுக்கு இடமாற்றம் வழங்குங்கள் என்பதனையும் நாம் வலியுறுத்தி வருகின்றோம். அதிலும் பதிலாசிரியரின்றி வலயக் கல்விப் பணிப்பாளர்களால் விடுவிக்கப்படவர்களை இதுவரைகாலமும் ஏன் விடுவிக்கவில்லை. ஆசிரிய வெற்றிடமுள்ள இடங்களுக்கு விண்ணப்பித்த ஆசிரியர்களுக்குக்கூட மாகாணக் கல்விப் பணிப்பாளர் இதுவரை இடமாற்றம் வழங்காததனை நாம் பல முறை உங்களிடம் சுட்டிக்காட்டியுள்ளோம்.

நேற்று முன்தினம் நடைபெற்ற சம்பவம் ஒட்டுமொத்த ஆசிரியர்களுக்கும் இழைக்கப்பட்ட அநீதியும், அநாகரிகமுமாகும். அது எம்எல்லோரையும் வெகுவாகப் பாதித்துள்ளது.

அரசியல் தலையீடு இல்லாத கல்வியை நாம் பலமுறை வலியுறுத்தி வருகின்றோம். இனிமேலும் இத்தகைய செயற்பாடுகள் நடைபெறாமல் இருக்க சட்டவிதிகளுக்கு உட்பட்டு அதிகாரிகள் செயற்படுவதனை உறுதிசெய்யுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

பொருத்தமில்லாமல் அரசியல்வாதிகள் இடமாற்ற வாக்குறுதிகள் வழங்குவதனை தடுத்து நிறுத்துமாறு கேட்டுக் கொள்கின்றோம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மாணவன் கௌரவிப்பு

இலங்கைப் போக்குவரத்துச் சபையின் யாழ்.சாலை ஊழியர் நலன்புரிச் சங்கத்தினால் பொதுப் பரீட்சையில் உயர்சித்தி பெற்ற சாலை ஊழியர்களின் பிள்ளைகளுக்கான கௌரவிப்பு விழா யாழ். சாலையின் முகாமையாளர் செ.குணபால செல்வம் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக இலங்கைப் போக்குவரத்துச் சபையின் வடபிராந்திய முகாமையாளர் எஸ்.அஸ்கரும் சிறப்பு விருந்தினராக கோப்பாய் ஆசிரிய கலாசாலை பிரதி அதிபர் ச.லலீசனும் கௌரவ விருந்தினராக யாழ். சாலையின் முன்னாள் பொறியியலாளர் க.குமாரகுலசிங்கமும் கலந்து கொண்டனர்.

தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சையில் வெட்டுப் புள்ளிகளுக்கு மேற்பெற்றவர்களும், க.பொத.சாத்தாரணதரப் பரீட்சையில் 7ஏ சித்திக்கு மேற்பெற்றவர்களும் உயர்தரப் பரீட்சையின் ஊடாகப் பல்கலைக் கழக அனுமதி பெற்றவர்களும் அவர்களுடைய பெற்றோரும் பாராட்டுப் பத்திரம் வழங் கியும் பொற்கிழி வழங்கியும் கௌரவிக்கப்பட்டனர்.

"அறிவுப் பொருளாதாரத்தை நோக்கிய பயணம்" என்ற பொருளில் சிறப்பு விருந்தினர் சிறப்புரையாற்றினார்.



நீரவேலி, மாசுவன் சந்தியிலிருந்து புன்னாலைக்கட்டுவன் செல்லும் அச்செழு வீதி நீண்ட காலமாக குன்றும் குழியுமாக சேதமடைந்து காணப்பட்ட நிலையில் தற்போது புனரமைப்பு செய்யும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (85)

# தீகாயங்களுக்குள்ளான குடும்பப்பெண் மரணம்

(யாழ்ப்பாணம்)

தீக்காயங்களுடன் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட குடும்பப் பெண்ணொருவர் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்துள்ளார்.

கொற்றாவத்தை பொலிகண்டியைச் சேர்ந்த அன்பழகன் அமுதா (வயது-43) என்ற மூன்று பிள்ளைகளின் தாயே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கடந்த 3 ஆம் திகதியன்று பகல் வேளையில் தனது வீட்டில் தீயில் எரிந்த நிலையில் கணவனால் மீட்கப்பட்டு யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். இதன் போது கணவனும் சிறு எரிகாயங்களுக்கு உள்ளாகியிருந்தார்.

நேற்று மரண விசாரணையின் பின்னர் உறவினர்களிடம் சடலம் கையளிக்கப்பட்டது. (இ,18)

# முன்னெச்சரிக்கை கோபுரம் பரிசோதித்தல்

(யாழ்ப்பாணம்)

அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்திற்கிணங்க யாழ்.மாவட்டத்தில் ஊடுத்துறை மணற்காடு, வல்வெட்டித்துறை சுப்பர்மடம் நெடுந்தீவு ஆகிய பிரதேசங்களில் அமைந்துள்ள முன்னெச்சரிக்கை கோபுரங்களை இன்றும் நாளையும் பரிசோதனை செய்ய வேண்டியிருப்பதால் இதுதொடர்பில் பொதுமக்கள் அமைதியாக இருக்குமாறும் இது பரீட்சார்த்த செயற்பாடு என்பதால் எவரும் குழப்பமடையத் தேவையில்லை எனவும் பொது மக்களுக்கு யாழ்.அரச அதிபர் அறிவித்துள்ளார்.

# தனிநடிப்பு போட்டிக்கான அரங்கக் களப்பயிற்சிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாநகர சபையும் செயல் திறன் அரங்க இயக்கமும் இணைந்து நடத்தும் தனிநடிப்புப் போட்டிக்கான தொடர அரங்கக் களப்பயிற்சிகள் நடைபெறுகின்றன. இதுவரையில் 11 பாடசாலைகளைச் சேர்ந்த எழுபது மாணவர்களுக்கு மூன்று களப்பயிற்சிகள் நடைபெற்றன.

இந்தக் களப்பயிற்சியில் யதார்த்த நடிப்பு, தனிமொழி, முகமூடி நடிப்பு, நிழல்கள் மற்றும் விஷேட விளைவுகளை அடிப்படையாகக் கொண்ட நடிப்பு போன்ற பல்வேறு விடையங்களில் அறிமுகப்பயிற்சிகள் வழங்கப்பட்டன.

இதன் தொடர்ச்சியாக நான்காவது களப்பயிற்சி நாளையும் நாளை மறுதினமும் திறந்த போட்டியில் பங்குபற்றுபவர்களுக்காக நடைபெறவுள்ளது. அதனைத் தொடர்ந்து 14, 15 திகதிகளில் வேலணை மகாவித்தியாலயம், வரணி மகாவித்தியாலயம் மற்றும் வல்லை சிவகுரு மகாவித்தியால மாணவர்களுக்கான களப்பயிற்சிகள் நடைபெறவுள்ளன.

இதனைத் தொடர்ந்து எதிர்வரும் 19ஆம் திகதி தொடக்கம் 22 திகதி வரை முதலாம் சுற்றுப் போட்டிகள் யாழ் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளன. இறுதியாக ஏப்ரல் மாதம் 11ஆம் மற்றும் 12ஆம் திகதிகளில் பிரமாண்டமான ஓராள் அரங்கத் திருவிழா நல்லூரில் நடைபெறவுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

## DD TV யின் இன்றைய நிகழ்ச்சிகள்

| TIME | புதன்கிழமை |
|---|---|
| Am 05.00 | ஆலய தரிசனம் (பக்திப் பாடல்கள்) |
| Am 07.00 | காலைக் கதிர் |
| Am 08.00 | நாளிதழ் நேரம் |
| Am 09.00 | கொஞ்சம் கலாட்டா |
| Am 09.55 | காலை செய்திகள் |
| Am 10.00 | ஆரோகனம் |
| Am 10.30 | சிரிக்க சிரிக்க |
| Am 11.30 | அதிர்வுகள் |
| PM 12.30 | Hello DD |
| PM 01.00 | மதிய செய்திகள் |
| PM 01.30 | திரைப்படம் |
| PM 03.55 | மாலை செய்திகள் |
| PM 04.00 | மழலைகள் |
| PM 05.00 | சிரிக்க சிரிக்க |
| PM 06.00 | நாளிதழ் நேரம் |
| PM 07.00 | அதிர்வுகள் |
| PM 08.00 | பிரதான செய்திகள் |
| PM 08.30 | Hello DD |
| PM 09.00 | திரைப்படம் |
| PM 11.30 | நீங்காத நினைவுகள் |

# ரயர் வெடித்து இருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலியில் கன்ரர் வாகனத்தின் வாகன ரியூப் வெடித்ததில் அதன் பின்புறத்தில் இருந்து பயணித்த இருவர் தூக்கி வீசப்பட்டதில் படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவத்தில் வவுனியா மரக்கரம்பளையைச் சேர்ந்த எஸ்.சயந்தன் (வயது-23) வி.பிரசாந்த (வயது (21) என்ற இரு இளைஞர்களுமே இவ்வாறு தூக்கி வீசப்பட்டு படுகாயமடைந்துள்ளனர்.

அச்சுவேலி இராச வீதியில் இச்சம்பவம் நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளது. மின்சார சபையின் ஒப்பந்த வேலை செய்யும் நிறுவனம் ஒன்றின் வேலையாட்களே இவ்வாறு வாகனத்தில் சென்ற வேளை இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.



(கோப்புப்படம்)

இவ்விபத்துச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ)

# பெண்கள் அரசியலில் ஈடுபடுவதன் மூலம் உரிமைகளைப் பெற்றுக்கொள்ள முடியும்



(யாழ்ப்பாணம்)

மகளிர் அமைப்புகளின் மூலம் பெண்கள் தமது உரிமைக்காக போராடவேண்டும். அதுமட்டுமன்றி பெண்கள் அரசியலில் ஈடுபடுவ தன் மூலம் தமக்கான உரிமை களை பெற்றுக்கொள்ள முடியும் என யாழ்.மாவட்ட செயலர் சுந்த ரம் அருமைநாயகம் தெரிவித் தார்.

யாழ்சமூகசெயற்பாட்டு மையத் தின் ஏற்பாட்டில் யாழ்வீரசிங்கம் மண்டபத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற மகளிர்தின நிகழ் வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றுகையி லேயே அவர் இவ்வாறு தெரி வித்தார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக் கையில்,

நீங்கள் சமுதாயத்துடன் இணை வதென்றால் அரசியல் கலந்த சமுதாயமாக மாறவேண்டும் அதற் காக நீங்கள் போராடவேண்டும். அதன் மூலம் தான் உங்களது பலமும் அதிகரிக்கும்.

பெண்களைப் பொறுத்தளவில் அரசியல் உரிமை என்பது மிகமிக முக்கியமானது. இவ்வாறான சந் தர்ப்பத்தில் தான் உங்களது பலம், அதிகாரம் என்பன அதி கரிக்க வாய்ப்புள்ளது.

பெண்களின் உரிமைகள் இங்கு சரியாக வழங்கப்படவில்லை என் பது தான் உண்மை. இல்லை என் றால் ஏன் இவ்வாறு நிகழ்வு களையும் போராட்டங்களையும் நடாத்துகிறார்கள்.

அரசைப் பொறுத்தவரையில் மகளிர் விவகார அமைச்சு என்ற அமைச்சு உருவாக்கப்பட்டு மகளி ரின் தேவைகள், குறைகளையும் அறிந்து செயலாற்ற முடிந்துள் ளது.

எமது மாவட்டத்தைப் பொறுத்த வரையில் 3 இலட்சம் பெண் கள் உள்ளனர். இது மாவட் டம் சார்ந்த தொகையில் 50 வீதம். இதில் 28 ஆயிரம் விதவைகளும் இருக்கிறார்கள்.

இந்நிலையில் இவர்களுக்கான உரிமைகள் மறுக்கப்படுகின்ற போது தட்டிக்கேட்பதற்காக போரா டுகின்ற பொறுப்பு உங்களுக்கு உள்ளது.

தற்போது பாதிக்கப்பட்ட பெண் களுக்காக சிறப்பு இல்லம் ஒன்றை அமைக்கிறோம். அதே போல் யாழ்.ஊர்காவற்றுறை பொலிஸ் பிரிவுகளில் மகளிருக் கான தனி பொலிஸ் அலகு களும் உருவாக்கி வருகின் றோம் என தெரிவித்த அரச அதி பர் எங்களைப்பொறுத்தளவில் இந்நாட்டிலுள்ள அனைவரும் சக உரிமையுடன் வாழவேண்டும் என்பதே எமது நோக்கமாக இருக்கின்றது என்றார். (இ.25)

# போதைக்கு அடிமையானவருக்கு சிகிச்சை வழங்க அனுமதி

நெல்லியடி இராஜசிங்கம் வீதிப் பகுதியில் குடிபோதையில் நிதானமிழந்து செயற்பட்ட நப ருக்கு சிறைச்சாலை அதிகாரிகளூடாக சிகிச்சை வழங்குவதற்கு பருத்தித்துறை நீதிமன்றம் உத் தரவிட்டுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, குறித்த பகுதியில் வசிக்கும் குணபாலன் தனலட்சுமி என்பவர் தனது கணவர் குணபாலன் மதுபோதைக்கு அடிமையாகியுள்ளதாகவும் இதனால் அவர் நினைவிழந்து செயற்படுவதுடன் தன்னை அடித்து துன்புறுத்துவதாக நெல்லியடி பொலி ஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

முறைப்பாட்டிற்கு இணங்க குறித்த நபரை கைது செய்த நெல்லியடி பொலிஸார் பருத்தித் துறை நீதிமன்றில் பதில் நீதவான் முன்னிலையில் ஆஜர்ப்படுத்தினர்.

வழக்கை விசாரணை செய்த பதில் நீதவா னிடம் குறித்த நபருக்கு மதுபோதை தடுப்பு சிகிச்சை அளிக்கப்படவேண்டும் என பொலிஸார் தெரிவித்த நிலையில் உரிய சிகிச்சை வழங்குமாறு நீதவான் அனுமதி அளித்ததுடன் அதற்குரிய அறிக் கையை எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் நீதிமன்றுக்கு சமர்ப்பிக்க வேண்டும் எனவும் உத் தரவிட்டார். (18)

## ஆன்மீக நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயச் சூழலில் அமைந்துள்ள சந்நிதியான் ஆச்சிரம சைவகலைபண்பாட்டுப் பேரவையினால் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் ஆன்மிக நிகழ்வுகள் நடைபெற்று வருகிறது.


இதில் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை மு.ப 10.30 மணிக்கு இசை ஆசிரியர் கலாவித்தகர் கே.எஸ்.சிவஞானராஜாவின் இன்னிசை நிகழ்வு, பக்கவாத்திய சகிதம் இடம்பெறவுள்ளது.

## தெளிவூட்டல் நிகழ்வு பிற்போடப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

தேசிய இளைஞர் மன்ற யாழ்.மாவட்ட சம் மேளனத்தினால் இன்று புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு "2015 ஆம் ஆண்டு இளைஞர் கழக தெளிவூட்டல்" தொடர்பான பத்திரிகையாளர்களுக் கான நிகழ்வு தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளதாக யாழ்.தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினர் அறிவித்துள்ளனர்.

# திருவள்ளுவர் விழாவை நடாத்த யாழ்.தமிழ்ச்சங்கம் ஏற்பாடு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண தமிழ்ச்சங்கம் முன்னெடுக்கும் "திருவள்ளுவர் விழா எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை மாலை 5 மணிக்கு நல்லூர் துர்க்காதேவி மணிமண் டபத்தில் இடம்பெறவுள்ளது. யாழ் பெரியகடை சிவகணேசன் புடை வையகத்தின் அனுசரணையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வு யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கத்தின் துணைத் தலைவரும் யாழ்.பல் கலைக்கழக தமிழ்த்துறைத் தலை வருமாகிய பேராசிரியர் கி.விசாகரூ பன் தலைமையில் நடைபெறும். நிகழ்வின் அனுசரணையாளரான கனகசபை அருள்நேசன் மங்கல விளக்கேற்றுவார்.

ஊர்காவற்றுறை பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோ கத்தர் மதபாரன் தமிழ்வணக் கம் இசைப்பார்.

யாழ்பல்கலைக்கழக வரலாற் றுத்துறை சிரேஷ்ட விரிவுரையா ளர் சாந்தினி அருளானந்தம் வர வேற்புரையையும் தமிழ்ச்சங்கத் தலைவர் பேராசிரியர் தி.வேல் நம்பி தொடக்கவுரையையும் ஆற்றுவர்.

'குறள் நீதி' என்ற பொருளில் தமிழ்ச்சங்க ஆட்சிக்குழு உறுப் பினர் ந.விஜயசுந்தரம் சிறப்புரை யாற்றுவார். தொடர்ந்து தமிழ்ச் சங்கத் துணைத்தலைவர் கலா நிதி ஆறு திருமுருகன் தலைமை யில் சுழலும் சொற்போர் இடம் பெறும்.

இக்கால உலகிற்கு வள்ளுவம் பெரிதும் வலியுறுத்துவது எது? என்ற பொருளில் இடம்பெறும் இச்சொற்போரில் ஒழுக்கம் அல்ல கடமையே என்ற பொருளில் கோப் பாய் ஆசிரிய கலாசாலை விரிவு ரையாளர் கு.பாலஷண்முகனும், கடமை அல்ல மனிதநேயமே என்ற பொருளில் யாழ்.போதனா மருத்துவமனையின் மருத்துவத் தொழில்நுட்பவியலாளர் லோ.துஷி கரனும், மனிதநேயம் அல்ல உலகி யலே என்ற பொருளில் வடமா காண கல்வித் திணைக்களத்தின் தமிழ்ப்பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் ஜெனி முகுந்தனும், உலகியல் அல்ல ஒழுக்கமே என்ற பொருளில் முல்லை குமிழ முனை மகா வித்தியாலயத் தமி ழாசிரியர் க.சந்திரசேகரும் கருத் துரைகளை வழங்குவர்.

சிறப்பு நிகழ்வாக யாழ். பல்கலைக்கழக நடனத்துறை விரிவுரையாளர் சத்தியப்பிரியா கஜேந்திரனின் நெறியாள் கையில் நீர்வேலி பொன்சக்தி கலாலயா நாட்டியப் பள்ளியினர் வழங்கும் நாட்டிய நிகழ்வு இடம்பெறும். தமிழ்ச்சங்கத்தின் ஆட்சிக்குழு உறுப்பினரும் நீர்ப்பாசனத் திணைக்கள அபிவிருத்தி உத்தி யோகத்தருமாகிய ந.ஜங்கரன் நன்றியுரை நல்குவார். யாழ்.பல் கலைக்கழக மருத்துவபீட உத விப் பதிவாளர் இ.சிவேஸ்வரா நிகழ்வுகளை முன்னிலைப்படுத் துவார்.

# பகீரதியைக் கைவிட்டதேன்?

பிரான்ஸிலிருந்து வந்து கிளிநொச்சியில் தன்னுடைய பெற்றோருடன் விடுமுறையைக் கழித்துத் திரும்பிய போது கட்டுநாயக்க விமானநிலையத்தில் கைது செய்யப்பட்ட பகீர தியை எல்லோரும் கைவிட்டு விட்டார்களா?

ஏன் இந்தக் கேள்வியென்றால், இந்தக் கைதைப் பற்றி எந்தத் தூதுவராலயமும் மூச்சு விடவில்லை.

மனித உரிமைகள் அமைப்புகள் ஒன்றும் இதைக் கண்டு கொள்ளவில்லை.

தமிழ்த் தேசியவாதிகள் இதை இன்னும் கண்டிக்கவும் இல்லை. இந்தக் கைதையிட்டுக் கொந்தளிக்கவோ கூக்குரலிடவோ இல்லை.

தமிழ் ஊடகங்களும் இணையங்களும் இந்தக் கைதைப் பற்றி எந்தப் புனைவையும் செய்யத் தொடங்கவில்லை.

எல்லாம் எதற்காக?

இதைப் பற்றிப் பேசினால், அது தங்களின் மடியைத்தான் சுடும் என்பதால்தான்.

ஏனென்றால், இந்தப் புதிய அரசாங்கத்தை ஆட்சிப் பீடமேற்றியவர்கள் மேற்படி தரப்பினர்கள்.

ஏன் இதில் பகீரதி கூட தார்மீக ஆதரவை மைத்திரி அரசுக்கும் மாற்றத்துக்கும் வழங்கியிருக்கலாம்.

அதன் அடிப்படையில்தான் அவர் பிரான்ஸிலிருந்து கிளிநொச்சியிலுள்ள தன்னுடைய பெற்றோரைச் சந்திக்க வந்திருக்கலாம்.

அதாவது புதிய அரசு தமிழர்களுக்குச் சாதகமானது. பாதகமில்லாமல் நடக்கும். முந்திய அரசைப் போல அச்சமடையத் தேவையில்லாதது. இராணுவ நெருக்கடிகள் இல்லாத ஒரு அரசாங்கம் என்ற எண்ணத்தில் அல்லது அப்படியான நம்பிக்கையில் இலங்கைக்கு வந்திருக்கிறார் பகீரதி.

அதற்கு முன்னர் இருந்த மகிந்த ராஜபக்ஷவின் அரசாங்கத்தை அவர் நம்பவில்லை. இவ்வளவுக்கும் பகீரதியின் தந்தை மகிந்த ராஜபக்ஷ தலைமை தாங்கிய சுதந்திரக் கட்சியின் முக்கிய உறுப்பினர். அவர் வாழ்கின்ற கிளிநொச்சி மாவட்டத்தில் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் மூத்த உறுப்பினர். இதனால் மகிந்த ராஜபக்ஷ கிளிநொச்சிக்கு வந்திருந்தபோது அவரை அழைத்துத் தன்னருகில் அமர்த்தியிருந்தார்.

அந்த அளவுக்குச் செல்வாக்குப் பெற்றிருந்த தந்தையை நம்பியோ, அவருடைய அரசாங்கத்தை நம்பியோ பகீரதி வரத் தயாராக இருக்கவில்லை.


இப்பொழுது வந்திருக்கும் புதிய அரசை நம்பியே அவர் வந்திருக்கிறார். இந்தப் புதிய அரசை ஆட்சிப்பீடமேற்றிய மேற்குலகத்தை நம்பியே அவர் இங்கே இலங்கைக்கு வந்திருக்கிறார்.

இன்னும் சொல்லப்போனால், பகீரதியின் சோதரனின் மனைவி யின் சகோதரரான சிறிதரன் எம்பியை நம்பித்தான் அவர் இலங்கை வந்திருக்கிறார் போலுள்ளது.

புதிய அரசாங்கத்தை நாம் ஆட்சிப்பீடத்திலேற்றியிருக்கிறோம். முந்திய அரசாங்க கத்தைப் போல இந்த அரசாங்கம் செயற்படாது. இது தமிழர்களால் உருவாக் கப்பட்ட அரசாங்கம். ஆகவே நாங்கள் சொல்வதை இந்தப் புதியவர்கள் கேட்டுத்தான் ஆகவேண்டும். எனவே துணிந்து வாருங்கள் என்று அழைத்திருக்கலாம்.

ஆனால், எல்லா நம்பிக்கையும் எல்லாக் கணிப்பும் பொய்த்துப்போய், பகீரதி தன்னுடைய எட்டுவயதுப் பிள்ளையுடன் கைதான போது அனைவரும் கைவிட்டு விட்டனர்.

உலகம் இப்படியானதுதானா!




■ ம. அய்யம்பிள்ளை

பணம் வரும்போது இரண்டு கால்களுடன் வரும். போகும்போது பல கால்களுடன் போகும். - பொன்மொழி.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## யதார்த்தம் தெரிந்தவர் சுரேஷ்!

பெப்ரவரி 21ல் யாழ்ப்பாணம் பேருந்து நிலையம் முன்பாக நடத்திய ஆர்ப்பாட்டத்தில் சுமந்திரன் எம்.பியின்கொடும்பாவியை எரித்ததற்காக சுரேஷ் பிரேமச்சந்திரனும் அனந்தி சசிதரனும் தமிழரசுக் கட்சியால் வன்மையாகக் கண்டிக்கப்பட்டிருந்தது தெரிந்ததே.

கடந்த மார்ச் 1ஆந் திகதி அன்று வவுனியா, குருமண்காடு விருந்தினர் விடுதியில் கூடிய இலங்கைத் தமிழரசுக் கட்சியின் செயற்குழு, இரண்டு பிரேரணைகளை நிறைவேற்றியது. அதில் இரண்டாவது பிரேரணை சுரேஷையும் அனந்தியையும் கடுமையான வார்த்தைகளால் எச்சரிப்பதாக அமைந்திருந்தது.

"சுரேஸ் பிரேமச்சந்திரன், பல சந்தர்ப்பங்களில் தொடர்ந்தும் சம்பந்தன் மற்றும் சுமந்திரன் ஆகியோரை விமர்சித்து வருகிறார். மத்திய செயற்குழு பிரேமச்சந்திரனின் இந்த நடவடிக்கையை வன்மையாகக் கண்டிக்கிறது" என்று குறிப்பிட்டதோடு, மேலும்,

"ரி.என்.ஏயின் பாராளுமன்ற குழுவின் பேச்சாளராக தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட கடமையை சுரேஷ் பிரேமச்சந்திரன் பொறுப்பற்ற விதத்தில் கையாண்டுள்ளார். இது தொடர்பாக மத்திய குழு, பாராளுமன்றில் உள்ள இலங்கைத் தமிழரசுக் கட்சி அங்கத்தவர்களிடம், அவரது பொறுப்பை துஷ்பிரயோகம் செய்தது தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறது" என்றும் அந்தக் கண்டனத் தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

தமிழரசுக் கட்சி சுரேஷ் பிரேமச்சந்திரனை அடுத்த பாராளுமன்றத்திற்கு நுழையவிடாமல் வெளியே தள்ளிவிடுவதற்கான நகர்வுகளை ஆரம்பித்துவிட்டது தெரிகிறது. புலிகளால் பலத்த சந்தேகத்திற்கும் விவாதத்திற்கும் பிறகு அவர்கள் உருவாக்கிய கூட்டமைப்பில் சேர்த்துக்கொள்ளப்பட்ட சுரேஷ், புலிகளின் மறைவிற்குப் பின் ரி.என்.ஏ. யில் சம்பந்தனுக்கு அடுத்த இடத்தைக் குறிவைக்கத் தொடங்கினார்.

இரண்டாம் மொழிப் புழங்குகையில் மாவையை உச்சி மேலே வந்துவிடலாம் என்ற எண்ணத்தில் சற்று ஆர்ப்பாட்டமாகவே நடந்துகொள்ளத் தொடங்கினார். ஆனால் சட்டமும் ஆங்கிலமும் தெரிந்த சுமந்திரன், விக்னேஸ்வரன் போன்றவர்களை உள்ளே இறக்கி சுரேஷுக்கு முதல் ஆப்பை வைத்தார் சம்பந்தன்.

இப்போது வரப்போகும் தேர்தலிலும் தமிழ்மாறன், தவராசா என்று வேட்பாளர்களுக்கான பெயர்கள் அடிபடுவது, ரி.என்.ஏ. யில் தமிழரசுக் கட்சிக்கு வெளியே உள்ள சுரேஷ் போன்றவர்களைச் செல்லாக்காசாக்கி விடும் நோக்கத்தையும் கொண்டிருப்பதாகவே கருதப்படுகிறது.

அதனால்தான் சுரேஷும், சிறிதரன் சிவாஜிலிங்கம் ரேஞ்சுக்கு இறங்கி, "எந்தவொரு சிங்கள அரசும் சரிவராது; நானும் தனிநாடுதான்... நானும் தனிநாடுதான்..." என்று கூவும் நிலைக்கு வந்திருக்கிறார்.

த.தே.கூ. வுக்கு கணிசமான நிதியூட்டத்தை வழங்கிக்கொண்டிருக்கும் புலம்பெயர் தனிநாட்டுக்கனவு அமைப்புகளின் கவனிப்புக் கிடைத்தால்தான் யாழ்ப்பாணத்து வேட்பாளர் பட்டியலில் தனது கட்சியிலிருந்து தனக்கு மட்டுமாவது ஒரு 'சீற்' பிடிக்கலாம் என்று கறணங்கள் போடுகிறார் சுரேஷ்.

சிங்கள அரசுடன் இணக்கமாக நடந்துகொள்கிறார்கள் என்பதைச் சொல்லி சம்பந்தன் சுமந்திரனை அகில உலக தீவிரத் தமிழ்த் தேசியர்களின் உதவியோடு துரோகிகளாக்கிவிட முடியுமா என்று முனைந்து பார்க்கிறார் சுரேஷ்.

அது சரிவராமல் போனால் சம்பந்தன் மாவை கால்களில் சாஷ்டாங்கமாக விழுந்துவிடவும் இந்த முன்னாள் போராளி தயங்கமாட்டார்.

அவருடைய முன்னாள் பாராளுமன்ற சகா ஒருவர் சொல்லியதுபோல, "பாராளுமன்ற சீற்றில் ஒருமுறை குந்திவிட்டால், பிறகு புழுவாய் நெளிந்து நெளிந்து போயாவது அந்த சீற்றில் ஏறிக் குந்தாமல் இருக்கமுடியாது..." என்ற யதார்த்தம் அவர் நன்கு அறிந்ததே!

- ஆசிரியர்

# இனவாதத்தைத் தூண்டுவதால் தேசிய பிரச்சினை தீராது

### மக்கள் விடுதலை முன்னணி தெரிவிப்பு

(கொழும்பு)

தேசிய பிரச்சினைக்கு தீர்வு தேவையென தெரிவித்துக் கொண்டு இனவாதத்தினை தூண்டுவதனால் தமிழர் எதிர்பார்க்கும் தீர்வு கிடைக்கப் போவதில்லை. விட்டுக் கொடுப்பும் புரிந்துணர்வும் இரு தரப்பினரிடமும் இருக்க வேண்டும் என தெரிவிக்கும் மக்கள் விடுதலை முன்னணி, தேசிய அரசுக்குள் ஏற்பட்டுள்ள குழப்பத்தை தீர்க்கும் வகையில் தேசிய பிரச்சினை தீராதெனவும் எச்சரித்துள்ளது.

வடமாகாண சபையின் செயற்பாடுகள் தொடர்பில் தேசிய அரசாங்கம் அதிருப்தியடைந்துள்ள நிலையில் இது தொடரப்பில் மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இணக்கப்பாட்டு ஆட்சியொன்று தற்போது இடம்பெற்றுக்கொண்டிருக்கின்ற நிலையில் வடமாகாண சபையில் இனவாதத்தினை தூண்டும் வகையில் செயற்படுவதாலும் அரசாங்கம் தமிழ் தரப்பினருடன் முரண்பாடுகளை தோற்றுவிக்கின்றமையாலும் இறுதியில் பாதிக்கப்போவது தமிழ் பேசும் மக்களே. எனவே இப்போது கிடைத்திருக்கும் வாய்ப்பினை சரியாகப் பயன்படுத்தி தேசிய பிரச்சினைக்கான தீர்வினை எட்ட வேண்டும்.

மேலும் மாற்றமொன்றினை ஏற்படுத்தவும் நல்லாட்சியினை ஏற்படுத்தவுமே தேசிய அரசாங்கம் உருவாக்கப்பட்டது. ஆனால இன்று தேசிய அரசாங்கத்திற்குள்ளேயே குழப்பங்கள் ஏற்பட்டு விட்டது. ஆட்சி அதிகாரம் யாருக்கு என்று போட்டி ஏற்பட்டு விட்டது. இதனை சமாளிப்பதா அல்லது தேசிய பிரச்சினை உட்பட ஏனைய பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதா? என்பதில் சிக்கியுள்ளனர். எனவே இங்கு விரைவில் தேசிய அரசிலும் பிளவு ஏற்படுமெனவும் அவர் தெரிவித்தார்.

# கொழும்பு துறைமுக நகரதிட்டம் சட்டவிரோதமானதென ஏற்பு

(கொழும்பு)

கொழும்பு துறைமுக நகர அபிவிருத்தி திட்ட நடவடிக்கைகள் சட்டவிரோதமானதாக மேற்கொள்ளப்பட்டது என இலங்கை துறைமுக அதிகார சபை ஒப்புக்கொண்டுள்ளதாக சுற்றாடல் மற்றும் இயற்கை நடவடிக்கைகள் குறித்த ஆய்வு மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

ஆய்வு மத்திய நிலையத்தின் இணைப்பாளர் ரவிந்து காரியவசம் இதனைத் தெரிவித்துள்ளார்.

சுற்றாடல் மற்றும் பொது அமைப்புக்கள் பலவற்றினால், கடந்த தினத்தில் இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவிடம் தாக்கல் செய்யப்பட்ட மனு, நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்ட போதே இந்த தகவல் வெளியிடப்பட்டது.

இந்தத் திட்டத்தில் சில குறைபாடுகள் இருப்பதை துறைமுக அதிகார சபை ஏற்றுக் கொண்டுள்ளதாகவும் இலங்கை மனித உரிமை ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

133 கோடியே 70 இலட்சம் அமெரிக்க டொலர் ஒதுக்கீட்டில் அமைக்கப்படும், கொழும்பு துறைமுக அபிவிருத்தி திட்டம் 233 ஏக்கர் விஸ்தீரண கடற்பரப்பில் நிர்மாணிக்க திட்டமிடப்பட்டது.

கடந்த வருடம் செப்ரெம்பர் மாதம் 17ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இந்த திட்டத்தினை 8 வருட காலப்பகுதியினுள் முற்றாக நிறைவேற்ற திட்டமிடப்பட்டிருந்தது. இந்த துறைமுக நகர அபிவிருத்தித்திட்டத்தினை தற்காலிகமாக இடைநிறுத்தும் படி பிரதமர் ரணில் விக்ரமசிங்க பணிப்புரை விடுத்ததனையடுத்து இந்தத் திட்டம் கைவிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பொதுபலசேனாவை இணைக்கமாட்டோம்

### மகிந்த அமரவீர தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தலில் பொதுபல சேனாவை இணைத்துக் கொண்டு தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடப் போவதில்லை என நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

அம்பலாந்தோட்டப் பகுதியில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

மேலும் பொதுபலசேனாவின் சில செயற்பாடுகளால் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு அதிக வாக்குகள் குறைந்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் சிலர், அடுத்த பொதுத் தேர்தலில் ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியுடன் இணைந்து போட்டியிட எதிர்பார்த்துள்ளதாக மகிந்த அமரவீர கூறியுள்ளார்.

# நாடாளுமன்றத்தைக் கலைத்து பொதுத்தேர்தல் நடாத்த வேண்டும்

### அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல வேண்டுகோள்

(கொழும்பு)

நாடாளுமன்றத்தை கலைத்து பொதுத் தேர்தலை நடத்த வேண்டுமென அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார். பெருந்தோட்டத் துறை அபிவிருத்தி அமைச்சின் கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தற்போதைய நாடாளுமன்றத்தில் மகிந்த ராஜபக்ஷவின் கொள்கைகளே உள்ளீர்க்கப்பட்டுள்ளதாகவும், இந்த நாடாளுமன்றம் காலாவதி ஆகிவிட்டதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை சேர்ந்த பலர் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து தேர்தலில் போட்டியிட முனைவதாகவும் அமைச்சர் கூறியுள்ளார். தேர்தல் முறைமை மாற்றத்திற்கு முன்னதாக, பொதுத்தேர்தல் நடாத்தப்பட வேண்டும் என்பதே, ஐக்கிய தேசியக் கட்சியினரின் எதிர்பார்ப்பு எனவும் தெரிவித்துள்ளார்.

அவ்வாறு பொதுத் தேர்தல் நடத்தப்படும் சந்தர்ப்பத்தில், ஐக்கிய தேசியக் கட்சி வெற்றி பெறுமெனவும், ஐ.தே.க வில் வேட்புமனுத்தாக்கல் செய்யக்காத்திருக்கும் சுதந்திரக் கட்சி உறுப்பினர்களின் பட்டியல் தன்னிடம் இருப்பதாகவும் தெரிவித்துள்ள அவர், அந்தப் பட்டியலை தற்போதைய சூழலில் வெளியிட முடியாது என தெரிவித்துள்ளார்.

# தெல்லிப்பளை விபத்தில் இளைஞன் பாடுகாயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரிக்கு அருகில் இடம்பெற்ற விபத்தில் இளைஞர் ஒருவர் காயமடைந்துள்ளார்.

இந்த விபத்து நேற்றுக் காலை 6.15 அளவில் இடம்பெற்றுள்ளதாக தெல்லிப்பளை பொலிஸார் தெரிவித்தனர்.

மோட்டார் சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி வீதி அடையாளக் கம்பத்துடன் மோதுண்டதில் இந்த விபத்து நேர்ந்துள்ளது.

விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞர் காயமடைந்த நிலையில் தெல்லிப்பளை ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

அளவெட்டியைச் சேர்ந்த எஸ்.தர்சன் என்ற 19 வயதுடைய இளைஞனே இவ்வாறு காயமடைந்துள்ளார்.

இந்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை தெல்லிப்பளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# வலி வடக்கில் நடந்தேறும் சூழல் அனர்த்தம்



**நீர் வழங்கல் சபை யாழ். குடாவில் நான்கு பிரதான (நிலத்தடி) நீர்கொள் படுகைகள் (aquifer) இருப்பதாகக் குறிப்பிடுகின்றது. இதில் தடித்த நன்னீர்ப் படை கொண்ட சுன்னாக நீர்கொள் படுகையே அதிக கொள்ளளவு கொண்டது. இந்த வரலாற்று முக்கியத்துவமிக்க நீர் மூலமானது மாசடைந்திருப்பது மாபெரும் அசம்பாவிதமாகும். மாசடைந்த நீரினை பயன்படுத்துவது மனிதனுக்கும் ஏனைய விலங்குகளுக்கும் பங்கம் விளைவிக்குமெனின் இந் நிலத்தின் எதிர்காலம் யாது? சுன்னாகம் மற்றும் சூழவுள்ள பிரதேசங்களில் உள்ள கிணறுகள் யாவும் எண்ணெய்க் கழிவுகளால் மாசடைந்திருப்பது, சுன்னாக நீர்கொள் படுகை முற்றாக மாசடைந்திருப்பதை சுட்டி நிற்கின்றதா?**

**பேராசிரியர் தயா சோமசுந்தரம், யாழ். பல்கலைக்கழகம்**

வட இலங்கையில் பாரிய சூழல் அனர்த்த மொன்றிற்கான முன்னறிகுறிகள் ஏற்கனவே தென்படத் தொடங்கிவிட்டன. வலிகாமம் வடக்கில் வாழும் இரண்டரை இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் தமது நிலத்தடி நீர் எண்ணெய் கழிவுகளால் மாசடைந்து செல்வதை அவதானித்திருக் கின்றனர்.

2013-2014 காலப்பகுதியில் சேகரிக்கப்பட்ட கிணற்று நீர் மாதிரிகள் மூலம் சுன்னாகம் மின் உற்பத்தி நிலையத்திலி ருந்து 1.5 கிலோ மீற்றர் விட்ட மாகக் கொண்ட பரப்பில் உள்ள கிணறு களில் 73 வீதம் ஆனவை ஏற்றுக்கொள்ளப்பட்ட அளவிலும் (1 mg of oil/ L of water) அதிகமான எண்ணெய் கூறு மட்டங்களை கொண்டிருந்தது கண்டறியப்பட்டது.

இன்று 4 கிலோ மீற்றர் விட்டப் பரப்பில் உள்ள கிணறுகள் எண் ணெய் மாசடைதலுக்கு உட்பட்டி ருப்பதாக ஊர் வாசிகள் தெரிவிக் கின்றனர். இம் மாசடைவின் சுகா தார, சூழல் மற்றும் நீண்ட கால பாதிப்புக்கள் குறித்து இன்னும் அறியப்படவில்லை.

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையினால் அண்மையில் வெளியிடப்பட்ட அறிக்கை "கழிவு எண்ணெய்யால் மாசுபடுத்தப்பட்ட நீரினைத் தொடர்ந்து பாவிப்பது புற்றுநோய், கருச் சிதைவு முதலிய பாதிப்புக் கள் உருவாவதோடு குழந்தை வளர்ச்சி, தோல் மற்றும் மன வியல் நலம் என்பவற்றிற்கு குந்தகம் விளை விக்கும்" என்று குறிப்பிடுகின்றது.

கழிவு எண்ணெய் மாசடைதல் தொடர்பில் பொது மக்கள் பயங் களாலும், குழப்பங்களாலும் நிறைந்திருந்தாலும் இது தொடர் பில் அவர்கள் என்ன செய்ய வேண்டுமெனவோ, இதனால் வரக்கூடிய பாதிப்புக்கள் தொடர் பிலோ எந்தவித அறிவித்தலும் கிடைக்கப் பெறவில்லை.

மேலும், அரசு இந்த அனர்த்தம் குறித்து என்ன நடவடிக்கைகளை எடுத்திருக்கின்றது என்பது பற்றி யும் அல்லது எடுக்கவேண்டும் என்பது பற்றியும் கூடத்தெளி வில்லா நிலையே தொடர்கின்றது. அதிகார பூர்வமிக்க, உத்தியோக பூர்வ, உறுதிப்படுத்தப்பட்ட தக வல்கள் இல்லாத நிலையில் ஆதாரமில்லா ஊகங்களும், தகவல்களும், அனுமானங்களும், கோட்பாடுகளும் மக்களிடையே பயத்தையும் பீதியையும் கிளறி விட்டிருக்கின்றன. உதாரண- மாக, அண்மையில் (28 மாசி 2015) டிரான்ஸ்பேரன்ஸி இண்டர்நேஷ னலால் நடாத்தப்பட்ட நல்லாட்சி தொடர்பான கருத்தரங்கில் சிவில் சமூக பிரதி நிதிகள் நீர் ஊற்றுக் களை ஈயம் மாசுபடுத்துவதாக கூறினர். ஆனால் நீர் வழங்கல் சபையின் ஆய்வில் நீரில் கன உலோகங்கள் கலந்திருப்பதாக கண்டறியப்படவில்லை.

நீர் வழங்கல் சபை அறிக்கை நிலத்தடி நீர் கழிவு எண்ணெய் மாசடைதலுக்கு உட்பட மூல காரண- மாக சுன்னாகத்தில் அமைந்துள்ள படிம எரிபொருள் (fossil fuel) மின் உற்பத்தி நிலையத்தை இனங்கண்டி ருந்தது. தரவுகளை விரிவாக ஆய்வு செய்து, வரை படமாக்கிய போது மின் உற்பத்தி நிலையத்தை அண்மித்த பகுதிகளில் எண்ணெய் மற்றும் மச குப் படைகளின் செறிவு அதிகமாக இருந்ததும், தூரம் அதிகரிக்க செறி வுப் படித்திறன் தொடர்ச்சியாக வீழ்ச்சி யடைந்ததும் தெரிய வந்தது.

2015 இல் மாசுப் பரம்பல் இன்னும் அதிகரித்திருந்தது. அரசும், தனியார் நிறுவனங்களும் முன்பே கிணற்று நீர் மாதிரிகளை பரிசோதித்திருந்த போதும் முடிவுகள் வெளியிடப்படவில்லை. சுன்னாக மின் நிலைய உற்பத்தியில் வெளியாகிய கழிவு எண்ணெய் (உராய்வு நீக்கி எண்ணெய்) உயர் அமுக்கத்தில் துளையிடப்பட்ட குழாய் களூடு நிலத்திற்குள் செலுத்தப்பட்ட மையே நிலத்தடி நீர் மாசடைதலுக்கு காரணமென சந்தேகிக்கப்படுகின்றது.

(தேசிய மின் இணைப்பு வலையமைப் பில் இருந்து மின்சாரம் யாழ்ப்பாணத் திற்கு நேரடியாக விநியோகம் செய்யப் படாத போதுதான் சுன்னாக நிலையத் தில் மின் உற்பத்தி நடைபெறுகின்றது என்பதை கவனத்தில் கொள்க.)

குறித்த செயன்முறையானது யுத்த காலத்தில் செயற்படுத்தப்பட்டிருக்க லாம். 2012 இல் மீண்டும் தேசிய மின் இணைப்பு வலையமைப்பில் யாழ்ப் பாணம் இணைத்துக் கொள்ளப்படும் வரை ஆரம்பத்தில் அக்ரி கோ (Agri Co) என்ற கம்பனியும் பின்னர் நொதேன் பவர் (Northern Power) என்ற கம்பனியும் சுன்னாகத்தில் இருக்கும் மின் பிறப் பாக்கிகள் மூலம் மின் உற்பத்தி செய்து விநியோகிக்க ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தன. நொதேன் பவர் ஆறு வருட காலத்தில் சுமார் 100,000 தொடக்கம் 200,000 லீற்றர் வரையிலான கழிவு எண்ணெயை அகற்ற நேர்ந்திருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது (5 மின் பிறப்பாக்கிகளுக்கு 2000 லீற்றர் கள் வீதம் வருடத்துக்கு மூன்று முறை). யுத்தகாலத்தில் சுன்னாகம் மின் நிலை யம் அமைந்துள்ள சுமார் 20 ஏக்கர் நிலப்பரப்பு இராணுவத்தின் கடும் பாதுகாப்பினுள் இருந்ததால் பொது மக்கள் அதற்குள் நடப்பன குறித்து அறிந்திருக்கவில்லை. ஒரு தசாப்தத் திற்கு மேலாக மின் வசதியின்றியிருந்த மக்கள் மின்சாரம் கிடைத்தமை குறித்து மகிழ்ந்தனரேயன்றி கேள்விகள் கேட்க விளையவில்லை.

தற்போது போர் முடிவுற்ற நிலை யில், நிலத்தடி நீர் மாசடைவால் ஏற் படக்கூடிய சுகாதார, சூழல் கேடுகள் குறித்து அதிகரித்து வரும் கரிசனை களின் அடிப்படையில் குறித்த அனர்த் தத்தின் காரணத்தை அறிந்து உகந்த சீராக்கல் நடவடிக்கைகளை மேற்கொள் வது அரசின் கடமையாகும். அனர்த் தத்திற்குக் காரணமான நிறுவனங்கள் சட்டத்தின் முன் தாம் செய்தவை யாவையும் கூறவேண்டும்.

மாசுக்களின் தொடர் பரவலை தடுக் கும் முகமாக மாசாக்கலின் மூலமாக விளங்கும் பிரதேசம் தோண்டப்பட்டு மாசாக்கல் காரணி கண்டறியப்படுவ துடன் முற்றாக அகற்றப்படவும் வேண் டும். இப்படியிருக்க, சக்தி வாய்ந்த சில அமைப்புக்கள் நடந்தேறிக்கொண்டி ருக்கும் அனர்த்தம் தொடர்பில் முக்கிய மான உண்மைகளை மூடி மறைக்க முயல்வதாக அறிய முடிகின்றது.

சூழல் பாதுகாப்புக்கென கழிவகற்றல் செயன்முறைகளை மேற்பார்வையிடவும், அங்கீகாரம் வழங்க வெனவும் நிறுவப்பட்டிருக்கும் தேசிய மற்றும் உள்ளூர் அரச நிறுவனங்கள் தமது கடமை செய்யத் தவறிய போது, முதன் முதலில் தாம் பாவிக்கும் நீரில் எண்ணெய் மாசுக்கள் கலந்திருப்பது கண்டு குரல் எழுப்பியது சுன்னாகம் தெற்கு விவசாயிகள் சம்மேளனங்களே.

இது தொடர்பில் 2010 இல் இவர்கள் யாழ் அரச அதிபருக்குக் கடிதம் ஒன்றையும் எழுதியிருந்த னர். ஆனால் எந்த நட வடிக்கையும் எடுக்கப்பட வில்லை. சிறிது காலத் துக்குப் பின்னர், கலை வாணி சனசமூகநிலையம் தமது பிரதேச கிணற்று நீரில் துர்நாற்றம் வீசுவ தாகவும், எண்ணெய் கலந்திருப்பதாகவும் முறையிட்டது.

இதன் பிறகு, நீர் வழங் கல் சபை சுன்னாக நீர் பெறு தளத்திலிருந்து விநியோகத்திற்கென நீர் கொள்வதை நிறுத்தி யிருந்தது. நீர் வழங்கல் சபையின் தலைவர் 2012 இல் சூழல்சார் பாதிப்புக்கள் குறித்து குரல் எழுப்பியபோது அவரது கருத்துக்கள் உதாசீனம் செய்யப்பட்ட தோடு அவர் இடமாற்றம் செய்யப்பட்டார்.

உள்ளூர் சிவில் சமூக அமைப்புக்கள், இயற்கை மற்றும் சூழல் காப்பு சங்கம் என்பன இணைந்து மேற்கொண்ட சட்ட நட வடிக்கையின் பின்னரே நீதிமன்றம் சுன்னாக மின் நிலையத்தில் உற்பத்தி நடவடிக்கைகளுக்குத் தடை பிறப்பித்தது. காலம் தாழ்த்தி எடுக்கப்பட்ட முடிவா- னாலும் அதிகாரிகள் நோர்வே நிபுணர்களையும், தேசிய கட்டட ஆய்வு சபையினையும் ராடர் கருவி கொண்டு எண்ணெய் மாசாக்கலின் மூலத்தை கண்டறியவெனக் கோரியிருப்பது வரவேற்கத்தக்கதே.

மேலும் தேசிய பல்கலைக்கழக பிரதிநிதிகளை உள்ளடக்கிய ஒரு நிபுணர் குழுவும் பிரச்சினையை ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பிக்க வென நியமிக்கப்பட்டுள்ளது. மாற்று நடவடிக்கைகள் குறித்து ஏற்ற உள் நாட்டு, வெளி நாட்டு நிபுணர்களை தொடர்பு கொள்ளுமாறு குறித்த நிபுணர் குழுவிற்குப் பணிக்கப்பட்டுள் ளது.

வலிகாமத்தில் மக்கள் பல் நூறு ஆண்டுகளாக வாழ்ந்து வருவது கந்தரோடை தொல்லியல் ஆய்வுத் தளத்தின் மூலம் தெரியவருகின்றது. இவர்கள் பிரதேசத்தின் மாசற்ற, வற்றா நிலத்தடி நீர் ஊற்றினை தமது சகல தேவைகளுக்கும் குறையின்றிப் பயன்படுத்தி வந்ததும் வெளிச்சம்.

நீர் வழங்கல் சபை யாழ். குடாவில் நான்கு பிரதான (நிலத்தடி) நீர்கொள் படுகைகள் (aquifer) இருப்பதாகக் குறிப்பிடுகின்றது. இதில் தடித்த நன்னீர்ப் படை கொண்ட சுன்னாக நீர்கொள் படுகையே அதிக கொள்ளளவு கொண்டது. இந்த வரலாற்று முக்கியத்துவமிக்க நீர் மூலமானது மாசடைந்திருப்பது மாபெரும் அசம்பாவிதமாகும்.

மாசடைந்த நீரினை பயன்படுத்துவது மனிதனுக்கும் ஏனைய விலங்குக ளுக்கும் பங்கம் விளைவிக்குமெனின் இந் நிலத்தின் எதிர்காலம் யாது? சுன்னாகம் மற்றும் சூழவுள்ள பிர தேசங்களில் உள்ள கிணறுகள் யாவும் எண்ணெய்க் கழிகளால் மாச டைந்திருப்பது, சுன்னாக நீர்கொள் படுகை முற்றாக மாசடைந்திருப் பதை சுட்டி நிற்கின்றதா? அதே நீர் வழங்கல் சபையின் அறிக்கை விவசாயத்திற்கென தொடர் செயற்கை உரப்பயன் பாடின் விளைவாக நீரில் ஏறுக்கொள்ளப்பட்ட அளவிலும் விஞ்சிய நைத்திரேட்டுச் சேர்வைகள் (0.01 mg/L க்கு மேல்) இருப்பதை கண்டறிந்திருந்தது.

(தொடர்ச்சி 17 ஆம் பக்கம் பார்க்க)

# மிதக்கும் ஆயுத களஞ்சியம் விசாரணைக்கு ஒத்துழைப்பு

## முன்னாள் கடற்படைத்தளபதி தெரிவிப்பு



மிதக்கும் ஆயுதக் களஞ்சியம் தொடர்பான விசாரணைகளுக்கு பூரண ஒத்துழைப்பு வழங்கப்படும் என முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரால் சோமதிலக்க திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இந்த ஆயுதக் களஞ்சியம் இயங்கிய காலப்பகுதியில் நானே கடற்படைத் தளபதியாக செயற்பட்டேன். எனவே விசாரணைகளுக்கு முழு அளவில் மெய்யான ஒத்துழைப்பு வழங்கத்தயார்.

அண்மையில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்திய மிதக்கும் ஆயுதக் கப்பல் தொடர்பிலான விசாரணைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுவதாகவே தென்படுகின்றது. இந்த மிதக்கும் ஆயுதக் களஞ்சியத்துடன் பாதுகாப்பு அமைச்சு, இலங்கைக கடற்படை, எவன்ட் கார்ட் தனியார் நிறுவனம், ரக்னா லங்கா தனியார் நிறுவனம் ஆகியன நேரடியாக தொடர்புபட்டுள்ளன. இந்த நிறுவனங்களின் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்ட காலத்தில் நான் கடற்படைத் தளபதியாக கடமையாற்றிய காரணத்தினால், விசாரணைகளின் போது அடிக்கடி பதில்களை அளிக்க வேண்டியிருக்கும். எனவே நான் நாட்டிலேயே தங்கியிருக்க வேண்டியது அவசியமாகின்றது.

நாட்டின் சட்ட திட்டங்களுக்கு மதிப்பளித்து விசாரணைகளுக்கு பூரண ஒத்துழைப்பு வழங்கத் தயார் என முன்னாள் கடற்படைத் தளபதி சோமதிலக்க திஸாநாயக்க ஊடக அறிக்கை ஒன்றின் மூலம் தெரிவித்துள்ளார்.

# இலங்கைக்கான மோடியின் பயணம் முதலீடு, போக்குவரத்து குறித்து ஆராய்வு



## இந்திய வெளிவிவகார செயலாளர் தகவல்

இந்தியப்பிரதமர் நரேந்திர மோடி தனது இலங்கை விஜயத்தின் போது முதலீடுகளை அதிகரிப்பது மக்கள் மத்தியிலான தொர்டர்பை விஸ்தரிப்பது, இரு நாடுகள் மத்தியிலான போக்குவரத்தை சுலபமாக்குவது போன்ற விடயங்களில் கவனம் செலுத்துவார் என இந்திய வெளிவிவகார செயலாளர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

.28 வருடங்களின் பின்னர் பிரதமர் மேற்கொள்கின்ற இந்த விஜயம் ஒரு இருதரப்பு விஜயமாகும், நாங்கள் பரந்து பட்ட குறிப்பிடத்தக்க உறவுகளை கொண்டுள்ளோம், நாங்கள் மக்கள் மத்தியிலான உறவுகளை விஸ்தரிக்க விரும்புகின்றோம், இரு நாடுகளின் தலைவர்கள் மத்தியில் குறுகிய காலப்பகுதியில் நடைபெறப் போகின்ற நான்காவது விஜயம் இதுவாகும், இது பல விடயங்களை புலப்படுத்துகின்றது.

இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையிலான வர்த்தகத்தின் அளவு 5.2 பில்லியன் டொலர்.

இலங்கையில் மேலும் முதலீடுகளை மேற்கொள்வது, வேலைவாய்ப்பினை உருவாக்குவது ஆகியனவே மேற் கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகளாகும்.

இரு நாடுகளுக்கும் இடையில் போக்குவரத்தை இலகுவாக்க விரும்புகின்றோம்.

யாழ்ப்பாணம் விஜயம் மேற்கொள்ளும் பிரதமர் மோடி இடம்பெயர்ந்த மக்களுக்காக இந்தியாவால் கட்டப்பட்ட வீடுகளை கையளிப்பார்.நாங்கள் 27000 வீடுகளை கட்டியுள்ளோம் அவற்றையே பிரதமர் கையளிப்பார். என ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

# தேர்தலில் போட்டியிடப்போவதாக மகிந்தராஜபக்ஷ கூறவில்லை

## ஊடகப்பேச்சாளர் டிலான் பெரேரா தெரிவிப்பு



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிடுவதாக எப்போதும் கூறவில்லை என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடப் போவதாக எங்காவது தெரிவித்துள்ளமையை காண்பித்தால் அந்த சந்தர்ப்பத்திலேயே நான் எனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்வேன் என சிங்கள பத்திரிகை ஒன்றுக்கு அளித்த நேர்காணலில் தெரிவித்துள்ளார்.

சுதந்திரக் கட்சியை பிளவடையச் செய்யவே மகிந்த மீண்டும் தேர்தலில் போட்டியிட உள்ளதாக பிரச்சாரம் செய்யப்படுகின்றது.

கட்சியை பிளவடையச் செய்யும் சில தரப்பினரும் ரணில் விக்கிரமசிங்கவிற்கு ஆதரவான ஊடகங்களுமே இந்த பிரச்சாரத்தை முன்னெடுக்கின்றன.

ஜனாதிபதித்தேர்தலில் தோல்வியைத் தழுவியதுடன் நான்தான், நாடாளுமன்றிற்கு வருமாறு மகிந்தவிற்கு அழைப்பு விடுத்தேன்.

முதலில் அந்த அழைப்பினை மகிந்த ஏற்றுக்கொண்டார்.

தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் ஜனக பண்டார தனது பதவியை துறக்க ஆயத்தமாகியிருந்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை பெற்றுக் கொள்வதற்கான ஆவணங்களையும் மகிந்த கட்சியின் பொதுச் செயலாளர் சுசில் பிரேமஜயந்தவிற்கு அனுப்பி வைத்திருந்தார்.

பின்னர் தொலைபேசி மூலம் அழைத்து திட்டத்தை மாற்றிக் கொள்வதாகவும் நாடாளுமன்ற உறுப்பினராக பதவி வகிக்கப் போவதில்லை எனவும் மகிந்த குறிப்பிட்டிருந்தார்.

மகிந்த ராஜபக்ஷ தேர்தலில் போட்டியிடுவதாக அறிவித்தால் அதனை எவரும் எதிர்க்கப் போவதில்லை. கட்சியை மீளக் கட்டியெழுப்பிய மிகப் பெரிய பெருமை அவரையே சாரும்.

எனினும் கட்சியை பிளவுபடுத்தவும் ரணிலின் ஒப்பந்தங்களுக்காக செயற்படும் தரப்பினரும் மகிந்த பொதுத் தேர்தலில் போட்டியிடுகின்றார் என்ற பிரசாரத்தில் தீவிரம் காட்டி வருகின்றனர் என டிலான் பெரேரா குற்றம் சுமத்தியுள்ளார்.

# சட்டத்தின் விதிமுறைக்கு அமையவே நான் செயற்பட்டு வந்துள்ளேன்

## முன்னாள் பாதுகாப்பு செயலர் கோத்தாபய தெரிவிப்பு



(கொழும்பு)

எவன்கார்ட் ஆயுதக்களஞ்சியம் தொடர்பில் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றபோதும் தாம் சட்டத்தின் அடிப்படையிலேயே செயற்பட்டதாக முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் கோத்தாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

எந்த விடயத்தையும் தாம் சட்டரீதியற்ற வகையில் மேற்கொள்ளவில்லை என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தவிடயம் தொடர்பில் ஏற்கனவே பொலிஸாரிடம் வாக்குமூலத்தை வழங்கிவிட்டதாக குறிப்பிட்ட அவர், விசாரணைகள் முடிவடையும் முன்னர் தமது கடவுச்சீட்டை முடக்கியமை ஏற்றுக் கொள்ளத்தக்க செயலல்ல என்று தெரிவித்துள்ளார்.

தம்மை திருடர்களாகவோ, கொலைகாரர்களாகவோ உலகுக்கு காட்ட முயற்சித்தாலும் தாம் நாட்டை விட்டு வெளியேறப் போவதில்லை என்றும் தமது கீர்த்திக்கு எதிராக சட்டமா அதிபர் திணைக்களத்திலும் சில அதிகாரிகள் செயற்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# தேசிய அரசாங்கம் அமைந்தால் நாம் எதிர்க்கட்சி பக்கம்

## குமாரவெல்கம தெரிவிப்பு

(கொழும்பு)

தேசிய அரசாங்கம் ஒன்று அமையுமாயின் தான் எதிர்க்கட்சி ஆசனத்தில் அமரப்போவதாக நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியின், தேசிய அரசாங்க எண்ணக்கருவுக்கு தாம் ஆரம்பம் முதலே எதிர்ப்புத் தெரிவிப்பதாகவும் வெல்கம குறிப்பிட்டுள்ளார்.



மேலும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்திலும் தான் இது தொடர்பில் தெரிவித்ததாக வெல்கம குறிப்பிட்டுள்ளார்.

# சீனாவிற்கு எதிராக செயற்படவே இல்லை

## நிதி அமைச்சர் ரவி தெரிவிப்பு



(கொழும்பு)

இலங்கையின் புதிய அரசாங்கம் சீனாவுக்கு எதிராக அல்ல, துஷ்பிரயோகங்களுக்கு எதிராகவே நடவடிக்கையை மேற கொண்டுள்ளது என நிதி அமைச சர் ரவி கருணாநாயக்க தெரிவித துள்ளார்.

கொழும்பு போட் சிட்டி திட்டம் இடைநிறுத்தப்பட்டுள்ளமை தொடர்பில் 'சவுத் சைனா மோனிங் போஸ்ட்' செய்தித்தாளுக்கு வழங்கிய நேர்காணல் ஒன்றிலேயே அவர் மேற் கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இலங்கை தற்போது ஊழல்களை ஒழிக்கும் நடவடிக்கைகளையே முன்னெடுக்கிறது. இதன்போது ஊழல்களில் ஈடுபட்ட முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்கால அதிகாரிகள் தொடர்பில் விசாரணைகள் நடாத்தப்படுகின்றன.

எனவே இலங்கையை பொறுததவரை சீனாவுக்கு எதிராக எந்த நடவடிக்கையையும் அது எடுக்கவில்லை. சீனா எப்போதுமே இலங்கையின் நட்பு நாடு என்று ரவி கருணாநாயக்க சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தநிலையில் இது குறித்து பேச்சு நடாத்த விரைவில் சீனாவுக்கு செல்லவுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்

# வட,கிழக்கு மட்டுமன்றி நாடுபூராகவும் இந்தியா முனைப்பைக்காட்ட வேண்டும்

## அமைச்சர் பாட்டலி சம்பிக்க தெரிவிப்பு



(கொழும்பு)

இந்தியாவை பொறுத்தவரை அந்த நாடு இலங்கையின் வடக்கு, கிழக்கை மாத்திரம் பார்க்காமல் முழு இலங்கையையும் பார்க்க வேண்டும் என்று அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க கோரியுள்ளார்.

இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் எண்ணங்களை பார்க்கும் போது அது இலங்கையில் பாரிய முன்னேற்றத்தை ஏற்படுத்தும்.

எனினும் இந்த விடயங்களில் இந்தியா இலங்கையின் அனைத்து பகுதிகளையும் கருத்திற்கொள்ள வேண்டும் என்று அவர் தெரிவித்தார்.

இந்தியா இலங்கையின் தமிழர்கள் மத்தியில் இந்திய - இலங்கை உடன்படிக்கையின் படி பாதுகாவலனாக செயற்பட்டுள்ளது.

அத்துடன் விடுதலைப்புலிகளுக்கு அது ஒருகாலத்தில் ஆதரவையும் வழங்கியது. இது சிங்கள மக்கள் மத்தியில் வெறுப்பை ஏற்படுத்தியது. எனவே இந்தியாவின் எண்ணங்களில் மாற்றம் வேண்டும்.

இலங்கை இந்தியாவின் ஒரு பகுதி இல்லை. இலங்கைக்கும் கலாசார பண்புகள் என்ற பல் வேறு விடயங்கள் உள்ளன.

இந்நிலையில் இலங்கையில் இசை, சினிமா, கிரிக்கெட் என்று மட்டுமல்லாமல் இந்து மத மற்றும் பௌத்த மதங்களின் பொதுவான தோற்றப்பாடுகள் விடயத்தில் இந்தியா தமது முனைப்பை காட்ட வேண்டும் என்று ரணவக்க கோரியுள்ளார்.

# தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் இந்தியப் பிரதமரின் சரியான பதில் தேவை

## பாதிக்கப்பட்ட மக்கள் இயக்கத்தின் தலைவர் வி.சகாதேவன் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

இந்தியப் பிரதமரிடம் இருந்து தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் சரியான பதில் கிடைக காவிடில் இந்திய பிரதமர் யாழ். வரும் போது தாம் கண்டனத்தை தெரிவிக்கும் வகையில் போராட டம் மேற்கொள்ளவுள்ளதாக போரால் பாதிக்கப்பட்ட மக்கள் இயக்கத்தின் தலைவர் வி.சகா தேவன் நேற்றுமுன்தினம் தெரி வித்தார்.

இங்குள்ள மக்கள் பிரதிநிதிக ளிடம் நாளை வியாழக்கிழமை வரும் இந்தியப் பிரதமர் தமிழ் மக்களின் எதிர்காலம் தொடர்பில உத்தரவாதம் வெளிப்படையாக கிடைக்காவிடில் அவரின் வருகை தொடர்பில் கண்டனம் தெரிவிக்க வுள்ளதோடு வடக்கு கிழக்கு மக்களை பிரதிநிதித்துவப்படுத்தி மக்களின் உணர்வுகள் வெளிப் படுத்தும் வகையில் போராட்டம் நடாத்தவுள்ளோம்.

மக்களின் பிரச்சினைகள் பல இருக்கின்ற போதும் மீனவர்க ளின் பிரச்சினை மட்டும் பேசப் படுகின்றது. இதை திசை திருப் பும் செயலாகத்தான் பார்க்கிறோம். இந்திய பிரதமரின் விஜயம் ஒரு கலாசார நிகழ்வல்ல. எங்க ளது இழப்புக்களை பார்வையி டவே வருகிறார். இது தொடர் பில் அரசியல்வாதிகள் விழிப்பு ணர்வு இல்லாமல் இருக்கிறார் கள் அவர் வரும் போது எந்தப் பிரச்சினையும் ஏற்படக்கூடாது என்ற நிலைப்பாட்டுடனேயே இருக்கிறார்கள். அது அல்ல நிலைப்பாடு. இது ஒரு சந்தர்ப்பம் இதற்கு பிறகு இத்தீர்வுகான விஜயம் இன்னொரு 30 வரு டத்திற்கு பிறகுதான் வரும். எனவே இச்சந்தர்ப்பத்தில் எமது மக்களின் பிரச்சினைகள் தொடர் பில் அவர் தெளிவாபுரிந்து கொள் ளும் வகையில் செயற்பட வேண் டும் என அவர் மேலும் தெரி வித்தார். (இ,25)

## கணபதி பாலர் பாடசாலையின் ஆக்கத்திறன் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறை நெடியகாடு கணபதி பாலர் பாடசாலை பாலர்களின் ஆக்கத்திறன் கண்காட்சி நாளை வியாழக்கிழமை காலை 9.00 மணி தொடக்கம் மாலை 4.00 வரை கணபதி பாலர் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

கணபதி படிப்பகத்தின் தலைவர் பூ.அகமணிதேவர் தலை மையில் நடைபெறவுள்ள இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வடமராட்சி கல்வி வலய முன்பள்ளி உதவிக்கல்விப் பணிப் பாளர் சி.தில்லைநாதன் கலந்துகொண்டு கண்காட்சியை ஆரம்பித்து வைக்கவுள்ளார்.



ACS Computer நிறுவனத்தின் நான்காம் ஆண்டு நிறைவு விழாவும் சான்றிதழ் வழங்கும் வைபவமும் கடந்த ஞாயிற்றுக்கிழமை சரஸ்வதி மண்டபத்தில் இடம்பெற்ற போது...

## பொதுக்கூட்டம்

(வேலணை)

யாழ்.பிரதேச செயலக கலாசார பேரவையின் 2015 ஆம் ஆண்டுக்கான வருடாந்த பொதுக்கூட்டமானது கடந்த 6 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் யாழ்.பிரதேச செயலர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரம் தலைமையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

மேற்படி 2014 ஆம் ஆண்டில் நடைபெறவேண்டிய கலாசார விழாவானது கடந்த மாதம் 27 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை யாழ்.பிரதான வீதியில் அமைந்துள்ள திருமறைக்கலாமன்ற கலைத் தூது மண்டபத்தில் நடைபெற்றிருந்தது அவ்வாறு நடைபெற்றிருந்த கலாசார பெருவிழா பற்றிய விமர்சனங்களும் மதிப்புரைகளும் இடம்பெற்றபின் இன்றைய கலாசார விழுமியங்கள் பற்றி சபை யோர் மத்தியில் கலந்துரையாடப்பட்டதுடன் இவ்வருடத்துக்கான கலாசார விழாவினை வெகுசிறப்பாக கொண்டாட வேண்டிய அவசியம் பற்றியும் அனைவரும் ஒற்றுமையாக செயற்பட்டால் வெற்றி நிச்சயம் என்ற எண்ணக்கூற்றுடன் புதியாண்டுக்கான நிர்வாகிகள் தெரிவுகளும் இடம்பெற்றிருந்தன. (05)




# பந்துவீச்சின் ரகசியம் வெளியிட்டார் ஷமி



இந்திய முன்னணி வேகப்பந்து வீச்சாளர் முகமது ஷமி, தனது பந்து வீச்சின் இரகசியம் குறித்து கூறியுள்ளார்.

இந்திய வேகப்பந்து வீச்சாளர் ஷமி, உலகக்கிண்ண தொடரில் 3 போட்டிகளில் விளையாடி 9 விக்கெட்டுகளை சாய்த்துள்ளார்.

இந்நிலையில் தனது வெற்றிக்கான காரணம் குறித்து ஷமி கூறியதாவது,

சமீபத்தில், சொகைப் அக்தரிடம் (பாகிஸ்தான் முன்னாள் அதிவேக பந்து வீச்சாளர்) பேசிக் கொண்டிருந்தபோது, எனது ஓட்ட தூரத்தை குறைக்கும் டிப்சை அவர்தான் கொடுத்தார்.

அவரது அறிவுரையை பின்பற்றிய பிறகு வெற்றி மீது வெற்றி கிடைத்து வருகிறது.

எனது பந்து வீச்சில் வேறு எந்த மாற்றத்தையும் ஏற்படுத்திக்கொள்ள விரும்பவில்லை. ஏனெனில், மாற்றம் என்பது இரு புறமும் கூரான வாள் போன்றது.

சில நேரங்களில் நாம் விரும்பியபடி மாற்றத்தைத் தரும், சில நேரங்களில், சொதப்பவும் செய்யும். எனவே, ஓட்ட தூரத்தை குறைத்ததை தவிர, வேறு எந்த மாற்றத்தையும் செய்ய நான் விரும்ப வில்லை.

சரியான அளவில், சரியான உயரத்தில் பந்து வீசுவது மட்டுமே எனது குறிக்கோள் என்று கூறியுள்ளார்.

## உலகக் கிண்ணம் 2015

### இன்றைய ஆட்டம்

ஸ்கொட்லாந்து
எதிர்
இலங்கை

இடம்– ஹோபர்ட்
நேரம்– காலை
09.00

### நாளைய ஆட்டம்

தென்னாபிரிக்கா
எதிர்
ஐக்கிய அர்பு இராச்சியம்

இடம்– வெலிங்டன்
நேரம்– பகல் 06.30

# புதிய சாதனை

உலகக்கிண்ண லீக் போட்டியில் இந்திய அணி புதிய சாதனையை படைத்துள்ளது. 2015 ஆம் ஆண்டுக்கான உலகக்கிண்ண லீக் போட்டியில் தொடர்ந்து 5 அணிகளை முழுமை யாக ஆட்டமிழப்பு செய்து நியூசிலாந்து சாதனை படைத்துளளது.


தற்போது இந்தச் சாதனையை சமன் செய்துள்ளது இந்தியா. நியூசிலாந்தின் ஹமில்டன் நகரில் நேற்று நடந்த போட்டியில் இந்தியா - அயர்லாந்து அணிகள் மோதின.

முதலில் துடுப்பெடுத்தாடிய அயர் லாந்து 49 ஓவர்களில் 259 ஓட்டங்களை எடுத்து அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது.

இந்த உலகக் கிண்ணத் தொடரில் இந்திய அணி தொடர்ந்து ஐந்தாவது முறையாக எதிர் அணியை முழுமையாக ஆட்டமிழப்பு செய்து புதிய சாதனையைப் படைத்துள்ளது,

# அயர்லாந்தையும் வீழ்த்தி வெற்றிப் பயணத்தில் இந்தியா

(ஹமில்டன்)



தவானின் சதத்தின் உதவியுடன் அயர்லாந்திற்கு எதிராக நேற்று நடைபெற்ற போட்டியில் இந்திய அணி 8 விக்கெட்டுக்களால் அபார வெற்றி பெற்றது. நியூஸிலாந்து ஹமில்டன் நகரில் நேற்று நடைபெற்ற இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற அயர்லாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

இதற்கமைய அவ்வணியின் போட்டர்பீல்ட், ர்லிங் இணை ஆரம்ப ஜோடியாக கள மிறங்கி சிறந்த அடித்தளத்தை இட்டது.

எனினும் இந்த ஜோடியை (ஸ்ரிர்லிங்) அஸ்வின் பிரித்தார். இதனைத் தொடர்ந்து ஜோய்ஸ் கள மிறங்கினார். எனினும் அவர் வநத வேகததிலேயே நடையைக் கட்டினார்.

இதன் பின்னர் ஓ பிரையின களம்புகுந தார் அஙகு வரும் போட்டர் பீல்டும சிறப்பாக விளை யாடியவேளை மோகித்சர்மாவால் போட்டர் பீல்ட வெளியேற்றப்பட்டார்.

இதனையடுத்து ஓ பிரையின் தனி ஆளாக நின்று போராடிய வேளையிலும், ஏனையவர்கள் அவருக்கு ஒத்துழைக் காமையினால் அயர்லாந்து அணி 49 ஓவரில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 259 ஓட்டங்களைப் பெற்றது.

அவ்வணி சார்பாக ஓ பிரையின் 75, போட்டர் பீல்ட் 62, ஸ்ரிர்லிங் 42, பல்பிரைன் 24 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் மொகமட் ஷமி 3, அஸ்வின் 2, உமேஷ்யாதவ் மோகித் சர்மா, ஜடேஜா மற்றும் ரெய்னா ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டுகளை கைப்பற்றினர். இதையடுத்து 260 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற நிலையில் ரோகித் சர்மா, தவான் இருவரும் களமிறங்கினர். இருவரும் அயர்லாந்து பந்துவீச்சைப் புரட்டியெடுத்து ரன்வேட்டை நடத்தினர். இவர்கள் இருவரும் இணைப்பாட்டமாக 174 ஓட்டங்களைப் பெற்றவேளை ரோகித சர்மா 64 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். இதன்பின் தவாலுடன் ஹோலி இணைந்தார். இவரும் தன் பங்கிற்கு விளையாடவே சதமடித்து அசத்திய தவான் ஆட்டமிழந்தார். பின்னர் ரஹானே ஹோலியுடன் இணைந்து அதிரடியில் கலக்க இந்திய அணி 36.5 ஓவரில் 260 ஓட்டங்களைப் பெற்று 8 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது. துடுப்பாட்டத்தில் தவான் 5 சிக்ஸர்கள். 11 பவுண்டரிகளுடன் 100, ரோகித் சர்மா 64 ஆட்டமிழக்காமல் ஹோலி 44, ரஹானே 33 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் மூனே, ஓ பிரையின் இருவரும் தலா ஒரு விக்கெட்டை கைப்பற்றினர் போட்டியின் ஆட்ட நாயகனாக தவான் தெரிவானார்.

**ஒரே பார்வையில் போட்டி முடிவுகள்**

**அயர்லாந்து - 259 / 00**

| | | | | |
|---|---|---|---|---|
| போட்டபீல்ட் | 67 | (93) | மொகமட்ஷமி | 3 -41 |
| ஸ்ரீர்லிங் | 42 | (41) | அஸ்வின் | 2- 38 |
| ஓ பிரையின் | 75 | (75) | | |

**இந்தியா - 260 /02**

| | | | | |
|---|---|---|---|---|
| தவான் | 100 | (85) | மூனே | 2 - 44 |
| ரோகித்சர்மா | 64 | (66) | ஓ பிரையின் | 1 - 42 |
| ஹோலி | 44 | (42) | | |
| ரஹானே | 33 | (28 | | |

**ஆட்டநாயகன் - தவான்**

# பந்துவீச்சாளர்களை பாராட்டும் டோனி

உலகக் கிண்ணப் போட்டிகளில் பந்துவீச்சாளர்களின் பங்கு சிறப்பாக உள்ளது என இந்திய அணித்தலைவர் டோனி புகழாரம் சூட்டியுள்ளார். அயர்லாந்துக்கு எதிரான நேற்றைய ஆட்டத்தில் இந்திய அணி 8 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

இதுகுறித்து அணித்தலைவர் டோனி கூறுகையில், பயிற்சியாளர்களில் ஒருவர் கூறினார் 5 போட்டிகளிலும் 50 விக்கெட்டுகளைக் கைப்பற்றியுள்ளோம் என்று, இது உண்மையில் அபார மான தொடக்கம். இந்திய அணிக்காக தங்களது பணியை பந்துவீச்சாளர்கள் சிறப்பாக செய்கின்றனர் என்பதே இதன் பொருள். வேகப்பந்து வீச்சாளர்கள் மட்டுமல்லாது, சுழற்பந்து வீச்சாளர்களும், பகுதி நேர பந்துவீச்சாளர்களும் கூட சிறப்பாகச் செயற்படுகின்றனர்.

அயர்லாந்து அணியில் நிறைய இடது கை வீரர்கள் இருப்பதால், சுரேஷ் ரெய்னாவை பயன்படுத்த முடிவு செய்தேன். அதன்படி அவரும் தனது பங்கை சிறப்பாகச் செய்தார். அனைவரும் மகிழ்ச்சியாக உள்ளனர், 9 உலகக் கிண்ணப் போட்டிகளை வரிசையாக வெல்வதும் மகிழ்ச்சி அளிக்கிறது என்று தெரிவித்துள்ளார்.

# கித்துருவான், கௌஷால் அவுஸ்ரேலியா சென்றனர்







உபாதை மற்றும் காயத்திற்குள்ளாகியுள்ள இலங்கை கிரிக்கெட் அணி வீரர்களான தினேஷ் சந்திமால், ரங்கன ஹேரத் ஆகியோருக்கு தயார் நிலை வீரர்களாக கித்ருவன் வித்தானகேயும் தரிந்து கௌஷாலும் நேற்றுமுன்தினம் இரவு அவுஸரேலியாவுக்கு அனுப்பி வைக்கபபட்டனர்.

தெரிவாளர்களுக்கும் அணி முகாமைத்துவத்திற்கும் இடையில் நடைபெற்ற கலந்துரையாடலை அடுத்து இந்தத் தீர்மானம் எடுக்கப் பட்டுள்ளது.

புதிதாக அனுப்பப்படும் இவர்கள் இருவருக்கும் போதிய சர்வ தேச கிரிக்கெட் அனுபவம் இல்லாத போதிலும் உள்ளூர் போட்டிகளில் அவர்கள் வெளிப்படுத்திய திறமைகளின் அடிப்படையிலேயே அனுப்பி வைக்கப்படுகின்றனர்.

எவ்வாறாயினும் சர்வதேச கிரிக்கெட் பேரவையின் தொழில் நுட்பக் குழுவினரின் அங்கீகாரம் கிடைத்தால் மாத்திரமே இவர்கள் இலங்கை குழாமில் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

# இங்கிலாந்து அணியில் வேண்டும் அதிரடி மாற்றம்

## முன்னாள் வீரர்கள் பாய்ச்சல்

இங்கிலாந்து அணியில் அதிரடியான மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என முன்னாள் வீரர்கள் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து முன்னாள் சகலதுறை வீரர் ஆல் ரவுண்டர் இயன் போத்தம் கூறியுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் கூறியதாவது,

பங்களாதேஷ் அணி மிகவும் சிறப்பாக விளையாடியது பாராட்டுக்குரியதாகும். இங்கிலாந்து அணியின் நிலை தற்போது மிகவும் பரிதாபகரமாக உள்ளது. ஒரு நாள் போட்டிக்கு ஏற்ற வீரர்களை இங்கிலாந்து தேர்வு குழு தேர்வு செய்யவில்லை.

தற்போது இங்கிலாந்து அணியில் அதிரடியான மாற்றம் செய்ய வேண்டும். அதற்கு சரியான நேரம் இதுவே என போத்தம் கூறியுள்ளார.

இங்கிலாந்து முன்னாள் கப்டன ஸ்ட்ாரஸ் கூறும்போது, இங்கிலாந்து அணியில் மாற்றம் செய்ய இதுவே சரியான நேரம். மற்ற சிறந்த அணிகளுடன் ஒப்பிடுகையில் இங்கிலாந்து மைல் கணக் கல்லிந்தங்கி இருக்கிறது என்றார்.

இங்கிலாந்து முன்னாள் துடுப் பாட்டவீரர் அலன் லம்ப் கூறும் போது, தவறான அணியை தேர்வுக்குழு தேர்வு செய்து உள்ளது. வீரர்களின் ஆட்டத்திறன் மிகுந்த ஏமாற்றத்தை அளிக்கிறது என்றார்.

# தொடக்க சுற்றில் வெளியேற்றம் வருத்தத்தில் இயன் மோர்கன்



பங்களாதேஷுடனான தோல்வி குறித்து இங்கிலாந்து அணியின் கபடன் இயன் மோர்கன் கருத்துத் தெரிவிக்கையில், இந்த உலக கோப்பை போட் டிக்கு வந்ததில் இருந்து நாங்கள் கடுமையாக போராடினோம் ஆனால் தொடக்க சுற்றிலேயே வெளியேறியது எங்களுக்கு மிகுந்த வேதனை அளிக்கிறது.

பவுண்டரி எல்லை குறைவாக இருந்ததாலும், ஆடுகளம் நன றாக விளங்கியதாலும இலக்கை எட்டிப் பிடித்து விடலாம் என்று நினைத தோம். எங்களுடைய எதிர்பார்ப் புக்கு தக்கபடி நாங்கள் சிறப்பான ஆட்டத்தை அளிக்கவில்லை.

தொடக்கத்தில் வெளியேறி யது மிகுந்த ஏமாற்றத்தை அளிக் கிறது. வெளியேற்றம் இன் னும் எனக்கு ஆச்சரியம் அளிக்கிறது.

அடுத்து நாங்கள் என்ன செய் யப்போகிறோம் என்பது எதுவும் தெரியவில்லை. உலக கோப் பையை வெல்லும் திறமை கொணட அணியைத் தான் நாங்கள் தேர்வு செய்து இருந்தோம். ஆனால் நாங்கள் எங்களது திற மைக்கு ஏற்ப ஆற்றலை வெளிப் படுத்த வில்லை என்றார்.

# இங்கிலாந்துடனான வெற்றி மகிழ்ச்சி என்கிறார் மோர்தசா



உலகக் கிண்ணத் தொடரில் இங்கிலாந்தை வீழ்த்தி வெற்றி பெற்றது மகிழ்ச்சி அளிப்பதாக வங்கதேஷ் வீரர் மோர்தசா தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் நடந்த லீக் போட்டியில் இங்கிலாந்தை எதிர் கொண்ட பங்களாதேஷ் அணி 15 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

இந்த வெற்றியின் மூலம் இந்தத் தொடரிலிருந்து இங்கிலாந்து அணியை வெளியேற்றியதுடன், பங்களா தேஷ் அணி முதல் முறையாக காலிறுதிக்குள் அடியெடுத்து வைத்தது.

வெற்றிக்குப் பின்னர் பங்களாதேஷ் அணித் தலைவர் மோர் தசா கூறுகையில், இது பெருமைக்குரிய வெற்றியாகும். ஆடுகளம் நன்றாக இருந்தது. நாங்கள் நன்றாக பந்து வீசினோம். எங்களது பந்து வீச்சு தொடக்கத்தில் சரியாக அமையாவிட்டாலும், பிடிகள் ஓவர்களில் சிறப்பாக இருந்ததுடன், இங்கிலாந்து அணிக்கு நல்ல நெருக்கடியும் அளித்தது. தமிம் இக்பால் சிறந்த களத்தடுப்பாளர் கிரிக்கெட்டில் பிடிகள் நழுவுவது நடக்கத்தான் செய்யும். முடிவில் நாங்கள் வெற்றி பெற்றது மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது என்று குறிப்பிட்டார்.

# துடுப்பாட்டத்தில் ஆபத்தான வீரர்

னாபிரிக்காவின் டிவில்லியர்ஸ், இந்தியாவின் ஹோலியை விட இலங் கையின் சங்கக்கார மிக் ஆபத்தான துடுப்பாட்ட வீரர் என தெரிவித்துள்ளார் முத்தையா முரளிதரன்.

உலகக் கிண்ணப் போட்டிகளில் இலங்கை அணியின் விக்கெட் காப்பாளர் குமார் சங்கக்கார அடுத்தடுத்து மூன்று போட்டிகளில் சதமடித்து, புதிய சாதனை படைத்தார்.

இதுகுறித்து முத்தையா முரளிதரன் கூறியதாவது, அவுஸ்ரேலியாவுடன் இலங்கை தோற்றிருந்தாலும் அதன் ஆட்டம் கவர்வதாக உள்ளது.

பந்துவீச்சாளர்கள் அதிக ஓட்டங்களை விட்டுக் கொடுத்திருந்தாலும், துடுப்பாட்ட வீரர்கள் தக்க பதிலடி கொடுத்தனர்.

தற்போது உலகின் முதல்நிலை துடுப்பாட்ட வீரர் என்றால் அது குமார் சங்கக்கார தான்.

நீங்கள் வீராட் ஹோலி, டிவில் லியர்ஸ், மக்ஸ்வெல் பற்றி என்னதான் பெருமையாக பேசினாலும் தற்போதைய முதல்நிலை வீரர் சங்கக்கார தான்.

மற்ற வீரர்கள் சிறப்பாக விளை யாடியிருந்தாலும், ஒரு வீரரை பார்த்து பிற அணிகள் அச்சப்படுகின்றன என்றால், அது சங்கக்காரவை பார்த்துத்தான்.

இந்த உலகக் கிண்ணப் போட்டிக ளுடன் சங்கக்கார ஓய்வு பெறும் முடிவில் இருப்பதால் தன்னுடைய முழுத் திறனை யும் வெளிப்படுத்தி சிறப்பாக விளையாடி வருகிறார் என முரளி மேலும் தெரிவித் துள்ளார்.

# கோட்டமட்ட மெய்வல்லுநர்

உடுவில் கல்விக் கோட்ட மெய்வல்லுநர் போட்டி நாளை வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு இணுவில் இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ளது.

உடுவில் கல்விக் கோட்டப் பணிப்பாளர் சி.தர்மலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.கந்தசாமி கலந்துகொள்ளவுள்ளார்.

போட்டிகளில் பங்குபற்றும் மாணவர்களை உரிய நேரத்திற்கு வருகை தருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (66)

# டிறிபேக் தாரகையுடனான போட்டி வென்றது மானிப்பாய் இந்து

சாவகச்சேரி டிறிபேக் தாரகை விளையாட்டுக்கழகத்துடன் நடைபெற்ற சிநேகபூர்வ கிரிக் கெட் போட்டியில் மானிப்பாய் இந்துக் கல்லூரியின் 19 வயதுப் பிரிவு அணி 7 விக்கெட்டுகளால் வெற்றியீட்டியது.

இரு அணிகளுக்குமிடை யிலான 50 ஓவர்கள் மட்டுப்படுத் தப்பட்ட கிரிக்கெட் போட்டி மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் கடந்த வியாழக் கிழமை நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வென்ற சாவகச்சேரி டிறிபேக் தாரகை அணி முதலில் துடுப்பெடுத்தாடி 29.4 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 183 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் என்.தசிந்தன் 58, எல்.மார்க்சிங் 33 ஓட்டங்களை யும் பெற்றனர்.

184 என்ற வெற்றியிலக்குடன் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய மானிப்பாய் இந் துக் கல்லூரி அணி, 26.4 ஓவர் களில் 3 விக்கெட்டுகளை மாத் திரம் இழந்து வெற்றியிலக்கை அடைந்தது.

துடுப்பாட்டத்தில் பிரதீபன் 68 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத் தார். (48)



அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையில் பெண்களுக்கான குத்துச் சண்டைப் போட்டியில் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி மாணவி சிவனேஸ்வரன் டிலக்சனா மூன்றாவது இடத்தினைப் பெற்றுக கொண்டாரென கல்லூரியின் அதிபர் சின்னத்தம்பி சுப்பிரமணி யேஸ்வரன் தெரிவித்துள்ளார். அகில இலங்கை குத்துச் சண்டை சம் மேளனத்தினால் நடாத்தப்பட்ட போட்டியிலேயே தமது கல்லூரி யின் மாணவி மூன்றாம் இடத்தினைப் பெற்றுக்கொண்டதாகவும் பாட சாலை முதல்வர் தெரிவித்தார். இம்மாணவிக்கான மதிப்பளிப்பு நிகழ்வு பாடசாலையில் நடைபெற்றதாகவும் தெரிவித்தார். (160)

# மைதானம் திறப்பு

(அளவெட்டி)

இளவாலை புனித் ஹென்றி யரசர் கல்லூரியின் கூடைப் பந்தாட்ட மைதான திறப்பு விழா அண்மையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் லெப்டினன்ட் கேணல் திருநாவுக்கரசு பிரதம விருந்தினராக கலந்துகொண்டு மைதானத்தை திறந்து வைத் தார்.

இந்நிகழ்வில் 19 வயதுப் பிரிவு ஆண்களுக்கான தாச்சிப் போட்டி நடைபெற்றது. மானிப் பாய் ஏஞ்சல் சர்வதேச பாட சாலையும் யாழ். இந்துக் கல்லூரி யும் மோதின. இதில் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை வெற்றி பெற்றது. (93)


# வல்வையை வென்றது யாழ். சென். மேரிஸ்



நெடியகாடு இளைஞர் விளையாட்டுக்கழகம் நடாத்திய உதைபந்தாட்டப் போட்டியில் வல்வையை வென்றது யாழ். சென்.மேரீஸ். நெடியகாடு இளை ஞர் விளையாட்டுக்கழகம் நடாத் தும் Jaffna Challengers கிண்ண உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி 2015 இன் ஆட்டத்தில் நாவாந் துறை சென். மேரிஸ் விளை யாட்டுக் கழகத்தை எதிர்த்து வல்வை விளையாட்டுக்கழகம் மோதியது.

ஆட்ட நேரம் முடிவடைய 5 நிமிடங்கள் உள்ள நிலையில் நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக்கழகம் ஒரு கோலினைப் பெற்று வெற்றி பெற்றது. நெடியகாடு இளைஞர் விளையாட்டுக்கழக மைதா னத்தில் போட்டி நடைபெற் றது.






# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அரசியல் கிழக்கில் தோல்விகண்டிருக்கின்றதா?

— எழுகதிரோன் கட்டுரையிலிருந்து.

ஜனாதிபதித் தேர்தல் இடம்பெற்ற ஜனவரி எட்டாம் திகதியிலிருந்து பலவித அரசியல் குழப்பங்கள் தொடர்ந்தவண்ணம் உள்ளன. அவற்றில் கிழக்கு மாகாண சபை விவகாரம் முக்கியத். துவம் பெறுகின்றது.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் பங்காளி கட்சியாக இருந்த முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் அகில இலங்கை(முஸ்லிம்) மக்கள் காங்கிரஸ் என்பன ஜனாதிபதித் தேர்தலில் எதிரணி வேட்பாளரை ஆதரித்தமையால் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் சார்பில் கிழக்கில் இடம்பெற்ற கூட்டாட்சி காலாவதியானது.

இந்தநிலையில் 37 உறுப்பினர்களை கொண்ட மாகாண சபையில் வெறும் 11 உறுப்பினர்களை மட்டுமே கொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தாம் ஆட்சி அமைக்கப் போவதாக அதிரடியாக அறிக்கைகளை வெளியிட்டனர். குறைந்த பட்சம் சாதாரண பெரும்பான்மையைக்கூட கொண்டிருக்காத கூட்டமைப்பினர் தமது கோரத்தை அடைந்துகொள்ள மேலும் 7 உறுப்பினர்களின் ஆதரவை பெறவேண்டியிருந்தது. அதனை அவர்கள் முஸ்லிம் காங்கிரஸ் வைத்திருந்த 7 உறுப்பினரிகளிடமும் 4 உறுப்பினர்களை கொண்ட ஐக்கிய தேசியக் கட்சியிடமும் எதிர்பார்த்தார்கள்.

ஆனால் முதலமைச்சர் பதவி யாருக்கு என்பதில் தமிழ் -முஸ்லிம் இரு தரப்பினருக்கும் இடையில் ஏற்பட்ட இழுபறி அந்த முயற்சியை தோல்வியடைய செய்தது. 2012 இல் முதலமைச்சரை முஸ்லிம்களுக்காக விட்டுக் கொடுக்க தயாராய் இருப்பதாக சொல்லிக்கொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அந்த விட்டுக்கொடுப்பை தற்போது செய்ய முன்வரவில்லை.

அப்படியொரு விட்டுக்கொடுப்பை செய்து முஸ்லிம்களுக்கு நேசக்கரம் நீட்டப்பட்டிருந்தால் அது நீண்டகாலத்துக்கு கிழக்கில் வாழும் தமிழ் பேசும் மக்களிடையே ஒரு பலமான இன ஒற்றுமைக்கு அடிகோலியிருக்கும்.

அதிகாரப்பரவலாக்கம் நோக்கிய தமிழ் முஸ்லிம் மக்களின் கோரிக்கைகளை வென்றெடுக்க அந்த இணைப்பு ஒரு பலமான அத்திவாரத்தை இட்டிருக்கும்.

கடந்தகாலங்களில் தமிழ் அரசியல் தலைவர்களாலும் ஆயுதமேந்திய இயக்கங்களினாலும் முஸ்லிம்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு ஒரு பரிகாரமாக அது மாறியிருக்கும். அதுமட்டுமல்ல கிழக்கு மாகாணத்தின் ஆட்சியை சிங்கள பேரினவாத கட்சிகள் தீர்மானிக்கும் வரலாற்றுக்கு அது ஒரு முற்றுப்புள்ளியை வைத்திருக்கும்.

எந்தவித பிரச்சினைகளுமின்றி அடுத்த கிழக்கு மாகாண சபைக்கான தேர்தலில் ஒரு தமிழ் முதலமைச்சரை மிக இலகுவாக உறுதிப்படுத்தியிருக்க முடியும். ஆனால் கிழக்கின் யதார்த்தத்தை புரிந்துகொள்ளாத தமிழரசு கட்சியின் தலைவர்கள் அந்த அரிய வாய்ப்பை வீம்புக்கு சீரழித்தனர்.

எந்த ரணில் விக்கிரமசிங்க சாட்சியாக யாழ்ப்பாணத்தில் வைத்து சிங்கக் கொடியை உயர்த்திக்காட்டி தேசிய ஒற்றுமைக்கு சம்பந்தர் அழைப்பு விட்டாரோ அந்த ரணில் தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியே கிழக்கு மாகாண சபையில் தமிழர்கள் ஆட்சியமைக்க எடுத்த முயற்சியின் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் காலை வாரி விட்டது.

இந்த நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆட்சியமைக்கும் முயற்சிக்கு மற்றுமொரு தெரிவு இருந்தது. எந்த ஜனாதிபதியின் வெற்றிக்கு தமிழ் மக்களின் லட்சக்கணக்கான வாக்குகளை வழங்க கோரி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் நிலைப்பாடு எடுத்தனரோ அதே ஜனாதிபதி தலைமையிலான "புதிய" ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடன் இணைந்து கிழக்கில் ஆட்சியமைக்கும் வாய்ப்பு இருந்தது.

ஆனால் அதை கூட்டமைப்பினர் தெரிவு செய்யவில்லை. மத்தியில் தேசிய நிறைவேற்று சபையில் அங்கம் வகிக்க முடியுமென்றால் மாகாணத்தில் ஏன் அந்த ஆட்சியாளர்களுடன் இணைந்து அந்த நல்லாட்சிக்கு வலுவூட்ட முடியாது?

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆட்சியமைக்கும் முயற்சி எல்லாவழிகளிலும் தோல்வியடைந்த நிலையில்தான் முஸ்லிம் காங்கிரஸ் தமக்கும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்குமான 2012 மாகாணசபை தேர்தல்கால ஒப்பந்தத்தை தொடரும் தந்திரோபாயத்தில் இறங்கியது. இது எவ்விதத்திலும் தமிழர்களுக்கு எதிரான நிலைப்பாடு என யாரும் வாதிட முடியாது.

உலகமகா அப்புக்காத்துகளின் வழிவந்த தமிழரசுக்கட்சி தலைமைதாங்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தோல்விகண்ட விடயத்தை முஸ்லிம் காங்கிரஸ் தனது இராஜதந்திரத்தால் வெல்லும் நிலைக்கு வந்தது. இது கூட்டமைப்பினரின் அரசியல் சாணக்கிய வங்குரோத்து தனமேயன்றி வேறல்ல.

இதன்பின்னர் வெற்றிலை சின்னத்தில் முஸ்லிம் காங்கிரஸ் கிழக்கில் ஆட்சியை தொடரும் ஒப்புதலோடுதான் முஸ்லிம் காங்கிரஸின் சார்பில் முதலமைச்சர் நியமனமானார். ஆனால் தமிழர்களை முஸ்லிம் காங்கிரஸ் ஏமாற்றிவிட்டது என்னும் பொய்யான பிரசாரத்தை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தலைவர்கள் அனைவருமே மிக மோசமான வார்த்தை பிரயோகங்களுடன் முன்னெடுத்தனர். தமிழர்களின் எதிரிகளாக முஸ்லிம்களை சித்தரிப்பது பரவலாக எல்லாவிதமான தமிழ் ஊடகங்களிலும் தாராளமாக இடம்பெற்றது.

அதன்பின்னரும் எந்தவித முகாந்திரமும் அற்ற நிலையில் இரு அமைச்சு பதவிகளை கேட்டு முஸ்லிம் காங்கிரசுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்கள் பேச்சுவார்த்தைகளை தொடர்ந்தனர். வெற்றிலை சின்னமும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஆட்சியும் தொடரும் நிலைவந்த பின்னர் முஸ்லிம் காங்கிரசுடன் பேசுவதில் எவ்வித அர்த்தமும் இல்லை. முஸ்லிம் காங்கிரஸ் கூட இவ்விதமான பேச்சுக்களை வெறும் ஒப்புக்கே நடத்தியது. ஆனால் காணி அமைச்சு எடுக்கின்றோம் கல்வியமைச்சு எடுக்கின்றோம் என்று கிழக்கு மாகாண தமிழ் மக்களில் காதில் பூ சுற்றினர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர்.

வெற்றிலையின் ஆட்சி தொடரும் வேளையில் ஆட்சியில் பங்கெடுப்பதென்றால் அவர்களுடன் பேசுவதை விடுத்து அவர்களின் தயவில் ஆட்சியமைக்கும் முஸ்லிம் காங்கிரசுடன் பேசுவதில் எவ்வித முகாந்திரமும் கிடையாது. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஆட்சிதான் தொடரப்போகின்றது என்றான பின்னர் முஸ்லிம் காங்கிரசுடன் பேசுவதென்பது சாட்சிக்காரன் காலில் விழுவதற்கு ஒப்பானது. அதை விட சண்டைக்காரன் காலில் விழுவது மேலானது என்பது சான்றோர் வாக்கு.

இப்போது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வேண்டுகோளின்படி அதன் சார்பிலான மேலும் இரு அமைச்சர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். மீண்டும் முஸ்லிம் காங்கிரஸ் தமிழர்களை ஏமாற்றிவிட்டது என்று கூட்டமைப்பின் தலைவர்கள் புராணம் பாட தொடங்கியுள்ளனர்.


வெறும் ஏழு உறுப்பினர்களை கொண்ட முஸ்லிம் காங்கிரசால் சாதிக்க முடிந்தவற்றை ஏன் தன்னகத்தே பதினோரு உறுப்பினர்களையும் ஒரு தமிழ் முதலமைச்சரின் அவசியம் கருதி நிபந்தனையற்ற ஆதரவு தருகின்றோம் என்று சொன்ன தமிழ் மக்கள் விடுதலைப்புலிகளின் இரு உறுப்பினர்களையும் கொண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரால் சாதிக்க முடியவில்லை? என்கின்ற கேள்விக்கு என்ன பதில்?

---

# கல்யாணக் கிராமம்!

முன்பு ஸ்கொட்லாந்து நாட்டில் 16 வயதுக்கு மேற்பட்டவர்கள் யாரும் திருமணம் செய்து கொள்ளலாம். பெற்றோர் சம்மதம் தேவையில்லை. ஆனால், இங்கிலாந்து நாட்டில் 21 வயது நிரம்பியவர்கள் தான் திருமணம் செய்துகொள்ள முடியும்.

இதனால் 16 வயதுக்கு மேற்பட்ட 21 வயதுக்குட்பட்ட காதல் ஜோடிகள் இங்கிலாந்தின் எல்லை அருகே உள்ள "கிரிட்னா கிரீன்" எனும் ஸ்கொட்லாந்து கிராமத்திற்குத் தப்பி வந்துவிடுவர். அங்கே திருமணப் பதிவாளர் தேவையில்லை. பாதிரி யார் தேவையில்லை. அங்குள்ள இரும்புப் பட்டறைக்காரர் ஜிம் ஜாக்சன் போதும். அவர் காதல் ஜோடிகளுக்கு திருமணத்தை நடத்தி விடுவார். அவர் 15 ஆண்டுகளில் இதுபோன்று 30 ஆயிரம் திருமணங்களை நடத்தியுள்ளார்.




இங்கிலாந்து அரசு 1969 இல் திருமண வயதை 18 ஆகக் குறைத்தது. இருந்தபோதும் காதல் ஜோடிகள் "கிரிட்னா கிரீன்" கிராமத்திற்குச் சென்றே கல்யாணம் முடிக்கின்றனர். காரணம் ராசிதான். தற்போது இங்கிலாந்து மட்டுமல்ல. உலகின் பல பகுதிகளில் இருந்தும் காதல் ஜோடிகள் இங்கு வந்து திருமணம் முடித்தவண்ணம் இருக்கிறார்கள்.

---

★ இடி, மின்னல் இருக்கும்போது கதவு, ஜன்னல் பக்கம் இருக்க கூடாது.

★ செல்போன், தொலைபேசியைப் பயன்படுத்தக் கூடாது.

★ இயர்போன் (Ear Phone), வோக்மன் (walkman) போன்றவற்றைத் தூக்கி தூர வைத்துவிட வேண்டும்.

★ டிவி, கம்ப்யூட்டர் போன்றவற்றை அணைத்து அதற்கான இணைப்புகளைத் துண்டித்து விடவேண்டும்.

★ உலோகத் தூண்கள், டிவி, அன்ரெனா, உலோகத்திலான கொடிமரங்கள் அருகில் நிற்க வேண்டாம்.

★ ஏரி, குளம், மலை உச்சி போன்ற பகுதிகளில் இருந்தால், அங்கிருந்து நகர்ந்துவிடுவது மிக மிக நல்லது.







# அருட்பா - மருட்பா விவாதம்

ஆறுமுக நாவலருக்கும், ராமலிங்க வள்ளலாருக்கும் நடைபெற்று வந்த போராட்டம், கடைசியில் நீதிமன்றத்தில் நிறுத்தி விட்டது.

நாவலர் தம் கல்விப் புலமைக்கு அத்தாட்சியாக, பிரபல வித்வான்களின் புகழ் மாலைகளும், பெரிய பெரிய பிரபுக்களின் நற்சாட்சிப் பத்திரங்களும், அவருடைய பலவித நூலாராய்ச்சிப் புத்தகங்களும், பதிவேடுகளும், மஞ்சகுப்பம் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டன. வள்ளலார் சார்பாக, தாக்கல் செய்ய அருட்பா தவிர வேறொன்றும் இல்லை.

அக்காலத்தில் விசாரணை நீதிபதியாக இருந்த கலெக்டர் துரை, இங்கிலாந்திலிருந்து உத்தியோகம் பார்ப்பதற்காக முதன் முதலாக சென்னை வந்தவர். விசாரணையன்று நீதிமன்ற வாயிற்படியருகே, ஏராளமான கூட்டம் உள்ளேயும் கும்பல். ஆறுமுக நாவலர் முன்னமே வந்து ஆசனத்தில் கம்பீரமாக அமர்ந்திருந்தார்.

"மணியாகிறது, இன்னும் ராமலிங்கரை காணோமே..." என, ஒருவருக்கொருவர் பேசிக் கொண்டிருந்தனர். நாவலரின் பதிவேடுகளை எல்லாம் கவனித்துப் பார்த்தார் கலெக்டர். வள்ளலாரின் பாடல்களையும் தமிழ் பண்டிதர் ஒருவர் மூலம் கேட்டு அறிந்தார்.

கூட்டத்தில் யாரோ, "ராமலிங்கர் வந்து விட்டார்..." என்று கூறினர். அவ்வளவு தான் நீதிமன்றில் நிசப்தம் குடி கொண்டது. முக்காடிட்ட வண்ணம் வாசற் படியில் நுழைந்தார் வள்ளலார். அமர்ந்திருந்த அனைவரும் எழுந்து, அவரை வணங்கினர். அச்சமயம், நாவலரும் தன்னையறியாமல் எழுந்தார்.

பின், வள்ளலார் இருக்கையில் அமர்ந்தார். கலெக்டர் முதலில் பேச வேண்டியதைப் பேசிவிட்டு, "பெரும் புலவர்கள் சண்டையிட்டுக் கொள்வது தவறு. நம் அனைவருக்கும் தெரியும், உலகில் காவியமே, அதாவது பாடலே சிறந்தது. கவி பாடுவோருக்குத் தான் அதிக புகழும், மதிப்பும். எங்கள் நாட்டில் மில்டன், ஷேக்ஸ்பியர், வேர்ட்ஸ்வொர்த், கீட்ஸ், ஷெல்லி, பைரன் முதலானோர் கீர்த்தியடைந்தது அவர்களின் கவிதை நூல்களால் தான்..." என்றவர், "இப்போது நீங்கள் இருவரும், நீங்கள் வழிபடும் இறைவனைக் குறித்து, இவ்விடத்தில் பாடுங்கள் எல்லாரும் கேட்போம்..." என்றார்.

அதற்கு நாவலர், "வசன மாலையாகத் தொடுப்போம்..." என்றார். வள்ளலார், ஸ்நானம் செய்து வர அனுமதி கேட்டார்.

குளித்து முடித்து நீதிமன்றுக்குள் பிரவேசித்த வள்ளலார், சிறிதும் தடுமாற்றம் இல்லாமல், நீரோட்டம் போல சில பாடல்களைப் பாடினார். அதைக் கேட்டதும், அங்கிருந்தோர் ஆனந்த பரவசத்தை வெளிப்படுத்தினர். கலெக்டர் வள்ளலாரை வாழ்த்தி, "அவரது பாடல்கள் அருட்பா தான் மருட்பா அல்ல..." என்றார். வழக்கு தள்ளுபடியாயிற்று.

(சி.பி.மாசிலாமணி முதலியார் நூலிலிருந்து)

## 100ஆவது படங்கள்!

- சாவித்திரி - கொஞ்சும் சலங்கை
- கே.ஆர்.விஜயா - நத்தையில் முத்து
- ஜெயலலிதா - திருமாங்கல்யம்
- ஜெயசித்ரா - நாயக்கர் மகள்
- ஸ்ரீப்ரியா - தனிக்காட்டு ராஜா
- ரோஜா - பொட்டு அம்மன்



# சினிமா சினிமா

பொருள் பொதிந்த சொற்களை வரிகளாகக் கொண்டு உருவாகும் பாடல்களை விட, அந்தந்த நேரங்களில் பரபரப்பாக உள்ள விஷயங்களைப் பாடலாக்குவதுதான் இப்போதைய ட்ரெண்ட். கானா உலகநாதன், கானா பாலா உள்ளிட்டோரின் வருகைக்குப் பின் சென்னை வட்டார வழக்கு வார்த்தைகள் பாடல்களாகின. கிடைத்த வரவேற்பையடுத்து, இந்தப் பாணியில் எழுதும் புதுக் கவிஞர்களின் வருகை அதிகரித்திருக்கிறது. அனேகன் படத்தில் இடம் பெற்ற "டங்கா மாரி ஊதாரி...." பாடல் மிகப் பிரபலமானது. அந்தப் பாடலை எழுதிய ரோகேஷுக்கு வாய்ப்புகள் குவிந்த வண்ணம் உள்ளன. ஜெயம்ரவி - ஹன்சிகா நடிப்பில் உருவாகும் "ரோமியோ ஜூலியட்" படத்துக்காக அதே பாணியில் டி.ராஜேந்தரைப் பற்றி பாடல் எழுதி உள்ளார் ரோகேஷ். "டண்டனக்கா எங்க தல எங்க தல டிஆரு... மைதிலி என்னை காதலின்னாரு... அவரு உண்மையா காதல் பண்ண சொன்னாரு... மச்சான் அங்கதான்டா எங்க தல நின்னாரு... என்று எழுதிய பாடலுக்கு இமான் இசையமைக்க அனிருத் பாடியுள்ளார்.

"ஜிகர்தண்டா" படத்தில் இடம் பெற்ற "டிங் டாங் உன்ன கட்டி வெச்சு உதப்பேன்டா...", "பீட்சா" படத்தில் இடம் பெற்ற "எங்கோ ஓடுகிறாய்...", "டார்லிங்" படத்தில் இடம் பெற்ற "வந்தா மலை..." "காக்கிச் சட்டை" படத்தில் வந்த "ஜம் ஷோ கூல்..." என வரிசையாக ஹிட்டடிக்கும் பாடல்களை எழுதி கவனம் ஈர்க்கிறார் அருண்ராஜா காமராஜ். அந்தந்த நேர வழக்கு வார்த்தைகளைக் கொண்டு பாடல்களை எழுதுவதுதான் இவரது பாணி. தற்போது பாடலாசிரியராக செயல்பட்டாலும், இயக்குநர் என்கிற முகத்தைத்தான் தேடிக் கொண்டிருக்கிறேன் என்கிறார். ராஜா ராணி படத்தில் சிறு வேடத்திலும் நடித்திருக்கிறார். சிவகார்த்திகேயன் இவரது கல்லூரி நண்பராம்.

"தென்மேற்கு பருவக்காற்று", "நீர்ப்பறவை" படங்களுக்குப் பிறகு சீனு ராமசாமியின் அடுத்த படைப்பு "இடம் பொருள் ஏவல்." முதலிரண்டு படங்களிலும் நாயகர்களாக நடித்த விஜய் சேதுபதியும் விஷ்ணுவும் சேர்ந்து இப்படத்தில் நடிக்கிறார்கள். எழுத்தாளர் எஸ்.ராமகிருஷ்ணன் கதை. "நூறு படங்களுக்கு இசையமைத்த யுவன். 10 ஆயிரம் பாடல்கள் எழுதிய வைரமுத்து. இவர்கள் இருவரும் இணைந்து என் படத்தில் பணியாற்ற வேண்டும் என்பது என் ஆசை. இப்படத்தின் தயாரிப்பாளர் லிங்குசாமிக்கு யுவன் நண்பர். எனக்கு வைரமுத்து ஒரு வழிகாட்டி. இருவரையும் இணைப்பது சுலபமாகி விட்டது" என்கிறார் இயக்குநர் சீனு ராமசாமி.


சொந்தப் பெயரில் நடிக்கும் நடிகைகள் மிகக் குறைவு. சிலருக்கு இயக்குநர்களே பெயர் சூட்டி விடுகின்றனர். வித்தகன் உள்ளிட்ட படங்களில் நடித்துள்ள பூர்ணா பிறமொழிகளில் ஷாம்னா காசிம் என்ற சொந்தப் பெயரில் நடிக்கிறார். சாலை விபத்தில் இறந்து போன தன் சகோதரரின் நினைவாக சாகர் என்ற பெயரை தன் பெயருடன் இணைத்துக் கொண்டார் பிந்து மாதவி. ஆரம்பத்தில் ஹன்சிகா மோத்வானி என்ற பெயரில் நடித்து வந்தவர் "தன்னை














ஹன்சிகா என்று அழைத்தால் மகிழ்வேன்" என அறிவித்தார். அதே போல் "கயல்" படத்தில் நடித்திருக்கும் ஆனந்தி ஏற்கெனவே தெலுங்குப் படங்களில் ரக்ஷிதா என்ற பெயரில் நடித்திருக்கிறார். இவரே பின் "பொறியாளன்", "விசாரணை" ஆகிய படங்களில் ஹசிகா என்ற பெயரில் நடித்தார். பின்னர் "கயல்" படத்துக்காக இயக்குநர் பிரபுசாலமன் அவருக்கு ஆனந்தி எனப் பெயர் சூட்டினார்.

விக்ரம் போன்ற நடிகர்கள் உடலை வருத்தி நடித்த போதும், விஜய் அது மாதிரியான, "ரிஸ்க்"கை இதுவரை எடுத்ததில்லை. ஆனால், தற்போது அவர் நடித்து வரும், புலி படம் சரித்திரக் கதை என்பதால், அதில் வரும் அப்பா கதாபாத்திரத்தில் நடிப்பதற்காக, இளவட்ட விஜய்யை விட உடல் எடையை குறைத்துள்ளார்.

1993இல், ஸ்டீவன் ஸ்பீல்பெர்க் இயக்கிய "ஜுராசிக் பார்க்" படம் திரைக்கு வந்தபோது, படத்தைப் பார்த்து, உலகம் முழுவதும் உள்ள ரசிகர்கள் மிரண்டு போயினர். இதன் இரண்டாவது பாகம், 1997இல், வெளியானது. இதற்கும் பலத்த வரவேற்பு கிடைத்தது. மூன்றாவது பாகம், 2001இல், வெளியானது. ஆனால், இந்தப் படத்தை ஸ்டீவன் ஸ்பீல்பெர்க் இயக்கவில்லை. இப்போது, 13 ஆண்டு இடைவெளிக்குப் பின், இதன் நான்காவது பாகம், "ஜுராசிக் வேர்ல்ட்" என்ற பெயரில்,





வெளிவரவுள்ளது. இதிலும், டைனோசர், துரத்தல், மிரட்டல் போன்ற பரபரப்பு காட்சிகள் உள்ளன. ட்ரெயிலர் சமீபத்தில் வெளியாகி, பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

தன் கவர்ச்சித் தாராளத்தால் பொலிவுட்டை, பல ஆண்டுகளாக கலக்கி எடுத்தவர் மல்லிகா ஷெராவத். அதன்பின், சன்னிலியோன், பொலிவுட்டில் கால் பதித்ததில் இருந்து, அவர்களுக்கிடையே பலத்த கவர்ச்சிப் போட்டி நிலவி வந்தது. தற்போது திடுதிப்பென்று, "கவர்ச்சியாக நடித்து போரடித்து விட்டது..." என்று அறிவித்துள்ளார் மல்லிகா ஷெராவத். அதோடு, இனிமேல் வித்யாபாலனைப் போன்று, கதாநாயகியை மையப்படுத்தும் கதைகளில் நடிக்க ஆர்வமாக இருப்பதாகவும் அறிவித்திருக்கிறார்.

டேர்ட்டி பிக்சர் மற்றும் கஹானி படங்களின் நாயகியான வித்யா பாலன், படங்களில் ஆபாசமில்லாத கவர்ச்சியைத்தான் வெளிப்படுத்தி வருகிறார். ஆனால், சமீபத்தில் ஒரு கலண்டருக்கு, கொடுத்துள்ள "போஸ்", ஆடை இல்லாமல், அவர் கையில் இருக்கும் செய்தித்தாள் அவரது உடம்பை மறைத்திருப்பது போல் அமைந்திருக்கிறது. கலண்டருக்கு மிக மிக கிராக்கி ஏற்பட்டுள்ளது.

# மக்களின் தேவைகளை இனங்கண்டு நிறைவு செய்பவர் டக்ளஸ் தேவானந்தா

- காரைநகர் பிரதேசசெயலக பிறப்பு, இறப்பு பதிவாளர் தெரிவிப்பு -



மக்களின் தேவைகளை இனம்காண்பது மட்டுமன்றி அவற்றை உரிய காலத்தில் நிறைவு செய்பவனே சிறந்த மக்கள் சேவகனாக விளங்க முடியும் அதற்கு உதாரணபுருசராக இருப்பவர் டக்ளஸ் தேவானந்தா மட்டுமே என காரைநகர் பிறப்பு இறப்பு பதிவாளர் திருமதி ஏகநாதன் புகழாரம் செய்துள்ளார்.

காரைநகர் மருதபுரத்தில் அமைந்துள்ள மருதமலை முருகன் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க கட்டட திறப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், டக்ளஸ் தேவானந்தாவை நான் நீண்டகாலமாக நன்கறிவேன். அவர் ஏழைகளின் தோழனாகவும் மக்களின் சேவகனாகவும் இருந்து பல்வேறுபட்ட சேவைகளை செய்து வருகின்றார்.

மேலும் மக்களின் தேவைகள் இனம்காணப்பட்டு அவற்றுக்கான சேவைகளை சிறந்த தலைமைத்துவத்தின் மூலம் முன்னெடுத்துக் கொண்டிருப்பவர் டக்ளஸ் தேவானந்தா மட்டுமே என்றும் சுட்டிக் காட்டினார்.

அதுமட்டுமன்றி எமது பகுதிக்கான வீதிகள் செப்பனிடப் பட்டுள்ள அதேவேளை, இருளிலிருந்த எமது கிராமத்துக்கு ஒளியூட்டிய பெருமை டக்ளஸ் தேவானந்தாவைச் சாரும் எனவும் தெரிவித்தார்.

இதன்போது ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்பாளர் குகேந்திரன், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் காரைநகர் பிரதேச இணைப்பாளர் வீ.கண்ணன், மாணிக்கம்மா, ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் உரையாற்றினர்.

## ஆயுர்வேத பாதுகாப்பு சபையின் வருடாந்த பொதுக்கூட்டம்

மன்னார் மாவட்ட செயலகர் பிரிவினது ஆயுர்வேத பாதுகாப்புச் சபையின் 14ஆவது வருடாந்த பொதுக்கூட்டம் நாளை மு.ப 10 மணியளவில் மன்னார் மாவட்ட செயலகத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி சங்கத்தின் தலைவர் வைத்திய கலாநிதி. செ.செல்வமகேந்திரன் தலைமையில் இடம்பெறவுள்ள கூட்டத்தில் பிரதம விருந்தினராக மன்னார் மாவட்ட செயலர் எம்.வை.எஸ் தேசப்பிரிய கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார். சிறப்பு விருந்தினர்களாக வட இலங்கை சுதேசவைத்திய சபையினது தலைவர் வைத்திய கலாநிதி சு.ஸ்ரீவிக்கினேஸ்வரா (ஜே.பி) அதன் செயலாளர் வைத்தியகலாநிதி ஜெ.ஜெயலன் (ஜே.பி) யாழ்.தொழில்நுட்ப கல்லூரியின் முதல்வர் கலாநிதி எஸ்.யோகராசா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

அத்துடன் வடமாகாணத்தை சேர்ந்த 60வயதுக்கு மேற்பட்ட சித்தஆயுர்வேத வைத்தியர்கள் குறிப்பாக வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி. யாழ்ப்பாணம் ஆகிய இடங்களை சேர்ந்த வைத்தியர்களுக்கு பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்படுவதுடன் பாராட்டுதல்களையும் பெற்றுக் கொள்ளவுள்ளார்கள். மேற்படி குறிப்பிட்ட மாவட்டங்களைச் சேர்ந்த 60 வயதுக்கு மேற்பட்ட சித்த ஆயுர்வேத வைத்தியர்கள் உடனடியாக வைத்தியகலாநிதி செ.செல்வமகேந்திரனுடன் 0779361237 என்ற கைத்தொலைபேசி மூலம் தொடர்புகளை ஏற்படுத்தி பதிவுகளை மேற்கொள்ளலாமென தெரிவிக்கப்படுகின்றது (05)

## பொதுக்கூட்டம்

பகிரங்க ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் வேலணைப் பிரதேச செயலர் பிரிவு சங்கத்தினது வருடாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் 19ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு வேலணை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் சங்கத்தினது தலைவர் எஸ்.கே.சண்முகலிங்கம் (ஜே.பி) தலைமையில் நடைபெறவுள்ளது.

அன்றைய விழாவில் பிரதமவிருந்தினராக வேலணை பிரதேச செயலர் திருமதி.மஞ்சுளாதேவி சதீஷன் கலந்து கொள்ளவுள்ளார். பிரதேச செயலக கணக்காளர் இரத்தினசிங்கம் ரமணன், அகில இலங்கை பகிரங்க ஓய்வூதியர் நம்பிக்கை சங்கத்தின் உப தலைவரும் யாழ்.மாவட்ட ஓய்வூதியர் சங்க சமாசத்தினது தலைவருமான வி.ஸ்ரீசக்திவேல் (ஜே.பி) ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது (05)

## தெல்லிப்பளை கோட்ட மட்ட தமிழ்த்தினப்போட்டி முடிவுகள்

வலிகாம வலய தெல்லிப்பளை கோட்ட மட்ட தமிழ்த்தினப்போட்டியின் முதல் மூன்று இடங்களைப பெற்ற மாணவர்களின் விபரம் வெளியிடப்பட்டுள்ளது.

நேற்றையதொடர்ச்சி ...

மாணவர்களின் விபரம் வருமாறு,

**தமிழியல் கட்டுரை வரைதலும், இலக்கிய நயத்தலும்**

**பிரிவு - I**

தே.உமையாசினி (யா/அருணோதயக்கல்லூரி) சு.டென்சியா(யா/மல்லாகம் மகாவித்தியாலயம்), உ.துரியா(யா/வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம்), நா.பவிசா(யா/இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயம்)

**சிறுகதைஆக்கம**

**பிரிவு - IV**

யோ.சிந்துஜா (யா/அருணோதயக்கல்லூரி), அ.ஜான்சிகா (யா/கீரிமலை நகுலேஸ்வரா மகா வித்தியாலயம்), சு.சிந்துஜா (யா/குளமங்கால் றோ.க.வித்தியாலயம்),

**பிரிவு - V**

இ.இனோசா (யா/அருணோதயக்கல்லூரி), தே.கபில்ஜா (யா/இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயம்),

**குறுநாடகஆக்கம்**

**பிரிவு - IV**

கு.ஜனுசியா (யா/அருணோதயக்கல்லூரி, செ.நிதுஷன் (யா/மயிலிட்டி வடக்கு கலைமகள் மகாவித்தியாலயம்), ச.நிலானி (யா/குளமங்கால் றோ.க.வித்தியாலயம்)

**பிரிவு - V**

உ.வேதிகா (யா/அருணோதயக்கல்லூரி), ர.சிந்துஜா (யா/வயாவிளான் மத்திய மகாவித்தியாலயம்), ஜே.ஜதுசா (யா/மல்லாகம் மகா வித்தியாலயம்) (17)

(தொடரும்)

## சேவைநயப்பு விழா

உடுவில் கல்விக்கோட்டத்தின் ஏற்பாட்டில் வலிகாமம் கல்வி வலய பிரதிக்கல்விப்பணிப்பாளர் சிதம்பரம் கந்தசாமியின் மணிவிழாவும் சேவைநயப்பு விழாவும் நாளை வியாழக்கிழமை முற்பகல் 11மணிக்கு இணுவில் இந்துக்கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

உடுவில் கோட்டக்கல்விப் பணிப்பாளர் சி.தர்மலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் வாழ்த்துரையை வலிகாம வலயக்கல்விப் பணிப்பாளர் செ.சந்திரராசா வடக்கு கிழக்கு மேலதிக மாகாணக்கல்விப் பணிப்பாளர் கலாநிதி தணிகாசலம் ஆகியோர் வழங்கவுள்ளனர். (66)






**மல்லாகம் கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி கனிஷ்ட வித்தியாலய வருடாந்த பரிசளிப்பு விழா அண்மையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது: இந்நிகழ்வில் விருந்தினர்கள் வரவேற்கப்படுவதையும் மாணவர்களின் கலை நிகழ்வையும் காணலாம்.**

## முரசின் இன்றைய பலன்

(11.03.2015 புதன்கிழமை)

ஜய வருஷம் மாசி மாதம் 27 ஆம் திகதி.
பஞ்சமிதிதி. சித்தாமிர்த யோகம்.
விசாக நட்சத்திரம் மு.இரவு 08.50 வரை. பின் அனுசம்.
இராகு காலம் 12.23 - 01.53 வரை. சுபநேரம் 04.53 - 06.23 வரை.



ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

**மேடம்**
எதிர்பாராது குருட்டு அதிர்ஷ்டம் ஏற்படல்.

**ரிஷபம்**
நியாயத்தைக் கேட்டவேளை முரண்பாடு தக்க வைத்தல்.

**மிதுனம்**
கணக்கில் நம்பகத்தன்மை ஏற்பட்டதால் வாழக்கையை முறித்தல்.

**கடகம்**
முறைப்பாடு சாதகமான விளைவினைக் கொண்டு வரல்.

**சிம்மம்**
தெய்வசெயலாக பொறுப்பின்றிக் கொடுத்த கடன் பணம் கைக்கெட்டல்.

**கன்னி**
புதிய ஜீவனின் தோற்றம் எண்ணி ஆனந்தமடைதல்.

**துலாம்**
வியாழகோசரம் 10இல் இருப்பதினால் இடமாற்றப் பீதி ஏற்படல்.

**விருச்சிகம்**
காலாவதியான பொருள் பெற்றதால் மனந்துயரடைதல்.

**தனுசு**
செய்யாத செயலுக்கு தண்டனை கிடைக்கும் நிலைப்பாடு ஏற்படல்.

**மகரம்**
குடும்பத்தில் நிலவியிருந்த சந்தேகக்கோடு நீங்குதல்.

**கும்பம்**
சமயோசித நிலைப்பாட்டினால் விபத்து விலகல்.

**மீனம்**
உணவுக்கட்டுப்பாட்டினால் நோயின் உக்கிரம் குறைவடைதல்.

# எரிபொருள் தாங்கியை இயங்க வைக்க கோரிக்கை

(கரணவாய்)

நெல்லியடி கட்டைவேலி பல.நோ. கூட்டுறவு சங்கத்துக்குட்பட்ட எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இரண்டு பெற்றோல் தாங்கி உள்ள நிலையில் ஒரு தாங்கியே செயற்படுவதாகவும் இதனால் பொது மக்கள் எரிபொருளை பெறுவதில் நெருக்கடி நிலையை எதிர்நோக்குவதாக தெரிவிக்கின்றனர்.

குறித்த எரிபொருள் நிலையத்திற்கு நாளாந்தம் அதிகளவான வாகனங்கள் எரிபொருளுக்காக வருகைதருகின்ற நிலையில் ஒரு எரிபொருள் தாங்கி மூலம் எரிபொருள் விநியோகம் இடம்பெறுவதால் வாகனங்கள் நீண்ட நேரம்காத்திருக்க வேண்டியுள்ளதாகவும் இதனால் அலுவலகங்களுக்குச் செல்வோரும் பாடசாலை மாணவர்களை ஏற்றிச் செல்வோரும் நெருக்கடிகளை எதிர்நோக்குவதாக சுட்டிக்காட்டப்படுகிறது.

குறிப்பாக காலை மற்றும் மாலை வேளைகளிலேயே இவ்வாறு மக்கள் அதிகளவில் கூடும் நிலையில் அத்தகைய நேரங்களில் மற்றைய எரிபொருள் தாங்கியையும் இயக்க வைத்தால் நெருக்கடி தவிர்க்கப்படும் என தெரிவிக்கும் மக்கள் இது தொடர்பில் உரியவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என கோரிக்கை விடுக்கின்றனர். (18)

# பள்ளம்புலம் சனசமூக நிலையத்தின் வருடாந்த கௌரவிப்பு நிகழ்வு



(வேலணை)

வேலணை பள்ளம்புலம் சனசமூகநிலையத்தின் வருடாந்த கௌரவிப்பு நிகழ்வும் உருவப்பட திரைநீக்க நிகழ்வும் பள்ளம்புலம் முருகமூர்த்தி ஆலயத்தின் மண்டபத்தில் நடைபெற்றது இந் நிகழ்வில் வேலணைப் பிரதேச சபையின் தவிசாளரும் ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் வேலணை பிரதேச அமைப்பாளருமாகிய சின்னையா சிவராசா (போல்) கலந்து சிறப்பித்தார்.

இந்நிகழ்வில் உரையாற்றிய அவர் - நீண்டகாலமாக மின்சார வசதிகள் இல்லாத நிலையில் மககள் இவ்விடத்தைவிட்டு வெளியேறியபின்னர் யாருமில்லாத இடங்களாக காணப்பட்டது இருப்பினும் மக்களுக்காக நாம் என்ற கொள்கையில் எமது கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவின் முயற்சசியால் வடக்கின் வசந்தம் திட்டத்தின் மூலம் மின்சார வசதி ஏற்படுத்தியிருக்கின்றார் அத்தோடு கடந்த வருடத்தில் பள்ளம்புலம் முருகமூர்த்தி சனசமூக நிலையத்திற்கு திருத்த வேலைக்காக அவரால் ஒரு தொகை நிதி ஒதுக்கீடு செய்து திருத்தம் செய்யப்பட்டு தற்போது அழகாக காட்சி அளிக்கின்றது அத்தோடு தற்போது தீவகம் வளர்ச்சி அடைந்துவருகையில் எமது மக்கள் இன்னமும் தமது சொந்தப் பிரதேசத்தை விட்டு வேறுபிரதேசத்தில் வசிப்பது கவலையளிக்கின்றது நாம் என்றும் மக்களுக்காக மக்களோடு மக்களிடமே இருக்கின்றோம் என்பதனைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன் எனவும் தமது உரையில் அவர் தெரிவித்தார்.

# வடமராட்சி முள்ளிப் பகுதியில் தொடரும் சமூக விரோத செயல்கள்

## - நடவடிக்கை எடுக்க மக்கள் கோரிக்கை

(கரணவாய்)

வடமராட்சி முள்ளிப்பகுதியில் திருட்டு, வழிப்பறிக் கொள்ளை, அச்சுறுத்தல் என்பன தொடர்ச்சியாக இடம்பெற்று வருவதால் இதனூடாக பயணத்தை மேற்கொள்ளும் மக்கள் அச்சத்துடன் செல்லவேண்டியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மக்கள் நடமாட்டம் குறைந்த இப்பகுதியில் தற்போது சமூக விரோதச் செயல்கள் இடம்பெற்றுவருவதாகவும் குறிப்பாக திருட்டு, வழிப்பறிக்கொள்ளை, உள்ளிட்ட செயற்பாடுகளால் மக்கள் அப்பகுதியூடாக செல்வதற்கு அச்சமடைவதாகவும் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக பெண்கள் இப்பகுதியூடாக செல்லமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கும் பொதுமக்கள் நெல்லியடி பொலிஸார் பொதுமக்களின் பாதுகாப்புக்கருதி இது தொடர்பில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கின்றனர். (J8)

# பூண்டிமாதா முன்பள்ளியில் மகளிர்தின நிகழ்வு



மன்னார் எமில்நகர் பூண்டிமாதா முன்பள்ளியில் கல்வி பயிலும் சிறார்களின் அன்னையர், ஆசிரியர்கள் இணைந்து முகாமைத்துவ குழு ஏற்பாட்டில் மகளிர் தின நிகழ்வுடன் மர நடுகையும் இடம் பெற்றது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்ற இந் நிகழ்வில் எமில்நகர் கிராம அலுவலர் கலந்து சிறப்பித்தார்.

# ஆயுர் வேதம்



## இயற்கை தந்த வரப்பிரசாதங்கள்!

ஒருசில இயற்கையான எளிய பழங்கள் மற்றும் உணவுப் பொருட்கள் இரத்தத்தில் அதிகரித்திருக்கும் கொழுப்பு மற்றும் சீனியின் அளவைக் குறைக்கக்கூடியவை. அவற்றைப் பற்றிய சிறுகுறிப்புகள்:

**கற்றாழைச்சாறு:** நிறைய விற்றமின், தாதுப்பொருட்கள், அமினோ அமிலம், என்ஸோம்கள் அடங்கியது. குடல் பகுதியைச் சுத்தப்படுத்தி பசியை நன்றாகத் தூண்டிவிடும். இதயநோய் பாதிப்பு ஏற்படாதவாறு பாதுகாக்கும். அதிலுள்ள antioxidants (ஒட்சிசனேற்றத் தடுப்பான்) நோய் எதிர்ப்புசக்தியை நன்றாக வளர்க்கக் கூடும்.

காலையில் வெறும் வயிற்றில் 30 மில்லி லீற்றர் கற்றாழைச்சாறு குடிப்பதால் உடலிலுள்ள நச்சுப்பொருட்களை வெளியேற்றுவதால் உடலுக்கு ஆரோக்கியத்தை மேம்படுத்தித் தரும்.

**நெல்லிக்காய் சாறு:** இதிலுள்ள விற்றமின் சி சத்தானது உடலில் எளிதில் சேருகிறது. நீரிழிவு நோயாளிகள், இதய நோயாளிகள், மூச்சிரைப்பு உபாதையால் கஷ்டப்படுபவர்கள், Scurvy எனும் தோல் உபாதையிலும் மலம் இளகிப்போகும் அவஸ்தையிலும் நெல்லிக்காய் சாறு ஓர் அருமருந்தாகப் ப்யன்படும்.

உடல் உறுப்புகள் அனைத்தும் நெல்லிக்காய் சாறினால் வளம பெறுகின்றன. தினமும் உணவில் 2 - 3 நெல்லிக்காய் சேர்த்து வரவும்.

**அப்பிள் பழம்:** இதிலுள்ள Quercetin எனும் அன்டி ஒக்ஸிடன்ட், உடலிலுள்ள அணுக்களைப் பாதிக்கும் ஒருசில ஒட்சிசன் Molecules-களைத் தடுக்கிறது மற்றும் இந்தப் பழத்தில் அடங்கியுள்ள Pectin குடல் பகுதியில் வேலை செய்கிறது. மற்றும் கல்லீரலிலிருந்து உற்பத்தியாகக் கூடிய கொழுப்பைக் குறைக்கிறது.

3கிராம் அளவில் நீரில் கரையக் கூடிய மற்றும் நீரில் கரையாத நார்ச்சத்து அப்பிளில் அடங்கியிருப்பதால் நல்ல ஆரோக்கியத்தை மனிதர்களுக்கு மேம்படுத்தித் தரும்.

**Apricots:** இதில் அடங்கியுள்ள carotenoids, beta carotene and lycopene ஆகியவை LDL எனும் கெட்ட கொழுப்பை இரத்தததில் நீர்க்கச் செய்து வெளியேற்றும் தன்மையுடையது.

**மருதம்பட்டை:** 8 மணிநேரம் சிறிது மருதம்பட்டையை தண்ணீரில் ஊற வைத்துக் குடிப்பதால் இதயநோய்களின் பாதிப்பு ஏற்படாதவாறு தடுக்கும்.

**தண்ணீர்விட்டான்கிழங்கு:** இதில் அடங்கியுள்ள Folate இரத்தத்தில் உள்ள அமினோ அமிலத்தைக் குறைப்பதால் ஒட்சிசனை ஏந்திச் செல்லும் இரத்தக் குழாய்களின் ஆரேர்க்கியம் மேம்படும். மிகவும் சக்திவாய்ந்த அன்டிஒக்ஸிடன்ட் நிறைந்ததொரு கிழங்காகும்.

**பார்லி:** இதில் அடங்கியுள்ள Tocotrienols மற்றும் Lignans இரத்தக்கட்டு ஏற்படும் [illegible]யக் குறைக்கிறது மற்றும் அதில அடங்கியுள்ள Beta glucan கொழுப்பைக் குறைக்கிறது.

**பீட்ரூட்:** இதில் அடங்கியுள்ள Carotenoids, Flavonoids ஆகியவை LDL எனும் கெட்ட கொழுப்பை இரத்த நாளங்களில் அடைப்பு ஏற்படாதவாறு பாதுகாக்கிறது. இரத்தக்கொதிப்பை பீட்ரூட் குறைப்பதால் மாரடைப்பு ம்ற்றும் பக்கவாதம் ஏற்படாதவாறு பாதுகாக்கக் கூடும். இதற்குக் காரணம் அதிலுள்ள நைதரேற்ஸ் எனும் இரசாயனம் நைத்திரிக் ஒக்ஸேட் எனும் வாயுவாக இரத்ததில் மாறுவதால் இரத்தக்குழாய்களை விரிவாக்குகிறது. இதை சிறிய அளவில் மட்டும் சாப்பிட்டால் போதுமானது.

**பாவற்காய்:** இயற்கை அன்னை அளித்த ஒரு வரப்பிரசாதம் இது. இதிலுள்ள Insulin like peptides, alkaloids, charantin ஆகியவை ஒன்று சேர்ந்து இரத்தத்திலுள்ள சீனி மற்றும் சிறுநீரில் வெளியேறும் சீனி அளவையும் நன்றாகக் குறைக்கும். இரத்தத்தைச் சுத்தப்படுத்தும். அதிலுள்ள cellulose எனும் நார்ச்சத்து மலச்சிக்கலை தடுப்பதோடு மட்டுமல்லாமல் கெட்ட கொழுப்பையும் நன்றாக குறைத்துவிடும்.

**Broccoli:** Beta carotene, sulforaphane, Vitamin C, folate, Calcium ஆகியவை நிறைந்த இந்த உணவுப்பொருள் இதய நோய் வராமல் எதிர்த்துப் போராடக் கூடியது.

மேற்குறிப்பிட்டது போல பலதரப்பட்ட சத்துகள் நிறைந்த முட்டைகோஸ், கோலிஃப்ளவர், லவங்கப்பட்டை, ஓமம், முட்டை வெள்ளைக்கரு, வெந்தயம், பூண்டு, வெங்காயம், ஓட்ஸ், தோடம் பழம், பப்பாசிப்பழம், பச்சைப்பட்டாணி, பேரிக்காய், மிளகு, மாதுளம பழம், பழுப்பு அரிசி, சோயா அவரை, முளைகட்டிய தானியங்கள், மஞ்சள்தூள், இஞ்சி, வெந்தயக்கீரை, வெங்காயத்தாள் கீரை, பூசணி, தக்காளிப்பழம், எலுமிச்சம்பழம் ஆகியவற்றை உணவில் தாராளமாகச் சேர்த்து உங்களுடைய உபாதைகளிலிருந்து நிவாரணம் பெறுவதோடு இதயநோய் தாக்கம் ஏற்படாதவாறும் பாதுகாத்துக் கொள்ளலாம்.

# 2463 மெற்றிக்தொன் நெல் வடக்கில் கொள்வனவு



(கொழும்பு)

வடமாகாணத்தில் இதுவரையில் 2463.077 மெற்றிக் தொன் நெல் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாக நெல் சந்தைப்படுத்தல் சபையின் பிராந்திய முகாமையாளர் டபிள்யு.ஆர்.ஏ.சாந்தகுமார தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

வடமாகாணத்தில் 10 ஆயிரம் மெற்றிக்தொன் நெல்லை கொள்வனவு செய்ய முடியும். ஒரு விவசாயியிடம் இருந்து 2 மெற்றிக்தொன் நெல் கொள்வனவு செய்யப்படும். வடமாகாணத்தில் சிவப்பு நாடு, வெள்ளை நாடு என்ற வகை நெல் ஒரு கிலோகிராம் 45 ரூபாவாகவும் சம்பா கிலோ 50 ரூபா ஆகவும கொள்வனவு செய்யப்படுகின்றது.

நெல் விற்பனை செய்யும் விவசாயிகள் பிரதேச செயலகங்களின் ஊடாக விண்ணப்பப் படிவத்தைப் பெற்று, அதனைப் பூர்த்தி செய்து மாவட்ட செயலாளரிடம் உறுதிப்படுத்தி நெல் மாதிரியையும் கமநல சேவை நிலையத்தின் ஊடாக தரும் பட்சத்தில் அவர்களிடம் இருந்து நெல் கொள்வனவு செய்யப்படும்.

யாழ். மாவட்டத்தில் புத்தூர், கொடிகாமம் கமநல சேவை நிலையங்கள் ஊடாக நெல் கொள்வனவு செய்யப்படுவதாகவும் இதுவரை யாழ்மாவட்டத்தில் இருந்து 197.024 மெற்றிக்தொன் நெல் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# இலஞ்ச, ஊழல் ஆணைக்குழுவின் செயற்பாடுகள் துரிதமாகும்

(கொழும்பு)

இலஞ்ச, ஊழல் ஆணைக்குழுவின் செயற்பாடுகளைத் துரிதப்படுத்தும் முகமாக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் நால்வர் உட்பட பொலிஸ் அதிகாரிகள் 53 பேரை உடனடியாக இணைத்துக் கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நியமனங்களுக்குப் புறம்பாக ஓய்வுபெற்ற பிரதிப் பொலிஸ் மா அதிபர்களான அசோக விஜேதிலக்க, நெவில் குருகே ஆகியோரும் தற்காலிக சேவையாளர்கள் என்ற அடிப்படையில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளதாகவும் ஆணைக்குழுவின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவரை மேற்கோள்காட்டி சிங்கள ஊடகமொன்று அறிவித்துள்ளது.

# அனைத்து மாவட்டங்களிலும் நேற்றுமுதல் அனர்த்த ஒத்திகை

(கொழும்பு)

நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் நேற்றுமுதல் அனர்த்தம் தொடர்பான ஒத்திகை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.


வெள்ளம், மண்சரிவு உள்ளிட்ட அனர்த்த நிலைமைகள் தொடர்பில் மக்களை தெளிவூட்டுவதே இந்த ஒத்திகையின் நோக்கமென இடர் முகாமைத்துவ நிலையத்தின் உதவிப் பணிப்பாளர் பிரதீப் கொடிப்பிலி தெரிவித்தார்.

அனர்த்த நிலைமைகளின் போது, பொது மக்கள் செயற்பட வேண்டிய விதம் தொடர்பில் இதன்போது தெளிவுபடுத்தப்படவுள்ளதாகவும், பல்வேறு நிறுவனங்கள் இதற்கு ஒத்துழைப்பு வழங்கவுள்ளதாகவும் அவர் கூறினார்.

இதுதொடர்பில் மக்கள் அச்சமடையத் தேவையில்லை என இடர் முகாமைத்துவ நிலையம் சுட்டிக்காட்டியுள்ளது.

அத்துடன், பொதுமக்களின் பூரண ஒத்துழைப்பு இந்த ஒத்திகை நடவடிக்கைக்கு அவசியம் எனவும் நிலையத்தின் உதவிப் பணிப்பாளர் பிரதீப் கொடிப்பிலி மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# வெளிநாட்டு உத்தியோகத்தர்களின் வெற்றிடங்களை நிரப்ப ஏற்பாடு



(கொழும்பு)

தூதுவர்கள் உள்ளிட்ட வெளிநாட்டு சேவை உத்தியோகத்தர்களுக்கு 29 வெற்றிடங்கள் காணப்படுவதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்த அரசாங்கத்தினால் அரசியல் தலையீட்டினால் வழங்கப்பட்ட அரசியல் நியமனங்கள் இரத்துச் செய்யப்பட்டதால், இந்த வெற்றிடம் ஏற்பட்டுள்ளதாக வெளிவிவகார பிரதி அமைச்சர் அஜித பி பெரேரா தெரிவித்தார்.

இந்த வெற்றிடங்களுக்கு தகுதியானவர்கள் காலதாமதமின்றி விரைவில் நியமிக்கப்படவுள்ளதாகவும் பிரதி அமைச்சர் கூறினார்.

வெளிநாட்டு சேவையில் கடந்தகாலங்களில் இரண்டாம் மற்றும் மூன்றாம் மட்ட பதவிகளுக்கு 36 பேர் அரசியல் சிபாரிசில் நியமிக்கப்பட்டிருந்ததாக அவர் சுட்டிக்காட்டினார்.

புதிய நியமனங்கள் குறித்த பரிந்துரைகள் ஜனாதிபதிக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும், ஜனாதிபதியின் அனுமதி கிடைத்தவுடன் அவற்றை நாடாளுமன்ற செயற்குழுவிற்கு முன்வைக்கவுள்ளதாகவும் அஜித் பி பெரேரா குறிப்பிட்டார்.

நாடாளுமன்ற செயற்குழுவின் அனுமதி கிடைத்ததும், இந்த பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த உள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# ரயில்களில் யாசகம் செய்தால் கைது செய்வதற்கு நடவழக்கை

ரயில்களில் யாச்கம் செய்யும் (பிச்சைக்காரர்களை) கைது செயவதற்கான நடவடிக்கைகளை ரயில்வே திணைக்களம் முன்னெடுத்துள்ளதாக திணைக்களத்தின் திட்டமிடல் பணிப்பாளர் விஜய சமரசிங்ஹ தெரிவித்துள்ளார்.

நெடுந்தூர சேவைகளில் ஈடுபடும் ரயில்களில் பயணிக்கும் பயணிகளிடமிருந்து கிடைத்துள்ள முறைப்பாடுகளை அடுத்தே இந்த நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

ரயிலில் பிச்சையெடுப்போரினால் தாங்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம்கொடுத்துள்ளதாகவும் பயணிகள் முறைப்பாடு செய்துள்ளனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ரயில்வே பாதுகாப்பு பிரிவினரையே பிச்சைக்காரர்களை கைதுசெய்யும் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தவிருப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

# மனம் வருந்தினார் ரணில் மக்களவையில் சுஷ்மா தகவல்



(கொழும்பு)

இலங்கை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஊடகமொன்றிற்கு வழங்கிய கருத்து தொடர்பில் மனம் வருந்தினார் என இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜ் தெரிவித்துள்ளார்.

இந்திய மக்களவையில் எதிர்க்கட்சியினரால் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அத்துமீறி நுழைந்து இலங்கை கடற்பரப்பில் மின்பிடி நடவ்டிக்கையில் ஈடுபடும் இந்திய மீனவர்களை சுட்டுத் தள்ளுவதற்கு எங்களுக்கு சட்டம் அனுமதித்துள்ளது என பிரதமர் ரணில் விக்ரமசிங்க அண்மையில் இந்திய ஊடகமொன்றிற்கு வழங்கிய செவ்வியில் கருத்து வெளியிட்டிருந்தார்.

இதனால் தமிழகம் முழுவதும் பல்வேறு அமளி துமளிகளை கிளம்பியிருந்தது, இந்நிலையிலேயே இந்திய வெளிவிவகார அமைச்சருக்கும், பிரதமருக்கும் இடையில் இடம்பெற்ற பேச்சு வார்த்தையின் போது இது குறித்து வினவினார்.

இதன்போதே தான் தமிழக மீனவர்கள் குறித்து அவ்வாறான தொரு கருத்தை தெரிவித்திருக்க கூடாது எனவும், அவ்வாறு தெரிவித்தமைக்கு மிகவும் மனம் வருந்துவதாகவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை இந்தியப் பிரதமரின் இலங்கை விஜயத்தின் பின்னர் இருநாட்டு மீனவர்களுக்கிடையிலான பிரச்சினைக்கு தீர்வு காணப்படும் என இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜ் தெரிவித்துள்ளார்.

# சுயாதீன ஆணைக்குழு அமைத்து தேர்தல் நடாத்த அரசு நடவடிக்கை

எதிர்வரும் ஏப்ரல் மாதம் 24 ஆம் திகதிக்கு முன்பு சுயாதீன ஆணைக்குழுவை அமைத்து நாடாளுமன்றத்தை கலைத்து, பொது தேர்தலை நடாத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக அரச உள்நாட்டு அலுவல்கள் மற்றும் மாகாண சபைகள், உள்ளூராட்சி சபைகள் மற்றும் புத்தசாசன அமைச்சர் கரு ஜயசூரிய தெரிவித்தார்.

"எதிர்வரும் ஏப்ரல் மாதம் நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் கூடுதலான ஆசனங்களை பெறும் கட்சியின் தலைவரை பிரதமராகவும் இரண்டாவதாக ஆசனங்களைப் பெறும் கட்சியின் தலைவரை உப பிரதமராகவும் நியமித்து இரண்டரை வருடம் தேசிய அரசாங்கத்தை அமைத்து நாட்டின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்" என தெரிவித்துள்ளார்.

எமது நாட்டில் நல்லாட்சியை உருவாக்குவதை நோக்கமாக கொண்டே நாம் செயற்பட்டு வருகின்றோம். 100 நாட்களுக்குள் நல்லாட்சியை ஏற்படுத்துவோம். இன்னும் 45 நாட்கள் எஞ்சியுள்ளன. நாம் கொடுத்த வாக்குறுதிகளை இந்த நாட்களுக்குள் நிறைவேற்ற முடியும். எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# வடக்கில் வைத்தியர் பற்றாக்குறை நிவர்த்தி செய்ய நடவடிக்கை

(கொழும்பு)

வடமாகாண வைத்தியசாலைகளில் காணப்படும் வைத்தியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்து தருவதாக மத்திய சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தனக்கு உறுதியளித்துள்ளார் என வட்மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் நேற்று தெரிவித்தார்.

வடமாகாணத்தில் 101 வைத்தியசாலைகள் உள்ளன. இவற்றில் வைத்தியர் ஒருவரேனும் இல்லாத 31 வைத்தியசாலைகள் உள்ளடங்குகின்றன. வைத்தியர்கள் இல்லாத காரணத்தினால் இந்த 31 வைத்தியசாலைகளையும் மூடவில்லை. ஏனைய வைத்தியசாலைகளிலுள்ள வைத்தியர்களை வரவழைத்து சேவைகளை வழங்கி வருகின்றோம் என அவர் தெரிவித்தார்.

அண்மையில் சுகாதார அமைச்சருக்கும் மாகாண சுகாதார அமைச்சர்களுக்கும் இடையேயான கலந்துரையாடலொன்று கொழும்பில் நடைபெற்றது. இதன்போது, வட்மாகாண வைத்தியர் பற்றாக்குறை தொடர்பாக கோரிக்கை விடுத்திருந்தோம்.

31 வைத்தியசாலைகளில் வைத்தியர்கள் இல்லையென்பதை ஆச்சரியமாகக் கேட்ட சுகாதார அமைச்சர், வைத்தியர்களாக வெளியேறுபவர்களை மேற்படி 31 வைத்தியசாலைகளுக்கும் தலா ஒருவர் வீதம் இம்மாத இறுதியில் நியமிப்பதாக உறுதியளித்தார் என்று சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார்.

# பொய்யான வழக்குகளில் இளைஞரை சிக்கவையாதீர்

## பொலிஸாருக்கு நீதவான் எச்சரிக்கை

(கொழும்பு)

இளைஞர்களை பொய்யான முறையில் போதைப்பொருள் வழக்குகளில் சிக்க வைக்க வேண்டாம் என பொலிஸாருக்கு நீதவான் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அநியாயமாக இளைஞர்களை கைது செய்து, உங்களிடமுள்ள போதைப்பொருட்களை அவர்களின் கைகளில் போட வேண்டாம என கோட்டே நீதவான் மற்றும் மேலதிக மாவட்ட நீதவான் திலின கமகே தெரிவித்துள்ளார்.

கொம்பனித்தெரு பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றி வரும் உப பொலிஸ் பரிசோதகர் ஒருவருக்கே இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

போதைப்பொருள் வைத்திருந்ததாக குற்றம் சுமத்தப்பட்டு கைது செய்யப்பட்டிருந்த இளைஞர் ஒருவரை குற்றமற்றவர் என அறிவித்து நீதவான் விடுதலை செய்தார்.

கொம்பனித்தெருவைச் சேர்ந்த அசாத் அலிப்ராஸ் என்ற இளைஞரே இவ்வாறு விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

சந்கேத நபரை போதைப் பொருளுடன் கைது செய்ததாக கொம்பனித்தெரு பொலிஸார் கோட்டே நீதிமன்றில் இளைஞருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

வழக்கு விசாரணைகளின் போது பொலிஸாரின் தகவல்கள் முன்னுக்குப் பின் முரணாக காணப்பட்டதனால் வழக்கை தள்ளுபடி செய்து இளைஞரை நீதவான் நேற்றுமுன்தினம் விடுவித்துள்ளார்.

**(10) பொருத்தமான நிறுத்தற்குறிகளை இடுக**

39. மன்னா என்ன கூறுகிறீர்கள்

40. சங்கர் தனது தாயைப் பார்த்து நாளைக்குப் பாடசாலைக்கு வருவீர்கள் தானே என்று கேட்டான்

**(11) சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியத்தை எழுதுக**

41. பொருட்கள் / தங்கையும் / சென்றனர் / கவிதாவும் / வாங்குவதற்காகச் / சந்தைக்குச்

........................................................................................

**(12) பின்வரும் பழமொழிகளின் கருத்தை எழுதுக**

42. அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி

........................................................................................

43. எடுக்கிறது பிச்சை ஏறுவது பல்லக்கு

........................................................................................

**(13) ஒவ்வொரு தமிழ்ச் சொல்லுக்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை ஆங்கிலத்தில் எழுதுக**

44. நேற்று :- ..........................................

45. இன்று :- ..........................................

46. நாளை :- ..........................................

**(14) கருத்தை தமிழில் எழுதுக**

47. SIlence please :- ..........................................

48. How Many? :- ..........................................

49. I am playing Netball :- ..........................................

**(15) பின்வரும் ஒவ்வொரு சிங்கள வாக்கியத்தினதும் கருத்தை தமிழில் எழுதுக**

50. மேக்க மகே பொ(த்)த :- ..........................................

51. கபுடா களு பாட்டய :- ..........................................

**(16) பின்வரும் வினாக்களிற்கு உரிய சரியான விடையின் கீழ் கோடிடுக**

52. குறிப்பிட்ட காலத்தில் மட்டும் பூக்கும் தாவரம் எது?

01. நந்தியாவட்டை 02. தென்னை 03. வாழை 04. பனை

53. உடல் மயிர் போன்ற அமைப்பினால் மூடப்பட்டிருக்கும் பறவை எது.

01. வான்கோழி 02. கிவி 03. பெண்குயின் 04. தீக்கோழி

**நேற்று பிரசுரமாகிய வினாக்களின் விடைகள்**

(01).1. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் 2. இலங்கை மத்திய வங்கி

(02).3. அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும் 4. உயர உயர பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகுமா

(03).5. மூசு 6. நாற்று (04).7. அன்னாசி 8. மேசைவிரிப்பு

(05).9. class room 10. hospital (06).11. வாழைப்பழம் 12. வெண்டிக்காய் (07).13. பொத்த 14. கனுவேவல்ல (08).15. வண்ணத்துப்பூச்சி 16. எறும்பு 17. மட்டைத்தேள் 18. நத்தை

(09).19. உணவு உண்பதற்கு 20. தகரம் வெட்டுதல் 21. விறகு கொத்துவதற்கு 22. ஆணி இறுக்குவதற்கு (10).23. 3 24. 2 25. 1 26. 3 27. 2 28. 3 29. 1 30. 2 31. 1 32. 2 33. 3 34. 1 35. 3 36. 3 37. 2 (11).38. பலா, அப்பிள் 39. அன்னாசி 40. 15பேர் 41. 75பேர் 42. 300பேர் 43. 1. 30.00 2. 34cm 44. 4750ml 45. 0.75 46. 60பழங்கள் 47. 660.00 48. 55நிமிடம் 49. 35kg 50. 10.8kg 51. 250ருபா

(13). 59. 2 60. 3 61. 2 62. 2

**பயிற்சி வினாக்களின் விடைகள் நாளைமறுதினம் வெளியாகும்**



# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை முன்னோடி- 2015

பகுதி - I

1 மணி 30 நிமிடம்

# கல்வி முரசு



எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க

**(01). 1ஆம், 2ஆம் வினாக்களிற்கு பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து வெற்றிடத்தில் எழுதுக**

01. பலாவுக்குச் சுளைபோன்று மாதுளைக்கு ..........................................

(01) பருப்பு (2) முத்து (3) தாறு

02. திறப்புக்கு கோர்வை போன்று புகையிலைக்கு ..........................................

(01) சிப்பம் (2) குவியல் (3) கற்றை


03. ஒவ்வொரு பாத்தியிலும் ஒரு வகை மாத்திரம் இருக்கத்தக்கதாக 5 பாத்திகளில் மரக்கறிப்பயிர்களும், பழமரங்களும் வளர்க்கப்படுகின்றன. பழமரங்கள் வளர்க்கப்படும் பாத்திகளின் எண்ணிக்கை மூன்று ஆகும். மரக்கறிப்பயிர்களும் பழமரங்களும் இருக்கத்தக்க விதத்தைத் தெரிவு செய்க

(01) கோவா, முள்ளங்கி, அவரை, கொய்யா, தோடை


(02) கோவா, முள்ளங்கி, கொய்யா, தோடை, பப்பாசி

(03) கோவா, வாழை, கொய்யா, தோடை, பப்பாசி

**(02). 4ஆம், 05ஆம் வினாக்களுக்குப் பின்வரும் அடைப்பில் தரப்பட்டுள்ள தகவல்களைப் பயன் படுத்தி விடையைத் தெரிவு செய்க**





04. 1 லீற்றருக்குச் சமமான படத்தை வரைக? ..........................................

05. 


(01) 1000ml (02) 1400ml (03) 1600ml

06. பின்வருவனவற்றில் மிகவும் சரியான தொடர்பு




07. ஒரு வீதியில் இரு மின்கம்பங்களுக்கிடையே 4 கொடிகள் வீதம் தொங்கவிட்டு அவ்வீதியை அலங் கரிக்கத் தீர்மானிக்கப்பட்டது. வீதியில் 9 மின்கம்பங்கள் இருந்தால் அவற்றுக்கிடையே தொங்கவிடு வதற்கு எத்தனை கொடிகள் தேவை?

(01) 32 கொடிகள் (02) 36 கொடிகள் (03) 40 கொடிகள்

08. 2011ஆம் ஆண்டில் 365 நாட்களும் 2012ஆம் ஆண்டில் 366 நாட்களும் உள்ளன. 2011 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 01ஆம் திகதி புதன்கிழமையாகும். 2012ஆம் ஆண்டில் ஜனவரி 01ஆம் திகதி வியாழக்கிழமையாகும். இதற்கேற்ப 2013 ஜனவரி 01ஆம் திகதி என்ன கிழமை?
(01) புதன்கிழமை (02) வெள்ளிக்கிழமை (3) சனிக்கிழமை

09. ஐந்து திங்கட்கிழமைகள் உள்ள ஓர் ஆவணி மாதத்தில் உள்ள திங்கட்கிழமைகளின் திகதிகளில் மொத்தத்திற்கு இருக்கத்தக்க உயர்ந்த பட்ச பெறுமானம் எது?
(01) 75 (02) 80 (3) 85

10. வகுப்பறையில் நித்தமும் இருப்பவை எது?
(01) ஆசிரியரும், மாணவரும் (02) கூரையும், தளபாடங்களும்
(03) புத்தகமும், தண்ணீர்ப்போத்தலும்

11. ஒரு புத்தகத்தில் நித்தமும் இருப்பவை எது?
(01) எழுத்துக்கள் படங்கள் (02) கருத்தும் அச்சுப்பிழையும் (3) படங்களும் விளக்கமும்

12. சந்திரன் தோன்றிய ஒருநாளில் நள்ளிரவில் வீட்டிலிருந்து வெளியே வந்த போது வௌவால்கள் பறந்து செல்வதைக் கண்டேன். என ராணி கூறினாள். இது உண்மையாக இருக்கலாம் இதற்குக் காரணம் எது?
(01) இருளில் அத்தகைய ஒரு நிகழ்ச்சியைப் பார்க்க முடியாது
(02) பகலில் மட்டுமே வௌவால்கள் பறந்து திரியும்
(03) நிலவில் வௌவால்கள் பறப்பதைப் பார்க்க முடியும்

13. ராஜியின் ஒரே பிள்ளையாகிய காயத்திரி பாடசாலைக்குத் தாமதமாக வந்து தங்கையுடன் கடைக்கு சென்று திரும்பி வருவதற்குத் தாமதம் ஏற்பட்டதெனக் கூறினார். இது உண்மையாவதற்குக் காரணம்
(01) காயத்திரிக்குச் சில சகோதரிகள் இருக்கின்றமை
(02) காயத்திரிக்கு உலாவித் திரிய விரும்புகின்றமை
(03) காயத்திரியின் சிறிய தாயாரின் ஒரு மகளும் அவரின் வீட்டில் இருக்கின்றமை

14. பாடசாலைச் சேவைப் பேருந்து தாமதமாக பாடசாலைக்கு வருகின்றது
(01) இது பெரும்பாலும் நடைபெறும் ஒரு நிகழ்ச்சியாகும்
(02) இது ஒரு போதும் நடைபெறுவதில்லை
(03) இது சில வேளைகளில் நடைபெறும் நிகழ்ச்சியாகும்

15. நாம் ஒற்றுமையாக இருந்தால் எக்காரியத்தையும் சாதிக்க முடியும்?
(01) இது எப்போதும் உண்மையாகும்
(02) இது பெரும்பாலும் உண்மையாகும்
(03) இது ஒரு போதும் உண்மையாகாது

16. காற்று வீசுவதால் வெப்பம் குறைகின்றது அதற்கான காரணம் எது?
(01) காற்றுக் குறைகின்றது
(02) காற்றுக் கூடுதலாக வெப்பத்தை அள்ளிச் செல்கின்றது
(03) காற்று வீசுவதால் மாற்றமில்லை

17. கம்பனின் வீடு வள்ளுவரின் வீட்டுக்கு வடக்கே உள்ளது. வள்ளுவரின் வீடு இளங்கோவின் வீட்டுக்கு வடக்கே உள்ளது ஆகவே
(01) கம்பனின் வீடு இளங்கோவின் வீட்டுக்கு வடக்கே உள்ளது
(02) இளங்கோவின் வீடு கம்பனின் வீட்டுக்கு அண்மையில் உள்ளது
(03) இளங்கோவின் வீடு வள்ளுவரின் வீட்டிலும் பார்க்க கம்பனின் வீட்டுக்கு அண்மையில் உள்ளது

**(03) வெற்றிடங்களை நிரப்புவதற்கு அடைப்புக்குறிக்குள் இருந்து தெரிந்து நிரப்பி எழுதுக**

விமலா வலைப்பந்தில் மிகுந்த விருப்பத்தைக் கொண்டுள்ளாள். ஆகவே ஆசிரியர் அதற்கான 18. ........................ (உற்சாகப்படுத்துவதற்கு, பயிற்சியளிப்பதற்கு, வழிப்படுத்துவதற்கு) எண்ணினார். விமலா மிகுந்த விருப்பத்துடன் நேரம் தவறாமல் சென்று வலைப்பந்து 19. ............ (பாட, அடிக்க, விளையாட) நன்றாகக் கற்றுக்கொண்டாள். அதனால் விமலா மிகுந்த 20. .......... (கவலை, இரக்கம், மகிழ்ச்சி) அடைந்தாள்.



**(04) பின்வரும் பந்தியை வாசிக்க.**

மரக்கிளையினூடாக வந்த இளஞ்சூரியனின் கதிர்கள் எனது மேனியை இதமாக வருடிச் சென்றன. பறவைகளின் இனியகானத்தினால் அப்பகுதிகள் முழுவதும் இசையில் மூழ்கி இருந்தது. மெல்லென வீசிய இளந்தென்றல் என்னை அன்புடன் தழுவிச் சென்றது. காட்டுமலர்கள் ஆற்றின் இருபக்கங்களையும் எழில் செய்தன. மலரிதழ்களினாலும் மகரந்தங்களினாலும் மூடப்பட்டிருந்த தரையின் மீது எனது பாதங்கள் பதியும் போது மென்மையான பட்டுக்கம்பள விரிப்பில் நடப்பது போன்ற உணர்வு பெற்றேன். மலரிதழ்களால் அழகு பெற்ற நீரின் மீது அலைகள் அங்குமிங்கும் எழுந்த போது அவை அலங்காரம் செய்யப்பட்ட நீலவண்ண ஆடையைப் போல காட்சியளித்தன.

**கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு உரிய விடைகளைப் பந்தியில் இருந்து தேர்ந்தெடுத்து புள்ளிக்கோட்டின் மீது எழுதுக**

21. இங்கு நாளொன்றின் எவ்வேளை பற்றிக் கூறப்படுகின்றது? ..............................
22. கானம் என்ற சொல்லின் கருத்தை எழுதுக? ..............................
23. வன்மை என்ற சொல்லின் எதிர்கருத்துச் சொல்லை தருக? ..............................
24. இங்கு காணப்படும் உவமை ஒன்றை எழுதுக? ..............................
25. மலரிதழ்களால் அழகு பெற்றது எது? ..............................
26. இங்கு இடம்பெற்ற இணைமொழி ஒன்று எழுதுக? ..............................
27. மலரிதழ் என்ற சொல்லை பிரித்து எழுதுக? ..............................
28. தழுவிச்சென்றது என்பதன் கருத்து யாது? ..............................
29. காட்சியளித்தன என்ற சொல்லின் எதிர்கால வடிவம் யாது? ..............................

**(05) அடைப்புக்குள் இருக்கும் சொற்களில் இருந்து பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து வெற்றிடத்தை நிரப்புக**

30. தொழிற்சாலையில் வேலை செய்யும் தொழிலாளர்கள் .............................. நிறுத்தம் செய்த காரணத்தால் அதன் வேலைகள் ஸ்தம்பிதமடைந்தன. (வேலை, வேளை)
31. உணவு உண்ட பின்னர் சிறிது தூரம் .............................. வது உடம்புக்கு நல்லது (உலவு, உழவு)

**(06) பின்வரும் வாக்கியத்தை ஒருமையாக மாற்றி எழுதுக**

32. கற்கள் பாறையில் இருந்து விழுந்தன ..............................

**(07) பின்வரும் வாக்கியத்தை பன்மையாக மாற்றி எழுதுக**

33. நான் சுயசுத்தம் பேணுவேன்
..............................

**(08). பின்வரும் ஒவ்வொரு மரபுத்தொடரினதும் கருத்தை எழுதுக**


34. ஏட்டிக்குப் போட்டி
..............................
35. பொடி வைத்தல்
..............................

**(09). பின்வரும் தொடர்களுக்குரிய தனிச்சொல்லை எழுதுக**

36. நூலுக்கு இன்னொருவனால் வழங்கப்படும் உரை
..............................
37. விசாரணை முடிவில் நீதிபதியால் வழங்கப்படுவது
..............................
38. தாய் தந்தையரை இழந்தவன்
..............................

# தமிழ் மக்களை வழிநடாத்தும் தலைமைகளிலும் மாற்றம் வேண்டும்

## யாழ். மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ஜெகன் தெரிவிப்பு



(காரைநகர்)

காலச் சுற்றோட்டம் நகரும் பாதைக்கேற்ப மக்களது வாழ்விய விலும் மாறுதல்கள் ஏற்படுகின் றது. அந்த மாற்றங்கள் போன்று நீண்ட காலமாக அரசியல் ரீதி யாக தமிழ் மக்களை வழி நடத் தும் தலைமைகளிலும் மாற்றங் கள் உருவாக்கப்படவேண்டும். அத்தகைய ஒரு மாறுதலூடா கத்தான் தமிழினத்தின் தலை விதி களையும் மாற்றிக்கொள்ள முடியும் - என முன்னாள் நாடா ளுமன்ற உறுப்பினரும் ஈழ மக் கள் ஜனநாயக கட்சியின் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்பாளரு மான கே.வி.குகேந்திரன் (வி.கே.ஜெகன்) தெரிவித் துள்ளார்.

2014 ஆம் ஆண்டுக்கான விசேட நிதிமூலம் முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட வலந்தலை சந்தி பஸ் தரிப்பு நிலையம்,பெரியமதவடி பகுதி பஸ் தரிப்பு நிலையம், மற்றும் காரைநகர் டிப்போ பகுதி பஸ்தரிப்பு நிலையும் ,மருதபுரம் பகுதி கடற்றொழிலாளர்கள் கூட் டுறவு சங்க கட்டடம் ஆகியன மக்கள் பாவனைக்காக செயலா ளர் நாயகம் டக்ளஸ் தேவா னந்தாவினால் கடந்த 8ஆம் திகதி திறந்துவைக்கப்பட்டன. இந்த நிகழ்வுகளில் செயலாளர் நாயகத்துடன் கலந்து கொண்டு கட்டடங்களை திறந்து வைத்தபின்னர் கட்சியின் செயற் பாட்டாளர்கள் மத்தியில் உரை யாற்றும்போதே ஒருங்கிணைப் பாளர் வி.கே.ஜெகன் மேற்கண்ட வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரி வித்ததாவது -

போலியான ஆயிரம் வாக் குறுதிகளை கூறிவிடுவதை விட நியமான சில வாக்குறுதிகளை கொடுத்து மக்களுக்கு செயற் படுத்திக்கொடுப்பதே உண்மை யான மக்கள் சேவையாகும். அத்தகைய செயற்பாடுகளைத் தான் தமிழ் மக்களும் தற்போது எதிர்பார்த்துள்ளனர் .

தமிழர் உரிமைகளுக்காக ஆயுதப்போராட்டத்தை கையி லெடுத்து இனவிடுதலை தேடிப் பார்த்தோம், அது சாத்தியமற் றதாக தோன்றியது. அரசியல் ஜனநாயகத்திற்குள் இறங்கி அரசியல் போர்செய்து பார்த் தோம் அது வெற்றிதந்தது. அத னால் மக்கள் பிரதிநிதித்துவத் துடன் இணக்க அரசியல் பாதையை தேர்ந்தெடுத்து மக்களுக்கு தேவையானவற்றை பெற்றுக் கொடுத்து வருகின்றோம்.

மக்களுடைய தேவைகளை பூர்த்திசெய்பவர்களை ஓரங்கட் டுவதனூடாக மக்களது அபிவி ருத்திகளை மேம்படுத்த முடி யாது. அதுபோல மக்கள் மன தில் இடம்பிடித்தவர்களை தூக்கியெறிந்துவிடலாம் என்று தப்புக்கணக்கு போடுவதும் சிறு பிள்ளைத்தனமான அரசியல் செயற்பாடாகும். அத்தகையவர் களது செயற்பாடுகளை மக்கள் விரும்பவும் மாட்டார்கள்- என் றார்.

# கும்பாபிஷேகம்

அளவெட்டி அருள்மிகு கும் பழாவளைப் பிள்ளையார் ஆலய மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 8ஆம் திகதி புதன்கிழமை பகல் 10.39 மணிமுதல் 11.55 மணி வரையுள்ள சுபவேளையில் நடை பெறவுள்ளது.

இதில் கிரியைகள் எதிர்வரும் 4ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள துடன் அடியார்களின் எண்ணெய் காப்பு சாத்தும் நிகழ்வு எதிர்வ ரும் 6,7ஆம் திகதிகளில் நடை பெறவுள்ளது.

# இளங்கோ சனசமூக நிலையத்தின் இருமாடிக் கட்டடத்திறப்பு விழா

(கரணவாய்)

கரணவாய் இளங்கோ சனசமூக நிலையத்தின் இரண்டு மாடிக் கட்டடத் திறப்பு விழா நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு கரணவாய் செல்வாபுரத்தில் நடைபெறவுள்ளது.

சனசமூக நிலையத்தலைவர் கு.மகாலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக ஈழமக்கள் ஜனநாயக்கட்சி செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா, யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

சிறப்பு விருந்தினர்களாக கரவெட்டி பிரதேச செயலர் எஸ். சிவ ஸ்ரீ வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை செயலாளர் க.கன கதுரை ஈ.பி.டி.பி. வடமராட்சி அமைப்பாளர் ஐ.ஸ்ரீரங்கேஸ்வரன் ஈ.பி.டி.பி.ஊடகப் பேச்சாளரும் தேசிய அமைப்பாளருமான பசுபதி சீவரத்தினம், மற்றும் கரணவாய் ஜே/350 கிராம அலுவலர் பா.வைகுந தன், ஈ.பி.டி.பி. கரவெட்டி பொறுப்பாளர் இ.செந்தில்நாதன், கர வெட்டி பிரதேச சபை எதிர்கட்சிதலைவர் அ.சந்திரசேகரம் கர வெட்டி பிரதேச சபை எதிர்க்கட்சி உறுப்பினர் இ. துஷிகரன், கரணவாய் தெற்கு ஜே/348 கிராம அலுவலர் திருமதி ல.தனுசா, கரணவாய் தெற்கு சமுர்த்தி உத்தியோகத்தர் எஸ். மனோகரி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (18)

# 650 விசேட தேவையுடைய மாணவர்கள் கிளிநொச்சி வலயத்தில் உள்ளனர்

## கல்விப் பணிப்பாளர் தகவல்



(கிளிநொச்சி)

கிளிநொச்சி கல்வி வலயத் தில் 650 சிறப்புத்தேவையுடைய மாணவர்கள் உள்ளனர் என கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கந்தசாமி முருக வேள் நேற்றுத் தெரிவித்துள் ளார்.

விசேட தேவையுடைய மாணவர்களுக்காக கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனையில் சிறப்பு வகுப்புகள் நடைபெற்று வருவதாகவும் இவ்வகுப்புகளில் 32 மாணவர்கள் கல்வி பயின்று வருவதாகவும் பாடசாலைக ளிலே கல்வி பயில்கின்ற விசேட தேவையுடைய மாணவர்களுக்கு சிறப்பான வகுப்பு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை கடந்த கால போர்ச்சூழல், இடப்பெயர் வுகள் நலன்புரி வாழ்வு என்ப னவே கூடுதலான விசேட தேவை யுடைய மாணவர்கள் உருவாகு தற்கு காரணமாக அமைந்துள் ளது. இவ்வாறான சிறார்க ளுக்கு உதவியமைப்புகளின் உதவிகள் கூடுதலாக தேவைப்படு கின்றன என்பது குறிப்பிடத் தக்கது. (160)

# போக்குவரத்து நெருக்கடியை தடுக்க வீதிச் சமிக்ஞை பொருத்தக்கோரிக்கை



நெல்லியடி நகரப்பகுதியில் குறிப்பாக நாற்சந்திகள் சந்திக்கும் இடத்தில் வீதி சமிக்ஞைகள் அமைக்கப்படவேண்டும் என பாட சாலை மாணவர்களும் பெற்றோர்களும் கோரிக்கை விடுக்கின்றனர்.

குறிப்பாக நெல்லியடி நகரப்பகுதி போக்குவரத்து அதிகளவில் நடைபெறும் பிரதான இடமாக காணப்படும் நிலையில் இங்கு வீதிச்சமிக்ஞைகள் பொருத்தப்படவேண்டியது அவசியமானதாகும். குறிப்பாக காலை வேளைகளில் பாடசாலைக்குச் செல்லும் மாண வர்கள் வீதியை கடப்பதில் நீண்ட நேரம் காத்து நிற்கவேண்டி யுள்ளதாகவும் பேருந்துகள் தொடர்ச்சியாக செல்வதால் பிற வாக னங்களில் செல்வோரும் நெருக்கடிகளை எதிர்நோக்குவதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது.

மேலும் வாகன நெருக்கடிகளால் விபத்துக்கள் ஏற்படும் அபாயம் காணப்படுவதாகவும் தெரிவிக்கும் மக்கள் மாணவர்க ளின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் குறித்த நகரப்பகுதி யில் முக்கியமான இடங்களில் வீதி சமிக்ஞைகளை பொருத்து வதற்கு உரியவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என மக்கள் கேட்டுக்கொள்கின்றனர். (18)

# வடக்கில் நடந்தேறும்...

எண்ணெய்க் கழிவுகளின் பாதிப்பினைப் போல் அல்லாது, நைத்திரேட்டுச் சேர்வைகளின் மூலம் உடல் நலத்திற்கு உண்டாகும் குருதிக் கோளாறுகள் முதலிய கேடுகள் குறித்து நன்றே அறியப்பட்டிருக்கின்றது. நவீன உலகின் நிலைத்து நிற்க இயலா அபிவிருத்திக்கான தீவிர வேட்கையும், இயற்கை அழிப்புக்களும் மனிதனால் உண்டாகும் கெடுதல்களுக்கு வரம்பற்ற நிலையினையே ஏற்படுத்தியிருக்கின்றது. .புகுஷிமா அணு உலை கழிவுக் கசிவு, போபால் வாயுக் கசிவு, சூடான் சோமாலியா வறட்சி முதலிய சூழல் அனர்த்தங்களைப் போன்று வலிகாம மக்களும் பாதுகாப்பான இடங்களுக்கு என்றோ இடம்பெயர நேருமா? பல்லாண்டு காலமாக வாழ்வுக்கு ஆதாரமாக விளங்கி வந்த இந்த மண்ணிற்கு நிலத்தடி நீர் மாசடைவு சாவு மணி அடிக்கத் தொடங்கிவிட்டது.

தெற்கில் கம்பகா மாவட்டத்தில் வெலிவெரியா மக்களைப் போன்றே வலிகாம வாசிகள் தமது நீர் மாசடைவதை எதிர்த்து வீதிக்கு இறங்கி யிருக்கின்றனர். சமாதானமான வழிகளில் இவர் கள் விரைந்த பதில்களை கோரி நிற்கின்றனர். பிரதேச மக்களை எதிர்த்து நிற்கும் விபரீதங் களை உடனடியாக நிவர்த்தி செய்வது அதிகா ரிகள் ஒவ்வொருவரதும் கடமையாகும்.

மோசமாகப் பாதிக்கப்பட்ட கிராமங்களுக்கு குடிநீர் பௌசர்களூடு இப்போது விநியோகம் செய்யப்படுவது வரவேற்கத்தக்கது. இருப்பி னும், பாதிக்கப்பட்ட அனைத்துப் பிரதேசங்களும் இந்த நிவாரணத்தைப் பெற வேண்டும். தூய நீருடன் மக்களுக்கு மாசடைந்த நீரினைப் குடிக்க, குளிக்க, கழுவ பயன்படுத்துவதால் நேரக் கூடிய பாதிப்புக்கள் குறித்த சரியான தகவல்களும், எச்சரிக்கைகளும் சென்றடைய வேண்டும். பாதிக் கப்பட்ட மக்களுக்கு அவர்கள் கண்ட இழப்புக்க ளுக்கும், முகம்கொடுக்கும் இன்னல்களுக்கும் உகந்த ஈடு செய்யப்படுதல் அவசியம்.

ஆனால் எல்லாவற்றிற்கும் மேலாக, நீரினை அதன் ஆரம்ப நிலைக்கு இட்டுச்செல்லத்தக்க ஆன நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். இதில் எண்ணெய் கழிவுகளின் தொடர் பரவ லைத் தடுத்தல் முதற்படியாகும். இதனை ஓர் அனர்த்தமாக அறிவிப்பது மாற்று நடவடிக்கை களை ஒருங்கிணைக்க, வளங்களை விரைவில் திரட்ட, பாதிப்பிலிருந்து மீள்வதற்கான திட்டங் களை ஒருங்கே தீட்ட, வெளி நாட்டு தொழில் நுட்ப உதவிகளை பெற என பல விடயங்களில் கைகொடுக்கும்.

உதாரணமாக, பாதிக்கப்பட்ட இடங்களில் தொடர் ஆய்வுகள், மேற்பார்வை என்பவற்றை சகல வசதிகளுடனும் கூடிய ஆய்வுகூடங்களில் நடத்துதல் அவசியம்ளூ உயர் துலங்கல் கொண்ட, துரிதமான கருவிகள் அடங்கிய நடமாடும் ஆய்வு கூடமொன்று கூட சிறந்ததே. பொது மக்களுக்கு தொடர்ச்சியாக தேவையான அளவு நன்னீர் கிடைக்கத்தக்க வழிவகைகள் செய்யப்பட வேண்டும்

மனிதர்கள் மீதும், ஏனைய உயிரினங்கள் மீதும், சூழலிலும், உணவுச் சங்கிலியிலும் நிலத்தடி நீர் மாசடைவு உருவாக்கியிருக்கும் பாதிப்புக்களை சரியே இனங்காண பரந்துபட்ட ஆய்வுகள் நடாத் தப்படுவதோடு, ஆய்வுப் பேறுகளின் அடிப்ப டையில் மாற்று நடவடிக்கைகள் எடுக்கப்படுவது அவசியம்.

# தொழிற்பயிற்சி நெறிக்கு விண்ணப்பங்கோரல்

இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையினால் யாழ். மாவட்டத்தில் முழு நேர மற்றும் பகுதிநேர தொழிற்பயிற்சி கற்கை நெறிகள் நடாத்தப்பட்டுவருகிறது. இதில் தொழிற்சாலை மின் னிணைப்பு கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படு கின்றன. இக் கற்கை நெறி கைதடி தொழிற்பயிற்சி நிலையத்தில் நடைபெற்று வருவதுடன் இக் கற்கைநெறி தேசியதொழில் தகைமை (NVQ) சான்றிதழுக்கான பயிற்சியாகும். எனவே இக்கற்கை நெறி யினைக் கற்க விரும்புபவர்கள் தங்கள் பதிவுகளை அலுவலக நேரத்தில மாவட்ட அலுவலகம், 1ஆம் மாடி, வீரசிங்கம் மண்டபம், இல.12 கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம், தொ.பே.இல. 0212227949 எதிர் வரும் 13ஆம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளுமாறு அதிகார சபை யின் உதவிப்பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

# பிரான்ஸில் 10 ஆயிரம் ஐரோப்பியர் ஜிகாதிகளாக மாறும் அபாயம்

## எச்சரிக்கை விடுக்கிறார் பிரதமர்

நடப்பாண்டின் இறுதிக்குள் சுமார் 10 ஆயிரம் ஐரோப்பியர்கள் தீவிரவாத அமைப்புகளுடன் இணைந்து ஜிகாதிகளாக செயற்படும் அபாயம் உள்ளதாக பிரான்ஸ் பிரதமர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

தனியார் செய்தி நிறுவனம் ஒன்றிற்கு பேட்டியளித்த பிரதமர் Manuel Valls ஈராக் மற்றும் சிரியா நாடுகளில் உள்ள தீவிரவாத அமைப்புகளில் ஏற்கனவே 3,000 ஐரோப்பியர்கள் ஜிகாதிகளாக செயற்பட்டு வருவதாகவும், 2015 ஆம் ஆண்டு இறுதிக்குள் அந்த எண்ணிக்கை 10 ஆயிரத்தை தாண்டும் அபாயம் உள்ளதாக தெரிவித்துள்ளார்.

தாய் நாட்டிற்கு எதிராக ஆயுதங்களை தூக்கிய சுமார் 90 பிரான்ஸ் ஜிகாதிகள் அங்கு நடைபெற்று வரும் தாக்குதல்களில் ஏற்கனவே இறந்திருக்கலாம் என பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

பெல்ஜியம் நாட்டைப் போல், பிரான்ஸிலிருந்து வெளியேறியவர்கள் இஸ்லாமிய ஜிகாதிகளின் அமைப்புகளில் இணைந்து வரும் எண்ணிக்கை அதிக அளவில் உயர்ந்துள்ளது. ஜிகாதிகளின் அமைப்புகளில் இணைவதாக சந்தேகப்படும்படியான 6 பிரான்ஸ் நபர்களின் கடவுச் சீட்டுக்களை கைப்பற்றியது மட்டுமல்லாமல், சுமார் 40 நபர்கள் பிரான்ஸிலிருந்து வெளிநாடுகளுக்கு பயணிக்க தடை விதித்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

தீவிரவாதத்திற்கு எதிராக நவம்பர் மாதம் வரையறுக்கப்பட்ட சட்டத்தின் அடிப்படையில கடந்த மாதம் முதல் வெளிநாடு செல்லும் பயணிகளை விசாரிக்கும் நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

இஸ்லாமிய தீவிரவாத அமைப்புகளில் இணைபவர்கள் மூலம் உருவாகும் தாக்குதல் அச்சுறுத்தலை முறியடிக்கும் வகையில் பிரான்ஸ் உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகள் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

# லண்டனிலுள்ள சுரங்கப்பாதையில் எலும்புக்கூடுகள் கண்டுபிடிப்பு



லண்டனில் ரயில் சுரங்கப் பாதைக்காக பள்ளம் தோண்டும் போது, யாரும் எதிர்பாராத வகையில் ஆயிரக்கணக்கான எலும்புக் கூடுகள் மண்ணில் புதைந்திருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

உடனடியாக சுரங்கப் பாதை தோண்டும் பணிகள் நிறுத்தப்பட்டு, தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் வரவழைக்கப்பட்டனர்.

அவர்கள் நடாத்திய முதற்கட்ட ஆய்வில், லண்டனின் இந்தப்பகுதி, பல ஆண்டுகளுக்கு முன்பு இடுகாட்டுப் பகுதியாக இருந்திருக்கலாம் என்றும், இந்த மனித எலும்புக் கூடுகளை ஆராய்ச்சி செயவதன் மூலம், லண்டனில் எத்தனை ஆண்டுகளுக்கு முன்பு மனித இனம் வாழ்ந்திருக்கிறது என்பதை கண்டறியலாம் என்றும் கூறுகின்றனர்.

சுமார் 16 மற்றும் 17ஆவது நூற்றாண்டைச் சேர்ந்த சுமார் 3000 எலும்புக் கூடுகள் அப்பகுதியில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இந்தப் பகுதியில், ஒரு குழந்தையின் எலும்புக் கூடும், அது புதைக்கப்பட்ட மரத்தால் ஆன கல்லறைப் பெட்டியும் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்களால் பத்திரமாக மீட்கப்பட்டுள்ளது.

# இமாச்சலத்தில் விபத்து 8பேர் பலி; 4 பேர் காயம்

இமாச்சல பிரதேசத்தில் தனியார் பேருந்து விபத்துக்குள்ளாகி சாலையிலிருந்து உருண்டதில் திருமணத்துக்குச் சென்று திரும்பிய 8 பேர் பலியாகினர்.

இந்த பயங்கர விபத்தில் மேலும் 14 பேர் படுகாயமடைந்தனர். இமாச்சலத்தில் சம்பா மாவட்டம் பக்ருவா நுலாவிலிருந்து திருமணத்துக்கு வந்திருந்த உறவினர்களை ஏற்றிச் சென்ற பேருந்து விபத்துக்குள்ளானது.

விபத்துக்குள்ளான பேருந்தில் அதிகப்படியான எண்ணிக்கையில் மக்கள் இருந்ததாகவும், வளைவில் திரும்ப முயன்றபோது பேருந்து கவிழ்ந்ததாகவும் சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர்.

# இஸ்லாமிய பெண்களை மிரட்டும் 'அல்கான்சா' பெண்கள் அமைப்பு



ஐ.எஸ்.ஐ.எஸ்-இன் பெண்கள் அமைப்பான அல்கான்சா படையினர் தற்போது புதிய விதி ஒன்றை கடைப்பிடிக்குமாறு மிரட்டல் விடுத்துள்ளனர்.

ஐ.எஸ். ஐ.எஸ். அமைப்பின் அல்கான்சா படையைச சேர்ந்த பெண்கள் ஈராக் மற்றும் சிரியாவில் உள்ள பெண்களுக்கு கடுமையான விதிகளை விதித்து அதைப் பின்பற்றுமாறு மிரட்டி வருகின்றனர். பெண்கள் பர்தா அணிந்து செல்லாவிட்டால், அவர்களை கடத்திச் சென்று எச்சரிப்பதை வழக்கமாய் கொண்டுள்ளனர்.

இந்நிலையில் கவர்ச்சிக் கண்களை கொண்ட இஸ்லாமிய பெண்கள் இனி இரட்டைத் திரைகள் கொண்ட பர்தாவை மட்டுமே அணிய வேண்டும் என மிரட்டும் வகையில் தற்போது உத்தரவு ஒன்றைப் பிறப்பித்துள்ளனர்.

இதனைத் தொடர்ந்து சாலையில் பெண்கள் செல்லும்போது தங்கள் உடல் முழுவதையும் மறைக்கும் வகையில் பர்தா மற்றும் கையுறைகளை கட்டாயம் அணிந்திருக்க வேண்டும் எனவும் அறிவித்துள்ளனர்.

உலகச் செய்திகள்


# இந்தியாவை விட பாக். இடம் 10 மடங்கு அணு ஆயுதங்கள்

## இன்போகிராபிக் தகவல்

(புதுடில்லி)

பாகிஸ்தானிடம் 120 ஆட்டோமிடிக் ஆயுதங்கள் உள்ளன. இது இந்தியாவை விட 10மடங்கு அதிகமானது. இது கடந்த ஆண்டு அதன் அணுஆயுத விபரங்கள் என அணு விஞ்ஞானிகள் விசாரணையில் இன்போகிராபிக் வெளியிட்ட புதிய தகவலாகும்.

இந்த தகவல் இன்போகிராபி விளக்கப்படத்தை சிக்காகோ பல கலைக்கழக விஞ்ஞானிகள் தயாரித்து உள்ளனர். இந்த விளக்கப்படம் 9 நாடுகளில் உள்ள அணுஆயுதங்கள் குறித்து விளககுகிறது. 1980 ஆம் ஆண்டுகளில் 65 ஆயிரமாக உச்சத்தை அடைந்து இருந்த அணுஆயுதங்கள் பிறகு 10 ஆயிரமாக குறைந்தது. பல நாடுகளில் இந்த ஆயுதங்கள் குறைக்கபட்டுள்ளன.



இந்த விளக்கப் படத்தில் அமெரிக்கா-ரஷ்யா ஆகியவை தலா 5 ஆயிரம் ஆயுதங்கள் வைத்து இருப்பதாக காட்டுகிறது. பிரான்ஸ் 300, சீனா -250, இங்கிலாந்து-225, இஸ்ரேல்-80 வட கொரியா மட்டும் 2006,2009 மறறும் 2013 இல் அணு சோதனைகளை நடத்தி உள்ளது. ஆனால் மக்கள் உண்மையில் உலகில் இவ்வளவு ஆயுதங்கள் தான் இருக்கும் என நம்பவில்லை என நான நினைக்கிறேன் என இத்திட்டத்தின் நிர்வாக இயக்குநர் ரேசசல் பிரான்சன் கூறி உள்ளார்.

# மாணவனின் விண்ணப்பம் நிராகரித்தது ஜேர்மனி

ஜேர்மனி பல்கலைக்கழகத்தில் கல்வி பயில விண்ணப்பித்த இந்திய மாணவர் ஒருவரின் விண்ணப்பம் இந்தியாவில் பாலியல்வல்லுறவுகள் அதிகம் நடப்பதாக கூறி நிராகரிக்கப்பட்டுள்ளது. ஜேர்மனியில் உள்ள லெய் ஜிக் பல்கலைக்கழகத்தில் படிப் பதற்காக இந்திய மாணவர் ஒருவர் விண்ணப்பித்திருந்தார்.

இந்நிலையில் அந்த விண்ணப்பத்தை நிராகரித்த பேராசிரியை, இந்தியாவில் நடைபெறும் பாலியல்வல்லுறவு சம்பவங்களை காரணமாக கூறியுள்ளது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்திய மாணவனுக்கு பேராசிரியை அன்னட் பெக்-சிக்கிங்கர் அனுப்பிய மின்னஞ்சலில், பல்கலைக்கழகத்தில் எந்த இந்திய மாணவரையும் நான் சேர்த்து கொள்ளமாட்டேன்.


இந்தியாவில் ஏராளமான பாலியல்வல்லுறவு சம்பவங்கள் நடப்பதாக கேள்விப்பட்டோம். இதனை நாங்கள் ஆதரிக்கமாட்டோம் என்றும் எங்களது பல்கலைக்கழகத்தில் பல மாணவிகள் படித்து வருகின்றனர் எனவும் தெரிவித்துள்ளார். இவ்விவகா ரம் சமூக வலைத்தளங்கள் மூலம் வேகமாகப் பரவியதையடுத்து, கடும் விமர்சனங்களும் கண்டனங்களும் எழுந்தன.'

இதையடுத்து இந்தியாவுக்கான ஜேர்மன் தூதர், அந்த பேராசிரியையின் கருத்துகளுக்கு ஆட்சேபம் தெரிவித்து கடிதம் அனுப்பினார்.

இதைத் தொடர்ந்து அந்த பேராசிரியை மன்னிப்புக்கோரியுளளார். அவர் மன்னிப்புக்கேட்டது தொடர்பாக ஜேர்மன் தூதரகத்தின் இணையத்தளத்திலும் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது

# தமிழர் பிரச்சினைபற்றி பேசவேண்டும் மோடி

## கருணாநிதி கோரிக்கை



இலங்கைக்கு செல்லும் பிரதமர் மோடி, இலங்கைத் தமிழர்களின் உரிமைகளைப் பற்றியும், தமிழக மீனவர்களின் எதிர்காலம் பற்றியும் விரிவாக எடுத்துரைக்க வேண்டும் " என, தி.மு.க., தலைவர் கருணாநிதி தெரிவித்துள்ளார்.

இலங்கைப்பிரதமர் ரணில் விக்ரமசிங்க அளித்த பேட்டியில், "தமிழக மீனவர்கள் எங்கள் கடற பகுதிக்குள் ஏன் வருகிறார்கள். ஒருவர் என் வீட்டில் கொள்ளை அடிக்க முயன்றால், நான் அவரை சுடலாம். சட்டம் அதை அனுமதிக்கிறது என, பேசியுள்ளார்.

மீனவர்கள் வங்கக் கடலில், மீன் பிடிக்கச் செல்லும் போது, இலங்கையின் எல்லை, இங்கிருந்து தான் ஆரம்பமாகிறது என, அறிவதற்கு எவ்விதமான தடயங்கள், அடையாளங்கள் இல்லாத நிலையில், அப்பாவித்தனமாக, மீன்களைப் பிடிக்கும் போது, இலங்கை கடற்படை, தமிழக மீனவர்களை தாக்கி கைது செய்கிற துயரமான நிலை் தொடர்கிறது என கருணாநிதி கூறியுள்ளார்.

# ஹெலிகொப்டர்கள் விபத்து; ஆர்ஜென்ரீனாவில் 10பேர் பலி




தென்அமெரிக்காவில் உள்ள அர்ஜென்ரீனாவில் பிரான்சை சேர்ந்த தனியார் டி.வி. பிரபலங்களை வைத்து ஒரு 'ஷோ' காட்சியை படம் பிடித் தது. அதன்படி ஹெலிகொப்ட ரில் பறக்கும் பிரபலங்கள் அதில பறந்தப் படியே தரையில் இருக்கும் தங்களது தங்குமிடம் மற்றும் உணவுப் பொருட்களை படம் பிடிக்க வேண்டும்.

அக்காட்சி ஆர்ஜென்ரீனாவில் வடமேற்கில் உள்ள லொரிரியோஜர் மாகாண மலைப்பகுதியில் நடந்தது. இதில் பிரான்ஸ் நாட்டின் விளையாட்டு வீரர்கள் உட்பட 8 பேர் கலந்து கொணடனர்.

இவர்கள் 2 ஹெலிகொப்டர்களில் பயணம் செய்தனர். இவர்களது ஹெலிகொப்டர்கள் வில்லா கேஸ்டெல்லி என்ற இடத்தில் சென்ற போது 2ஹெலி கொப்டர்களும் ஒன்றையொன்று மோதி விபத்துக்குள்ளாகின.

இதனால் தரையில் விழுந்து அவை நொருங்கின. இந்த விபத்தில் 2 விமானிகள் உட்பட 10 பேர் பலியாகினர். அவர்களில் 3 பேர் பிரான்சின் பிரபலமான விளையாட்டு வீரர்கள். புளோரன்ஸ் ஆர்தாயுட் பாய்மர படகு வீராங்கனை ஒருவரும் ஆவார். மற்றொருவர் காமில் முபாத். இவர் ஒலிம்பிக் நீச்சல் வீரர். இந்த விபத்துக்கான காரணம் தெரியவில்லை. மோசமான வானிலை காரணமாக இந்த விபத்து நடந்திருக்கலாம் என கருதப்படுகிறது.

# வடக்கு அதிவேகசாலை அளவுக்கு மிஞ்சிய மதிப்பீடு

## வெட்டிக்குறைத்தது அரசு

வடக்கு அதிவேக பாதை நிர்மரண பணிகளுக்கான ஒப்பந்தம் செய்துள்ள நிறுவனத்தின் மூலமே குறித்த ஒப்பந்தத்தை 60 மில்லியன் ரூபாவினால் குறைத்து ஆரம்பிக்க சம்மதம் தெரிவித்துள்ளதாக ஊடகத்துறை மற்றும் நர்டாளுமன்ற விவகார அமைச்சர் கயந்த கருணாதிலக தெரிவித்தார்.

நேற்று ஊடகத்துறை மற்றும் நாடாளுமன்ற விவ்கார அமைச்சில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

கடந்த அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்ட அபிவிருத்தி திட்டங்களை எவ்வித காரணங்களும் இன்றி தற்போதய அரசாங்கம் இடை நடுவே நிறுத்தி விடுவதாக எதிர்க்கட்சியினரால் முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்களில் எவ்வித உண்மையும் இல்லை. எனினும் சில அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் மீள் பரிசீலனை செய்ய வேண்டிய நிலை உருவாகியுள்ளது.

சில அபிவிருத்தித் திட்டங்கள் பெயர்ப் பலகைகளுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. அவ்வாறான வேலைத்திட்டங்கள் தொடர்பிலும் ஆராய்ந்து அவற்றினையும் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

நல்லாட்சியை ஏற்படுத்துவதற்காக தெரிவு செய்யப்பட்ட அரசாங்கம் என்ற வகையில் தற்போதய அரசர்ங்கம் மக்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றுவதில் முன்னின்று செயற்படும். அத்தோடு 100 நாள் செயற்திட்டத்தையும் செயற்படுத்த முழு மூச்சுடன் செயற்படும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

தற்போதய அரசாங்கம் அமெரிக்காவினால் வழி நடாத்தப்படும் பொம்மைகளாக இருப்பதாக எதிர்க்கட்சியினர் குற்றம் சுமத்துகின்றனர். எனினும் கடந்த அரசாங்கத்தின் மூலம் இலங்கை தொடர்பில் அமெரிக்கா கொண்டுள்ள அபிப்பிராயத்தை சாதகமாக்கிக் கொள்ள 15 கோடி ரூபாவினை ஐந்து பாரிய கம்பனிகளுக்கு செலுத்த நடவடிக்கை மேற்கொண்டது. இதன் மூலம் அவர்களே இரட்டை வேடம் போடுகின்றார்கள் என்பது தெளிவாகின்றது.

மட்டக்களப்பு மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளில் அமைக்கப்பட்டு வரும் மாளிகைகள் தொடர்பில் தகவல்கள் கசிந்து வரும் நிலையில் அதனை மறைப்பதற்காக சம்பந்தப்பட்ட தரப்பினர் பல்வேறு கருத்துக்களை முன்வைத்து வருகின்றனர்.

மேலும், ஒளடதங்கள் மூலம் 800வீதம் இலாபம் பெற்றுக் கொண்டு வந்த நிலைமையை, புதிய ஒளடத சட்ட மூலத்தின் மூலம் ஒளடத நிறுவனங்கள் இழக்கின்றது என்று தெரிவித்த அமைச்சர் தரமான ஒளடதங்கள் சலுகை விலையில் எதிர்வரும் காலங்களில் மக்கள் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் தெரிவித்தார்.

# உணவகத்தில் சீர்கேடு; நடவடிக்கை துரிதம்

வைத்தியசாலையின் உணவகத்தில் காணப்படும் சீர்கேடுகள் தொடர்பில் கிடைக்கப்பட்டுள்ள முறைப்பாடுகளையடுத்து அதன் ஒப்பந்தத்தை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக யாழ். போதனாவைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் டாக்டர் ஶ்ரீ பவானந்தராஜா தெரிவித்தார்.

இது குறித்து செய்தியாளர்களுக்கு பதிலளிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அண்மைக் காலமாக மிகுதிப்பணம் கொடுப்பது, மற்றும் உணவு கையாள்கை, என்பவற்றுடன் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பில் எமக்கு முறைப்பாடுகள் கிடைக்கப்பட்டுள்ளன.

இன்றும் வைத்தியசாலை ஊழியர் ஒருவரின் முறைப்பாடும் வந்துள்ளது. எனவே இது விடயம் தொடர்பில் விரைவில் செய்யப்படுவதுடன் உணவகத்திற்கான புதிய கேள்வி கோரல் அறிவிக்கப்பட்டு உணவகத்தின் செயற்பாட்டை சீர்செய்ய தாம் உத்தேசித்திருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# வவுனியாவில் போராட்டம் செய்ய முஸ்தீபு

நரேந்திர மோடி எதிர்வரும் வெள்ளிக்கிழமை இலங்கை வருகின்ற நிலையில் போரால் பாதிப்புற்ற மக்களுக்காக இந்திய அரசின் அனுசரணையுடன் முன்னெடுக்கப்பட்டு வரும் வீட்டுத்திட்டத்தில் இடம்பெற்ற முறைகேடுகள், அநீதிகளைக் கண்டித்தும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நியாயம் வழங்கக்கோரியும் நாளை வவுனியாவில் மாபெரும் கவனயீர்ப்புப் பேரணி இடம்பெறவுள்ளது.

மீளக்குடியமர்ந்தோர் நலன் பேணும் அமைப்பும், வவுனியா மாவட்ட பிரஜைக்ள் குழுவும் இணைந்து இந்தக் கவனயீர்ப்புப் பேரணியை ஏற்பாடு செய்துள்ளன. இந்தக் கவனயீர்ப்புப் பேரணி நாளை காலை 9 மணிக்கு வவுனியா நகரச்பை மண்டபத்தில் ஆரம்பித்து மாவட்ட செயலகத்தைச் சென்றடையுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கவனயீர்ப்புப் பேரணி குறித்து மீளக்குடியமர்ந்தோர் நலன்பேணும் அமைப்பு விடுத்துள்ள அறிக்கையில், 'போரால் பாதிப்புற்று - பல்வேறு இடப்பெயர்வுகளைச் சந்தித்து - பல்வேறு அழுத்தங்களின் மூலம் மீளக்குடியேறிய மக்களுக்குத் தமது காணிகளில் சொந்தவீடு கட்டிக்கொண்டு வாழ்வாதாரத்தை மீளக் கட்டியெழுப்புவதற்காக இந்திய அரசு 50ஆயிரம் வீடுகளைக் கட்டிக்கொடுக்க முன்வந்தது. ஆரம்பத்தில் இறுதியாக நடைபெற்ற போரில் பாதிக்கப்பட்டு மெனிக்பாம் இடைத்தங்கல் முகாமில் தங்கியுள்ள மக்களுக்கே அந்த வீடுகள் கட்டிக்கொடுக்கப்படும் என்றும் இந்திய அரசு அறிவித்திருந்தது.

மேலும் இந்த நிலையில் முன்னைய கால மகிந்த அரசு தனது இராஜதந்திர நடவடிக்கைகளின் மூலம் அதனை நாடு முழுவதிலுமுள்ள பகுதிகளுக்கும் பகிர்ந்தளிக்க இந்திய அரசை இணங்கவைத்தது. இதன் மூலம் இலங்கை அரசு வன்னி நிலப்பரப்பில் ஏற்பட்ட சேதத்தைக் குறைத்துக் காட்ட முயற்சித்தது. அவ்வாறு வழங்கப்பட்ட வீடுகளும் பாதிக்கப்பட்ட மக்களைச் சென்றடையாமல் அரசியல் தலையீடுகளின் மூலம் தடையேற்படுத்தப்பட்டுள்ளது. ஆகவே இந்த நிலைமை தொடர்வதற்கு நாம் தொடர்ந்து இடமளிக்கமுடியாதென தெரிவிக்கப்பட்டுள்ளது.

### ஜெயக்குமாரி..

இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. அவருடைய கணவனையும் சேர்த்து இந்தப் பெண் குடும்பமாகக் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்தார். ஆறு பெண்களைத் தவிர இரண்டு ஆண்களும் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டிருக்கின்றார்கள்

பாலேந்திரன் ஜெயக்குமாரி, மகாலிங்கம் பத்மாவதி, ரவீந்திரன் மதனி, லோகநாதன் மகேஸ்வரி, நீகன் சுபானியும் அவருடைய 16 மாத வயதுடைய கைக்குழந்தை, சசிகரன் தங்கமலர் ஆகிய 6 பெண்களும், கிருஸ்ணராஜா சிறிதரன், அருணாச்சலம் ஆகிய இரண்டு ஆண்களுமாக மொத்தம் 8 பேர் இவ்வாறு பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான வழக்கு எதிர்வரும் யூலை மாதம் 7 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

பயங்கரவாத மீளுருவாக்கத்திற்குத் துணையாக இருந்து செயற்பட்டிருந்தார் என்ற சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த ஜெயக்குமாரி பாலேந்திரன் கொழும்பு மஜிஸ்ரேட் நீதிமன்றத்தினால் நேற்று பிண்ணயில் செல்ல அனுமதிக்கப்பட்டிருக்கின்றார்.

இரண்டு இலட்சம் ரூபா சரீரப் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ள இவர், தான் வசிக்கும் பிரதேசத்தில் உள்ள பொலிஸ் நிலையத்தில் மாதம் ஒரு தடவை சென்று கையெழுத்திட வேண்டும் என்ற நிபந்தனையும் நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்டுள்ளது,

இவருடன் இதே சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டிருந்த பத்மாவதி மகாலிங்கம் என்ற 64 வயதுடைய பெண்மணியும் இதே நிபந்தனைகளின் கீழ் நீதிமன்றத்தினால் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார்.

### ஐ.நா...

மைக்கல் பெலனை சந்தித்தபோதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அச்சம், சந்தேகமில்லாது மக்கள் வாழ்வதற்கான ஒரு சூழலை உருவாக்குவதற்காகவே இலங்கை மக்கள் தன்னை தெரிவு செய்திருப்பதாகத் தெரிவித்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஏழை, பணக்காரர்களுக்கிடையிலான வருமான இடைவெளியையும் குறைக்கவுள்ளதாகவும் தெரிவித்தார்.

சர்வதேச மன்றங்களிலும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையிலும் பிரித்தானியாவின் உதவியை இலங்கை எதிர்பார்க்கிறது. நாட்டின் மிகப் பெரும் சவாலாக மாறியிருக்கும் போதைப்பொருள தொல்லையை ஒழித்துக் கட்டவும் பிரித்தானியாவின் ஒத்துழைப்பை தாம் எதிர்பார்ப்பதாகவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் தற்போதைய நிலைமைகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது. பயங்கரவாதம் தோற்கடிக்கப்பட்டு ஐந்து வருடங்கள் கழிந்துள்ள போதிலும் வடக்கு, தெற்கு மக்களிடையே நல்லெண்ணமும் நட்புறவும் முன்னேற்றமடையவில்லை. எனவே எல்லா சமூகங்களுக்கு மத்தியிலும் புரிந்துணர்வு, நம்பிக்கை மற்றும் நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவது தற்போதய அரசாங்கத்தின் நோக்கமாகும் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

இங்கு கருத்துத் தெரிவித்த பிரித்தானிய பாதுகாப்பு செயலாளர் மைக்கல் பெலன், போதைப்பொருள் தொல்லையை ஒழித்துக் கட்ட இலங்கைக்கு உதவ தனது நாடு தயாராகவுள்ளதாகக் குறிப்பிடடதுடன் போதைப்பொருள் கடத்தலை முறியடிக்கும் வகையில் தேவையான நடவடிக்கைகளை எடுக்கவும் முடியும் எனத் தெரிவித்தார்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்களின் நலன்களுக்காக ஜனாதிபதியினால் முன்னெடுக்கப்பட்டுவரும் நிகழ்ச்சித்திட்டங்களையும் அவர் பாராட்டினார். அமைதி காக்கும் நடவடிக்கைகளில் இலங்கை இராணுவ அதிகாரிகளை ஈடுபடுத்துமாறும் அவர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கேட்டுக்கொண்டார்.

இந்தியா மற்றும் சீனாவுடனான இலங்கையின் உறவுகள் குறித்தும் அவர் வினவினார். இந்தியா இலங்கையின் அயல்நாடு எனக் குறிப்பிட்ட ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எமது நாட்டுக்கு சீனா ஒரு சிறந்த நண்பன் என்றும் தெரிவித்தார்.

### படை..

அதிகாலை முகாமில் இருந்த புளியமரத்தில் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளார். சடலம் தற்போது, பலாலி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. பலாலி இராணுவ முகாமில் 10ஆவது பொறியியல் பிரிவில் குறித்த சிப்பாய் கடமையாற்றி வந்துள்ளார். (25)

### தப்பி...

தெரிவித்துள்ளார்.

தற்போது ஒரு நாளுக்கு 10 முதல் 15 பேர் வரையில் இவ்வாறு சொல்லாமலேயே வெளியேறுகின்றனர். இதனைத் தடுக்க முடியாதுள்ளது.

சிலர் பொலிஸ் விசாரணைகளுக்கு பயந்தும் சிகிச்சையில் அசண்டையீனத்தாலும் இங்கிருந்து ஓடிவிடுகின்றனர். இதனால் தினமும் தவறியவர்களின் பெயர்ப்பட்டியல் வைத்தியசாலை பொலிஸ் பிரிவினருக்கு அனுப்பப்படுவதுடன் பதிவு செய்யப்பட்ட விலாசத்திற்கு அவர்களின் வெளியேற்றத்தை உறுதிப்படுத்துமாறும் நாம் பொலிஸ் மூலம் அறிவிக்கின்றோம். இவ்வாறு சில நோயாளர்கள் செயற்படுவதால் தமக்கு பெரும் இடையூறுகள் ஏற்படுவதாகவும் செய்தியாளர்களது. கேள்விக்கு பதிலளிகிகையில் அவர் இதனைத் தெரிவித்தார். (இ)

### மத்திய...

எப்படி? என்று சுனில் ஹந்துநெத்தி கேள்வி எழுப்பியுள்ளார்.

எனவே இது குறித்து விசாரணை நடத்தப்பட வேண்டும். வேறு நாட்டில் இவ்வாறு நடந்தால் துறைக்குப் பொறுப்பான அமைச்சர் பொறுப்புடன் தலையீடு செய்வார். சரி என்றால் நாட்டின் நிதி அமைச்சர் பதவி விலக வேண்டும். ஆனால் நாம் அதனை எதிர்பார்க்கவில்லை. காரணம் நமது நாட்டில் அவ்வாறு நடக்காது என்று நாம் அறிந்துள்ளோம். ஆனால் விசாரணை முடியும்வரை மத்திய வங்கி ஆளுநர் பதவி விலக வேண்டும் என சுனில் ஹந்துநெத்தி தெரிவித்துள்ளார்.

### துப்பாக்கிச்...

ரராஜ் (வயது-42) என்பவரே உயிரிழந்தவராவார்.

ஸ்தலத்துக்கு விரைந்துள்ள ஏறாவூர் பொலிஸ் பொறுப்பதிகாரி தீப்தி விஜயவிக்கிரம தலைமையிலான குழுவினர் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர்.

### மாணவர்களின்...

இன்றைய இளம் தலைமுறையினர் கல்வியைப் பெறவேண்டும் என்ற ஆர்வத்தோடும் ஏக்கத்தோடும் வாழ்ந்துகொண்டிருக்கின்றார்கள் ஆனால் கிராமப்புறங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ள ஆளணிவளப் புறக்கணிப்பானது அவர்களின் மனங்களில் சோர்வை ஏற்படுத்தி வருகின்றது. ஆசிரியர்களின் வருகைக்காக ஏங்கிக் கொண்டிருக்கும் மாணவர்களின் மனங்கள் தொடர்ந்தும் ஏமாற்றங்களையே எதிர்கொள்கின்றன. கல்விப் பசியோடு தவித்துக் கொண்டிருக்கும் கிர்ாமப்புற பாடசாலை மாணவர்களின் உள்ளக் குமுறல்கள் வடக்குமாகாணத்தில் கல்விக்கு பொறுப்பான அரசியல்வாதிகளினதும் ஏனையவர்களினதும் காதுகளுக்கு இன்று வரை எட்டாதிருப்பது வேதனைக்குரியது.

இந்த ஆளணிவளப் புறக்கணிப்பானது வன்னிப் பெருநிலப் பரப்பில் உள்ள கிராமங்களுக்கு மட்டுமன்றி ஒட்டுமொத்த கிராமப் புற பாடசாலைகளையும் இலக்குவைத்து மேற்கொள்ளப்படுகின்றது அதற்குப் பலியாகிக்கொண்டிருக்கும் மாணவர்களுள் ஆளியவளை பாடசாலை மாணவர்களும் உள்ளடங்குகின்றனர். .என்றார்.

நாடாளுமன்ற உறுப்பினரும், குழுக்களின் பிரதித்தலைவருமான மு.சந்திரகுமாரால் ஆழியவளை கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கங்கத்தின் தளபாட கொள்வனவிற்காக ஒதுக்கப்பட்ட சுமார் அறுபதாயிரம் ரூபா நிதியிலிருந்து கொள்வனவு செய்த தளபாடங்களை நேற்று அச்சங்கத்தின் பாவனைக்காக கையளித்த நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்த்திரி அலன்ரின் அவர்களின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து ஆழியவளை அருனோதயா விளையாட்டுக் கழகத்திற்கும் ஆழியவளை சக்திவேல் விளையாட்டு கழகத்திற்கும் கொள்வனவு செய்யப்பட்ட விளையாட்டு உபகரணங்கள் மற்றும் பாதணிகளையும் வழங்கினார்.

நேற்று பிற்பகல் 3.30 மணிக்கு ஆழியவளை பொது நோக்கு மண்டபத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் ஈ.பி.டி.பி.யின் வடமராட்சி அமைப்பாளரும் பிரதேசசபை உறுப்பினருமான ஶ்ரீரங்கேஸ்வரன் பிரதேச செயலர் திருலிங்கநாதன் பச்சிலைப்பள்ளி பிரதேசசபை உறுப்பினர் அன்ரன் அன்பழகன் ஆழியவளை கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கத்தலைவர் தங்கத்துரை மற்றும் விளையாட்டு கழகங்களின் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களும் மாதர்கிராம அபிவிருத்திச்சங்கங்களின் பிரதிநிதிகளும் மாணவர்களும் பொது மக்களும் கலந்துகொண்டிருந்தனர்.

# கண்ணிவெடி அகற்றல் பூர்த்தி வளலாயில் மீள்குடியமர்வு

(யாழ்ப்பாணம்)

வளலாய் பகுதியில் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டுள்ளதை உறுதிப்படுத்தி ஹலோ ரஸ்ட் நிறுவனம் அறிக்கை சமர்ப்பித்துள்ளதாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம அருமைநாயகம் நேற்று தெரிவித்தார்.

வலி.வடக்கு பகுதியில் மீள்குடியேற்றம் அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில், வளலாய் பகுதியில் 6 கிராம சேவையாளர் பிரிவிற்குள் மீள்குடியேற்றம் விரைவில் நடைபெறவுள்ளதென்றும் அரசாங்க அதிபர் மேலும் கூறினார்.


அண்மையில், மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம். சுவாமிநாதன் யாழிற்கு விஜயம் மேற்கொண்டிருந்த வேளையில், வடமாகாண ஆளுநர் அலுவலகத்தில் நடைபெற்ற கூட்டத்தின் போது, மீள்குடியேற்றத்தினை ஆராய்வதற்கான குழு ஒன்றினை உருவாக்கியிருந்தார்.

அந்தக் குழுவில், யாழ். மாவட்ட அரசாங்க அதிபரும் உள்ளடக்கப்பட்ட நிலையில், குறித்த வளலாய் பகுதியில் மீள்குடியேற்றம் செய்வதற்கான ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் பரிசீலணை செய்யப்பட்டன. அதன்பிரகாரம், ஹலோ ரஸ்ட் நிறுவனத்தினரிடம் கண்ணிவெடி அகற்றப்பட்டுள்ளதா, இல் லையா என பரிசோதனை செய்து தருமாறு பணித்திருந்தார். இந் நிலையில், த ஹலோ ரஸ்ட் நிறுவனம் கண்ணி வெடி அகற்றப்பட்டுள்ள தென்றும், அங்கு மக்களை மீள் குடியேற்றம் செய்ய முடியுமென் றும் அறிக்கையினை நேற்று முன்தினம் சமர்ப்பித்துள்ளது.

அதனடிப்படையில், இன்று வளலாய் பகுதியில் 6 கிராம சேவையாளர் பிரிவுகளில் மீள்குடியேற்றம் செய்வதற்கான செயலணிக் கூட்டம் நடைபெறவுள்ளது.

அந்தக் கூட்டத்தில் வளலாய் பகுதியில் மக்களை மீள்குடியேற்றம் செய்வது குறித்து இறுதித் தீர்மானம் எடுக்கப்படவுள்ளதென்றும் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் மேலும் கூறினார். (25)

# தீப்பற்றியது ரங்காவின் ஜீப்



(கொழும்பு)

நாடாளுமன்ற உறுப்பினர் ஜே.சிறீரங்கா பயணித்த ஜீப் ரக வண்டி , நாவுல நாலந்தவுக்கு அண்மையில் நேற்று முன்தினம் தீப்பற்றி கொண்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வாகனத்தை செலுத்தி சென்ற நாடாளுமன்ற உறுப்பினரின் சாரதி மற்றும் பாதுகாப்பு உத்தியோகஸ்தர்கள் இருவரும் எவ்விதமான காயங்களும் இன்றி காப்பாற்றப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# பரீட்சார்த்த ரயில்சேவை தலைமன்னார்வரை இன்று




மடுவிலிருந்து தலைமன்னார் பியர் வரைக்கும் பரீட்சார்த்த ரயில் சேவை இன்று முற்பகல் 11.30 மணியளவில் இடம்பெறவுள்ளது.

இந்தப் பரீட்சார்த்த ரயில் சேவையை மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் எஸ்.வை.எம். தேசப்பிரிய, மாவட்ட செயலக அதிகாரிகள் உட்பட பாதுகாப்பு உயர் அதிகாரிகளும் இணைந்து ஆரம்பித்துவைக்கவுள்ளனர். எதிர்வரும் 14ஆம் திகதி இந்திய பிரதமர் நரேந்திரமோடி தலைமன்னாருக்கான ரயில் சேவையை ஆரம்பித்துவைப்பார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது

இந்த நிலையில் இன்று பரீட்சார்த்த ரயில் சேவை நடத்தப்படவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதனை முன்னிட்டு தலைமன்னார், பேசாலை, தோட்டவெளி, மன்னார், சிறுநாவற்குளம் ஆகிய ரயில் நிலையங்களை அழகு படுத்தும் பணிகள் நேற்று நடைபெற்றன.

# ஆசிரிய ஆலோசகர்கள் இன்று போராட்டம்

அகில இலங்கை ஆசிரிய ஆலோசகர் தொழிற்சங்கம் ஆசிரிய ஆலோசகர் சேவையினை விரைவில் நடைமுறைப் படுத்தக்கோரிபாரிய ஆர்ப்பாட்டப்பேரணியொன்றை ஏற்பாடு செய்துள்ளதாக மேற்படி சங்கச் செயலாளர் ஆர்.எம்.ரி.பந்துல கடிதம் மூலம் நாட்டிலுள்ள சகல வலயக்கல்விப் பணிமனையிலும் சேவையாற்றும் ஆசிரிய ஆலோசகர்களிற்கு அறிவித்துள்ளார்.

இப்பேரணி இன்று காலை 8.30 மணிக்கு பத்திரமுல்ல, பெலவத்த புத்ததாச விளையாட்டுத்திடலிற்கு அருகாமையிலிருந்து தொடங்கி, இசுருபாயவிலுள்ள கல்வியமைச்சு நோக்கி நடைபெறவுள்ளது.

இப்பேரணியில் நாட்டின் வட,கிழக்குப் பகுதியிலுள்ள சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இப்பேரணியில் கலந்து கொள்ள முடியாத ஆசிரிய ஆலோசகர்கள் அன்றையதினம் கடமைக்குச் செல்லாது சுகவீன விடுமுறையில் இருக்குமாறும் சங்கம் அறிவித்துள்ளது. (06)

# கையில் கிடைத்தது இடமாற்றக் கடிதம்

வன்னியில் இருந்து இடமாற்றம் கோரிப் போராடிய ஆசிரியர்களின் போராட்டம் வெற்றியளித்துள்ளது இவர்களுக்கான இடமாற்றக் கடிதங்கள் நேற்று மாலை வழங்கப்பட்டுள்ளது.

வன்னியில் அதிகஷ்ட, கஷ்ட பிரதேசங்களான வவுனியா வடக்கு, வவுனியா தெற்கு, மன்னார், துணுக்காய், மடு முதலான கல்வி வலயங்களிலிருந்தும் வடமராட்சி கிழக்கு தீவகம் ஆகிய வலயங்களிலிருந்தும் விடுவிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு உரிய காலத்தில் இடமாற்றம் வழங்கப்படாததை கண்டித்து நேற்று முன்தினம் மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் காரியாலயத்தின் முன் நடாத்தப்பட்ட போராட்டம் வெற்றியளித்துள்ளதாக சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த ஆசிரியர்களின் போராட்டம் காரணமாக 10.03.2015 திகதியிடப்பட்ட கடிதங்கள் வடமாகாண கல்விப் பணிப்பாளரினால் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

நேற்று வடமாகாண கல்வித் திணைக்களத்தின் முன் கூடியிருந்த மேற்படி ஆசிரியர்கள் தமது இடமாற்றக் கடிதம் வழங்குமாறு காத்திருக்கப்போவதாக தெரிவித்து திணைக்கள வாயிலில் கூடியிருந்தனர்.

இதனை அடுத்தே மாகாணக் கல்விப் பணிப்பாளர் நேற்று மாலை அவர்களுக்கான இடமாற்றுக் கடிதத்தை வழங்கியதாக தெரிவித்தார். (06)

# இனங்களுக்கிடையிலான பதற்றத்தை தணிக்க அமெரிக்கா உதவும்

இலங்கையில இனங்களுக்கு இடையிலான பதற்றத்தை தணிப்பதற்கும், ஜனநாயகத்தை நிலைநாட்டுவதற்கும் அமெரிக்கா உதவி வழங்கும் என அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் பிராந்திய விவகார பணிப்பாளர் நெய்ல் க்ரோமாஸ் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைக் கூறினார்.

நீண்டகால சர்வாதிகார ஆட்சி தூக்கியெறியப்பட்டு, தற்போது ஆட்சியைக் கைப்பற்றியுள்ள புதிய அரசாங்கத்தினால் சாதகமான முன்னேற்றங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந்த நிலையில அமெரிக்காவினால் முடிமான அனைத்து உதவிகளும் இலங்கைக்கு வழங்கப்படும்.

குறிப்பாக ஜனநாயகத்தை மீளக்கட்டியெழுப்புதல், இனங்களுக்கு இடையிலான பதற்றத்தை இல்லாமல் போகச் செய்தல் போன்ற விடயங்களில் அனைத்துவித ஒத்துழைப்பும் வழங்கத் தயார் என்று அவர் தெரிவித்தார்.


## விநியோகஸ்தர்கள் தேவை

**போத்தல்களில் அடைக்கப்பட்ட குடிநீர்விநியோகிஸ்தர்கள் தேவை**



*யாழ்ப்பாணம்*
*கிளிநொச்சி*
*மன்னார்*
*முல்லைத்தீவு*
*வவுனியா*
*திருகோணமலை*
*மட்டக்களப்பு*

ஆகிய மாவட்டங்களுக்கு குடிநீர் போத்தல் விநியோகத்தர்கள் தேவை விநியோக உரிமையை மாவட்ட ரீதியாகவோ குறிப்பிட்ட பிரதேச ரீதியாகவோ பெற்றுக் கொள்ளலாம.

வாகனவசதி, களஞ்சியவசதி, காசுபிணை உள்ள தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பம் கோரப்படுகிறது. விபரங்களுக்கு கடிதம்மூலம் கீழ்கண்ட முகவரிக்கு தொடர்பு கொள்ளலாம்.[3 நாட்களுக்குள்]

**எஸ். கிறிஸ்தோபர்**
**33 குருசோ வீதி**
**யாழ்ப்பாணம்**


# வர்த்தகக் கண்காட்சி

தென்மராட்சி கல்விவலயத்தில் கற்கும் வர்த்தகத்துறை மாணவர்களாலும் அத்துறை சார்ந்த ஆசிரியர்களாலும் "வாணிபம் பேண் வளம் காண்" எனும் தொனிப்பொருளிலான 'தென் அருவி 2015' எனும் வர்த்தகக் கண்காட்சி இம்மாதம் 13மற்றும் 14ம் திகதிகளில் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் நடைபெற உள்ளது.

இக்கண்காட்சியை முதல் நாளான 13ஆம்திகதிபாடசாலை மாணவர்களும் மறு நாளான 14ஆம்திகதி பொதுமக்களும் காலை 10மணி தொடக்கம் பி.ப. 4மணி வரை பார்த்து மகிழலாம். தென்மராட்சி வலயக்கல்விப்பணிப்பாளர் சு.கிருஸ்ணகுமார் தலைமையில் நடைபெறஉள்ள இந்நிகழ்வில் முதன்மைவிருந்தினராக வடமாகாண சபை அவைத்தலைவர் சீ.வீ. கே.சிவஞானம் கலந்து சிறப்பிக்க உள்ளார்..

இக்கண்காட்சி யில்உள்ளூர் உற்பத்திநிறுவனங்களின் வெளியீட்டுப் பொருட்கள்' வணிக அமைப்புகளின் வெளியீடுகள்' நிதிநிறுவனங்களின் செயற்பாடுகள்' தென்மராட்சியின் எதிர்கால வணிகவாய்ப்புகளுக்கான உத்திகள்' மாணவர்களை வணிக முயற்சியில் ஈடுபாடு கொள்ளவைப்பதற்கான செயற் பாடுகள் ஆகியன பல்பகுதி காட்சி அறைகளாக வகுக்கப் பட்டு நடாத்தப் படஉள்ளது. அதே வேளை மற்று மொரு புறத்தில் இவ் வணிக செயற்பாடுகள் தொடர்பான கருத்துக்கள் குவிந்த நாடக ஆற்று கைகளும் மாணவர்களால் நடாத்தப் பட உள்ளது.

வலயக் கல்வித்திணைக்களத்தின் மேற்பார்வையிலும் வேல்ட்விசன் நிறுவனத்தினதும் ஏனைய வணிக நிதி நிறுவனங்களதும் தனிநபர்களினதும் அனுசரணையில் இச்செயற்பாடு நடைபெற உள்ளது (11)

# தேசிய நிறைவேற்று சபை இன்று கூடுகிறது

(கொழும்பு)

ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரங்களை மட்டுப்படுத்தல், அரசமைப்பின் 17ஆவது திருத்தச்சட்டத்தை நடைமுறைப்படுத்தல் உட்பட முக்கிய சில சரத்துகளடங்கிய அரசமைப்பின் 19ஆவது திருத்தச் சட்டமூலம் தொடர்பில் இன்று இறுதி முடிவு எடுக்கப்படவுள்ளது.

அமைச்சரவைக்கும் மேலான சபையான தேசிய நிறைவேற்றுச் சபையின் வாராந்தக் கூட்டம் இன்று காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது. இந்தக் கூட்டத்திலேயே மேற்படி விடயம் தொடர்பாக விவாதிக்கப்பட்டு, இறுதிமுடிவு எடுக்கப்படவுள்ளது. பிரதமர் ரணில் விக்ரமசிங்கவால் அரசமைப்பின் 19ஆவது திருத்தச் சட்டவரைவு ஜனாதிபதிக்கும் கட்சித் தலைவர்களுக்கும் வழங்கப் பட்டுள்ளது. நாடாளுமன்றத்தில் கடந்தவாரம் கூடிய அரசமைப்பு மறுசீரமைப்புக் குழுவும் இதற்கு ஒப்புதல் வழங்கியுள்ளது.

தேசிய நிறைவேற்றுச் சபையில் இதற்கு அனுமதி கிடைத்ததும், அது எதிர்வரும் 24ஆம் திகதி நாடாளுமன்றில் அவசர சட்டமூலமாகச் சமர்ப்பிக்கப்பட்டு நிறைவேற்றப்படவுள்ளது. தேர்தல் முறைமையில் மாற்றம், அரசமைப்பின் 18 ஆவது திருத்தச்சட்டத்தை இரத்து செய்தல் ஆகிய விடயங்களும் புதிய சட்டவரைவில் உள்ளடக்கப்படவுள்ளது. 17ஆவது அரசமைப்பின்படி, புதிய சில ஆணைக்குழுக்களும் அமைக்கப்படவுள்ளன.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2015 மார்ச் 11 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.